RURAL RECONSTRUCTION

(IN TAMIL)

T10265

R003G01

265

A. MUTHIAH, M.A.

கிராமச் சீர்திருத்தம்

கிராமச் சீர்திருத்தம்

ஆசிரியர்:

A. முத்தையா, M. A.,

பொருளாதார உதவிப் பேராசிரியர்,

(*Assistant Professor of Economics*)

பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,

ஜார்ஜ் டவுன், சென்னை.

1937

பதிப்புரிமை]

[விலை ரூ. 1

முகவுரை

நம் தாய் நாட்டிலே கிராமச் சீர் திருத்தமானது, மிகவும் விரைந்துசெய்ய வேண்டுவதொரு காரியமாகும். மேல் நாடுகளில் நாடோறும் வளர்ந்துவரும் பொருளாதாரக் கருத்துகளையும், நமது நாட்டு நிலைமையையும், வழக்காறுகளையும் தழுவிக் கிராமங்களை எப்படிச் சீர் திருத்தலாமென்பதை விளக்கி, செந்தமிழ் மொழியாம் நம் சொந்த மொழியில் இந்நூல் எழுதப்பட்டது. இதனைத் தமிழுலகம் பெரிதும் ஆதரிக்குமென எண்ணுகிறேன்.

"குரு விலாஸ்"
சிங்கார முதலியார் தெரு
தியாகராய நகர், சென்னை
A. முத்தையா

பொருளடக்கம்

பொருள்		பக்கம்
1.	இந்திய நாடு	1
2.	கிராமங்களின் வரலாறு	11
3.	ஊர்ச் சீர்திருத்தம்	32
4.	கிராம வாழ்க்கை	40
5.	கிராமக் கல்வி	48
6.	கிராமப் பெண்கள்	60
7.	கிராமச் சுகாதாரம்	70
8.	கிராம விவசாயம்	81
9.	கிராம வேலையாள்	94
10.	கிராமச் சிறு கைத்தொழில்	105
11.	கிராமக் கூட்டுறவு	117
12.	பொருள் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம்	128
13.	கிராமச் சீர்திருத்த முயற்சிகள் ...	137
14.	கிராம வேலைத் திட்டம்	149
15.	அரசின் கடமை	157
16.	முடிபுரை	170

நீர் நில வளமிக நிறைந்த திங்நாடு

[முகப்பு]

கிராமச் சீர்திருத்தம்

1. இந்திய நாடு

"தோட்டத்தி லேமரக் கூட்டத்தி லேகனி
யீட்டத்தி லேபயி ரூட்டத்திலே
தேட்டத்தி லேயடங் காத நிதியின்
சிறப்பினி லேஉயர் நாடு." —பாரதியார்

இந்திய நாடு நீர் வளம், நில வளம் மிகச் சிறந்த நாடு; மிகப் பரந்த இடத்தைத் தன்னுள் அடக்கி விளங்கும் நாடு; ஐந்திணை நிலங்களும் செறிந்த நாடு. இந்நாட்டில் மிக அதிக உஷ்ணம் முதல் மிகக் குளிர்ந்த நிலை வரையில் பல திறப்பட்ட வெப்பதட்ப நிலையி லுள்ள பகுதிகள் இருக்கின்றன. ஆதலால், எல்லாவித்ச் சீதோஷ்ண நிலையிலும் உண்டாகக் கூடிய விளை பொருள்கள் அத்தனையும் இந்நாட்டில் பெறப்படுகின்றன.

உலகத்தின் மொத்த நிலப் பரப்புச் சுமார் 51 மில்லியன் சதுர மைல் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. அதில் இந்தியாவின் விஸ்தீரணம் 1·8 மில்லியன்; அதாவது, உலகத்தில்

நூற்றில் 3·5 பங்கு இந்திய நாட்டின் நிலப் பரப்பாகும். பிரிட்டிஷ் இந்தியாவின் பரப்பு 1,096,171 சதுர மைல்கள்; சுதேச மன்னர் நாட்டின் பரப்பு 712,508 சதுர மைல்கள். 1931-ஆம் ஆண்டு எடுத்த சன சங்கியையின் படி உலக மக்கள் 2,025 மில்லியன்கள்; அவர்களில் இந்தியர் 353 மில்லியன்கள்; உலக மக்களில் நூற்றுக்கு 17 பேர் இந்தியராவர். மொத்த இந்திய மக்கள் 352,837,778 பேரில், 271,526,933 பேர் பிரிட்டிஷ் இந்தியாவிலும், 81,310,845 பேர் சுதேச அரசர் நாடுகளிலும் வசிக்கின்றனர். நிலப் பரப்பில் இந்தியா தேசமானது உலகத்துள்ள நாடுகளில் ஏழாவதாய் இருக்கிறது; சனத் தொகையில் சைனுவுக்கு அடுத்தபடியாய் இரண்டாவது நாடாய் இருக்கிறது.

1931-ஆம் ஆண்டு இந்திய சன சங்கியை அறிக்கையின் முதல் புத்தகம், முதல் பகுதியில் கூறப்பட்டிருப்பதாவது, "கடந்த பத்து வருஷங்களில் ஜனத்தொகையின் அதிகரிப்பு 34 மில்லியன்கள் ஆகும். இப்படி அதிகமாக உண்டான மக்களின் எண்ணும், பிரான்ஸ் அல்லது இட்டாலி தேசங்களின் முழுச் சனத் தொகையும் கிட்டத்தட்டச் சரியாய் இருக்கும். ஐரோப்பாவின் முக்கியத் தேசங்களான

போலந்து, ஸ்பெயின் முதலியவைகளில் நம் நாட்டில் பத்தாண்டுகளில் அதிகப்படியான அத்தனை மக்கள் கூட இல்லை. சமீப காலத்தில் சைன தேயத்தில் எடுத்த சனக்கணக்கின்படி நோக்கின், சைன சனத்தொகையைவிட இந்திய சனத்தொகை அதிகமாகக் காணப்படுகிறது. எனவே, சன மிகுதியுள்ள நாடுகளில் இந்தியாவே முதன்மையாய் இருக்கிறது. பல விஷயங்களையுங் கவனிக்குமிடத்து இவ்விதச் சன அதிகரிப்பு, சந்தோஷத்தைத் தரத்தக்கதன்று; கவலைக்கிடமானதே," என்பதாம்.

இந்தியாவில் மக்கள் எண் அதிகரித்துக் கொண்டே போகிறது. அதுவும் மிகத்துரிதமாகச் செல்லுகிறது. 1881-ஆம் ஆண்டு முதல் 1931-ஆம் ஆண்டு வரையில், இடைப்பட்ட ஐம்பது ஆண்டுகளில் நூற்றுக்கு 39 வீதம் 100 மில்லியன் சனங்கள் இந்நாட்டில் அதிகரித்திருக்கிறார்கள். பொதுவாகச் சன எண் அதிகரிப்பின், அதற்காக வருந்த வேண்டுவதில்லை. நம் நாட்டில் காணப்படும் ஒரு பெருங்குறைபாடு யாதெனின், சனத் தொகை விருத்தியாயிருக்கும் அத்துணை விசேஷமாக மற்றைப் பொருளுற்பத்தி விருத்தி செய்யப்படாமையே. எனவே, மக்கள் மிடியினாலும், நோயாலும், வேலையின்மையாலும் வருந்த நேருகிறது.

இந்தியாவில் சதுர மைல் ஒன்றுக்கு 195 பேர் வீதம் வசிக்கின்றனர். பிரிட்டிஷ் இந்தியாவில் மாத்திரம் சராசரி சதுர மைலுக்கு 248 பேர் வீதமும், இந்து சமஸ்தானங்களில் 115 பேர் வீதமும் மாந்தர் குடி இருக்கின்றனர். செழிப்பான பிரதேசங்களில் மக்கட் செறிவு மிக அதிகம்; உதாரணமாக வங்காள (Bengal) நாட்டில் சதுர மைலுக்கு 646 பேரும், அயோத்தி (Oudh) நாட்டில் 529 பேரும், டில்லி மாகாணத்தில் 1,110 பேரும், சென்னை மாகாணத்தில் மதுரைச் சில்லாவில் 817 பேருமாக நம் நாட்டினர் வசித்து வருகின்றனர். இந்திய சன சங்கியை அறிக்கை கூறுமாறே நீர் வளம் மழை இவை அதிகமாக உள்ள இடங்களில் மக்கட் கூட்டம் அதிகம்; எனவே, மழை மிக்குள்ள கொச்சி, கீழ் வங்கம், ஐக்கிய மாகாணங்களில் வடகிழக்குப் பக்கங்கள் ஆகிய இவைகளில் சனச் செறிவு அதிகம்.

மற்றைய தேசங்களின் சன நெருக்கத்தைக் கவனிப்போம்: இங்கிலாந்து தேசத்தில் சதுர மைலுக்கு 685 பேரும், ஐரோப்பாவில் 127 பேரும், அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் 41 பேரும், ஜப்பானில் 443 பேரும், சைனுவில் சுமார் 200 பேரும் வாழ்கின்றனர்.

1931-ஆம் ஆண்டு சன சங்கியைப்படி இந்திய நகர வாசிகளின் எண் 38·98 மில்லியன். கிராம வாசிகளின் தொகையோ, 313·86 மில்லியன்; அதாவது நூற்றுக்கு 11 பேர் நகரத்திலும், 89 பேர் கிராமத்திலும் வசிக்கின்றனர். இங்கிலாந்திலோ, நகர வாசிகள் 80 பேர்; கிராம வாசிகள் 20 பேர். ஜர்மனியில் 62 பேரும், 38 பேரும்; பிரான்ஸில் 49·05 பேரும், 50·95 பேரும்; அமெரிக்காவில் 56·2 பேரும், 43·8 பேரும்; கனடாவில் 53·7 பேரும், 46·3 பேரும்; ஜப்பானில் 56·0 பேரும், 44 பேருமாவர்.

இந்த எண்களைக் கவனித்தால், இந்திய மக்கள் கிராம வாசிகளே என்பது தெள்ளிதிற் புலனாகும். எனவே, அக்கிராம வாசிகளின் நன்மையையும் சுகத்தையும் தேடுதல் மிக அவசியமான காரியம். கடந்த பல வருஷங்களாக அரசினர் முழுக் கவனத்தையும் நகர்களுக்கே உபயோகிக்கின்றனர். அரசினர் வருமானத்தில் பெரும்பகுதி கிராம வாசிகளிடமிருந்தே வருகின்றது. அப்படி இருந்தும் அவர்களுடைய நன்மைக்கே முழுச் செலவும் செய்யாமல், அவர்களுடைய நன்மைக்குப் பாடுபடாமல், இருப்பது எவ்வளவு நன்றியற்ற தன்மை! இனியாவது கிராம வாசிகளின் நன்மைக்காகவே அரசாங்கத்

தினரும், அரசியல் கட்சிகளும், அரசியல் தலைவர்களும், சமூகத் தொண்டர்களும் மிக அரும்பாடு பட்டு வேலை செய்ய வேண்டும். கிராமச் சீர்திருத்தம் செய்தாற்ருன் இந்திய சீர்திருத்தம் ஏற்படும். அதனைச் செய்யாது வேறு திருத்தங்களைச் செய்ய முயலுவது, அஸ்திவாரம் இல்லாது கட்டடங் கட்டுதலை ஒக்கும். அம்மட்டோ! கிராமச் சீர்திருத்தஞ் செய்வது, இந்தியாவையே சீர்திருத்தஞ் செய்ததாகும். ஏனெனில், நூற்றுக்குத் தொண்ணூறு பேர் கிராமங்களில் அல்லவா வசிக்கின்றனர்!

பல உத்தியோகங்களினுலும் திரண்ட பொருள் சம்பாதித்து ஓய்வு எடுத்துக்கொள்ள விரும்புவோரும் நகரங்களிலேயே வசிப்பதை விரும்புகின்றனர். அதற்கு அவர்கள் மேல் பெரிதும் குறைகூறுவதிற் பயனில்லை. அநேக கிராமங்களில் வாழ்க்கைக்கு இன்றியமையாதனவான சாதனங்கள் இல்லை. பல புதிய வாழ்க்கைச் சாதனங்களை உபயோகித்து இன்பமடைந்த அவர்கள் கிராமங்களுக்குப் போகத் தவறுவது மனித இயல்பே. எனினும், இக்கல்வி பெற்ருேர், பொருள் மிக்குடையவர், கிராமங்கட்குச் சென்ருல், ஏற்ற வசதிகளைச் செய்துகொள்ளக்கூடும். அஃதன்றி, 'கிராமங்

களில் எல்லா வசதிகளும் வந்த பின்னர்த்தான் அங்குப் போவோம்,' என எண்ணுவது, 'நீந்தத் தெரிந்த பின்னர்த்தான் தண்ணீரில் இறங்குவேன்,' என்பதை ஒக்கும். இவர்கள் கிராமங்கட்குச் சென்று வசிக்கத் தொடங்கினல், இவர்களுடைய கல்வியும், அறிவும், அநுபவமும் கிராம வாசிகட்குப் பயன் அளிக்கும். இவர்கள் புது விவசாய முறைகளை அநுஷ்டித்துப் பயன்பெற்ருல் மற்றைக் கிராம வாசிகளும் தங்கள் பயிரிடு முறைகளை மாற்றிக் கொள்வார்கள்.

கடந்த நான்கைந்து ஆண்டுகளாக வேலை இல்லாத் திண்டாட்டம் மிகுந்ததும், அநேக அரசியல் தலைவர்கள் கிள்ளைகளைப்போல, "கிராமத்துக்குத் திரும்பிப்போ, திரும்பிப்போ," எனக் கூவத் தொடங்கிவிட்டார்கள். இவர்களிற் பலர் ஒரு தடவையேனும் கிராமத்தில் அடி வைத்து அறியாதார். கிராமங்கள் என்ன நிலையிலுள்ளன என்பதைப் புத்தகங்கள் வாயிலாகக்கூட அறியாதவர் பலர். தங்கள் படிப்பிலேயே கைப்பொருள்களை இழந்து, கடன் வாங்கித் தவிக்கும் இவ் வேலையில்லா வாலிபர்கள் கிராமங்கட்குச் சென்று என் செய்வது? கிராமங்களுக்குச் சென்று அங்குச் செய்யக் கூடிய வேலைகளைச்

செய்வதற்கேற்ற அறிவும் பழக்கமும் இவர்கட்கு உண்டா? இப்போதுள்ள கல்வி முறை நித்திய வாழ்க்கைக்குப் பயன்தரத்தக்கதா? கிராம வாசிகள் இவர்கள் வரவை விரும்புகிறார்களா? இல்லையே! ஏதாவது ஒரு திட்டம் போட்டு, அந்தத் திட்டத்தின்படி வேலை செய்ய இவர்களுக்கு ஊக்கமூட்டினால் பயனே ஒழிய, தனிப்பட்ட சிலர் கிராமங்கட்குப் போவதால் விசேஷ நன்மை உண்டாகாது. அரசினரும் சமூகமும் கிராமச் சீர்திருத்தத்தை முக்கியக் கடமையாகக் கொண்டு வேலை செய்யத் தொடங்கினுற்றான் இந்த வேலை இல்லாத படித்த வாலிபர்கள் உழைக்க இடம் ஏற்படும். அப்போதுங்கூடச் செய்ய வேண்டிய ஒரு முக்கிய வேலை, கிராமங்களிலேயே இருக்கிற மக்களில் பெரும்பகுதியினர் கிராமங்களை விட்டு முக்கியக் கைத்தொழில் ஸ்தலங்களில் குடியேறிக் கைத்தொழில்களில் ஈடுபடும்படி செய்வதேயாகுமே அன்றி, நகரிலுள்ளோர் யாவரையும் கிராமங்கட்கு அனுப்புவதன்று. இப்போது கிராமங்களிலுள்ளோருக்கே போதிய வேலையில்லாது அவர்கள் காலங் கழித்திருப்ப, கிராம வாசிகளின் எண்ணைப் பெருக்குவதில் நாடு நலம் பெறுமா? சற்றே சிந்தித்துப் பாருங்கள்!

இந்தியாவில் இப்போது ஏறக்குறைய ஏழுலக்ஷம் கிராமங்கள் இருக்கின்றன. அவைகளின் சீர்திருத்தத்தைப்பற்றித் திரு. கே. எஸ். வேங்கடரமணி கூறும் நல்லுரை கவனிக்கற்பாலது. அது வருமாறு: “இந்த ஏழு லக்ஷம் கிராமங்களின் நிலைமையையும் நேர் படுத்துவதே இந்தியரின் முதற்கடமை. அதுவே நமது அழியாத பாக்கியம். ஆதலால், இப்பொழுது நமது நாட்டிலேற்பட்டுள்ள புதிய கிளர்ச்சியின் முக்கியமான வேலை என்ன என்றால், முதலில் சீர் குலைந்துள்ள இந்த இலட்சக் கணக்கான கிராமங்களைத் திருத்தி அமைப்பதாகும். அவ்வாறு செய்வதில் மேல் நாட்டு நாகரிகத்தின் நல்ல அமிசங்களையும் சுகாதார முறைகளையும் கைக்கொண்டு, பழைய முறைகளோடு கலந்து, மேன்மைப்படுத்த வேண்டும். அப்படிச் செய்யின், நம் நாட்டில் மட்டுமன்று; உலகம் முழுவதுமே கிராம வாழ்வின் சிறப்பை நாம் பரவச் செய்தவர்களாவோம்.”

இந்தச் சிறு நூலில், ‘கிராமங்களிலுள்ள குறைபாடுகள் இன்னின்னவை; இன்ன இன்ன வழியில் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும்,’ என்பன போன்ற விஷயங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. பெரும்பாலும்

கிராம வாசிகள் தாங்களே செய்துகொள்ளக் கூடிய சீர்திருத்தங்கள் மிக விவரமாகக் கூறப் பட்டுள்ளன. இந்தப் பல கருத்துக்களையும் மனத்திற்கொண்டு தீவிரமாகக் கிராமவாசிகள் வேலை செய்வார்களானால், பூவுலகத்திலேயே கைலாசம் ஏற்படும். நாம் எல்லோரும் இடை யரூச் சுவர்க்க இன்பத்தை அனுபவிப்பவர்க ளாவோம்.

"ஏழை என்றும் அடிமை என்றும்
எவரு மில்லை! ஜாதியில்
இழிவு கொண்ட மனித ரென்ப
திந்தி யாவில் இல்லையே!
வாழி கல்வி செல்வ மெய்தி
மனம கிழ்ந்து கூடியே
மனிதர் யாரும் ஒருநிகர்ச
மான மாக வாழ்வமே." —பாரதியார்

2. கிராமங்களின் வரலாறு

"அன்னையே! அந்நாளில் அவனிக் கெல்லாம்
ஆணிமுத்துப் போன்றமணி மொழிக ளாலே
பன்னிநீ வேதங்கள், உபநிட தங்கள்
பரவுபுகழ்ப் புராணங்கள், இதிகா சங்கள்
இன்னும்பல நூல்களிலே இசைந்த ஞானம்
என்னென்று புகழ்ந்துரைப்போம் அதனை இந்நாள்?
மின்னுகின்ற பேரொளிகாண்! காலங் கொன்ற
விருந்துகாண்! கடவுளுக்கோர் வெற்றி காணே!"

என்று கூறியபடி இந்திய நாடு அறிவிற்குப் பிறப்பிடம். அநேக சிறந்த மதங்கள் பிறந்த நாடு இந்நாடே. பல நாடுகளும் மிகத் தாழ்ந்த நிலையில் இருந்த அக்காலங்களில் எல்லாம் மிகச் சிறந்த நாகரிகத்தில் தலை சிறந்து நின்றது இந்த நாடுதான். அறிவுத் துறையில் அன்றி, வாழ்க்கை முறைகளிலும் இந்நாடு சிறந்திருந்தது. அரசியல் திட்டத்திலும் இந் நாட்டில் வழக்கத்திலிருந்த முறைகள் மக்களின் தன்மைக்கும் நன்மைக்கும் ஏற்றனவாய், மக் களின் நித்திய வாழ்வோடு இணைக்கப் பெற் றனவாய் விளங்குகின்றன.

இவ்வுண்மையை மெய்ப்பிப்பது நம் நாட் டில் நடந்து வந்த கிராம ஆட்சி முறையே ஆகும். ஒவ்வொரு கிராமத்திலும் அக்கிரா

மக் காரியங்களைச் செவ்வையாக நடத்த ஓர் ஆட்சி அமைக்கப்பட்டிருந்தது. அரச வமிசங்கள் மாறினும், உலக விஷயங்கள் மாறினும் தாம் மாறாது என்றும் ஒரே தன்மையனவாக இந்தக் கிராம ஆட்சி முறைகள் இருந்து வந்தன. அதனாற்றான் இந்திய மக்கள் மத்திய அரசியல் நிலையைக் கவனிக்கவில்லை; அங்கே ஏற்பட்ட மாறுதல்கள் மக்களின் வாழ்க்கைக்கொரு சிறு ஊறும் பயந்தில. அதனாலேதான் "ராமன் ஆண்டாலென்ன! ராவணன் ஆண்டாலென்ன!" என்னும் பழமொழியும் இந்நாட்டில் எழலாயிற்று. நீண்ட நாட்களாக இருந்த கிராம வாழ்க்கைத்திட்டம் பிரிட்டிஷார் ஆட்சி தொடங்குங்காலம் வரையில் எவ்வித ஊறும் இன்றிச் செவ்வையாயிருந்து வந்தது. பிரிட்டிஷாரின் ஆட்சி முறைகள் இந்திய முறைகளினின்றும் வேறுபட்டனவாய் இருந்தமையால், கிராம ஆட்சித் திட்டத்தின் அருமையை உணர்ந்து அதைப் போற்றிப் பாதுகாக்கும் உணர்ச்சி அவர்கட்கு உண்டாக இல்லை. பிரிட்டிஷார் தங்களுடைய கருத்துக்களின்படி அரசியல் அமைப்புக்களை ஏற்படுத்தியதும், அந்தக் கிராம ஏற்பாடுகள் வலிமை குன்றி, இறந்து பட்டன. அதனைச் சமீப காலத்திலேதான் அரசினர் அறிந்து,

கிராம வாழ்க்கையைப் பலப்படுத்த முயல்கின்றனர். அவர்கள் நன் முயற்சி வெற்றி பெறுவதாக!

வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் கிராமங்கள் ஆங்காங்கிருந்த ஊர்ச் சபைகள் மூலமாகவே ஆட்சி செய்யப்பட்டன என்பது அறியக்கிடக்கிறது. இருக்கு வேத (Rig Veda) காலத்திலேயே சபைகள் இருந்து ஆட்சி செலுத்தின என்று இருக்கு வேதம் கூறுகிறது. "ஒவ்வொரு பட்டினத்திலும், ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பொதுக் கட்டடம் இருந்தது. அந்தக் கட்டடத்திலேயே மத்தியமாசியின் தலைமையிலே சபைகள் கூடி நியாயத் தீர்ப்புக்கள் செய்தன. மத்தியமாசியே வேத கால இந்தியரின் விளையாட்டுக்களிலும் தலைமை வகிப்பது வழக்கம்,'' என அதில் கூறப்பட்டிருக்கிறது.

வட இந்தியாவில் நாட்டின் ஆட்சிக்கு அடிப்படையாய் இருந்தது கிராமம். ஒவ்வொரு கிராமத்திலும் ஓர் ஆட்சித் திட்டம் இருந்தது. அநேக ஓயாத சண்டைகள் நாட்டில் நிகழ்ந்த போதிலும், இக்கிராமங்கள் யாதொரு மாறுபாடும் இல்லாமல் இருந்தன. இப்போது படேல்களும் பட்வாரிகளும் இருப்பது போல, அப்போது பரம்பரைப்

பாத்தியமுள்ள தலை மகன்களும், தலைமைப்பதிவாளர்களும் (Head-registrars) கிராமங்களில் இருந்தார்கள். ஊர் நிலப் பாத்தியத்தை அறிவிக்கும் பட்டியலுக்குக் 'கரண' என்பது பெயர். அதிலிருந்துதான் 'கரணம்' 'கரணிகன்' 'குல கரணன்' முதலிய சொற்கள் எழுந்தன போலும்! ஒவ்வொரு கிராமத்திலும் அரசாங்கக் கணக்குகளை வைப்பதற்கும் கிராமக் கணக்குகளைச் சேமித்து வைத்திருப்பதற்கும் தனி இடங்கள் இருந்தன. பொதுவாக ஊர்ப் பொதுச் சாவடியில் கிராமத் தலைவன் இருந்துகொண்டு விஷய விசாரணை செய்வது வழக்கம். ஹியன்சாங் என்னும் சீன யாத்திரிகர், ஒவ்வொரு கிராமத்திலும் எல்லாக் கணக்குகளும் செவ்வையாக வைத்திருந்ததைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். கிராம அதிகாரிகள் ஆறில் ஒரு பங்காகிய அரசிறையை வசூல் செய்வது வழக்கமாய் இருந்தது.

இனும் கிராமங்கட்கு இந்த வரி முதலியவை இல்லை. போலீஸ் மனிதனுவது, சிப்பாய் முதலியோராவது அந்த ஊருள் செல்லக்கூடாது. உப்பு வரி, சுங்கப் பொருள் வரி முதலிய ஒரு வரியும் அவ்வூர்கட்கு இல்லை.

ஒவ்வொரு கிராமத்திலும் 'சதாவர்த்தா' என்னும் சத்திரமும், 'பிரபா' என்னும் நீர் நிலையமும் (Water house), 'சபா' என்னும் இளைப்பாறும் இடமும், 'பிரக்வன்சா' என்னும் யாகசாலையும் இருந்தனவென்பது அறியக் கிடக்கிறது.

ராஜ புதனத்தில் கிராமத் தலைவனுக்கு 'மகாத்தாரா' என்பது பெயர். கிராம ஆட்சி அவன் மூலமாகவே நடைபெற்றது. வரி வசூல் செய்யும் அதிகாரிகள் பெரும்பாலும் பரம்பரைப் பாத்தியம் பெற்றவர்கள். வரி பெரும்பாலும் தானியங்களாகவே பெறப்பட்டு, பட்டணங்களில் சர்க்கார் உத்தியோகத்தினரால் சேமித்து வைக்கப்பட்டது.

தென்னிந்தியாவில் பல்லவ சோழ அரசர்களின் சாசனங்களிலிருந்து கிராம ஆட்சி முறை எப்படி இருந்ததென்பதை நன்றாக அறிய முடிகிறது. தென்னிந்திய கிராம ஆட்சி முறை மிக நல்ல ஏற்பாடுகளுடன் நடைபெற்றது. எல்லா ஊர்களிலும் ஆண்டது அந்த அந்த ஊர்ச் சபையே ஆகும். அந்தச் சபைக்கு அங்கத்தினர் சீட்டு மூலமாயும் தேர்வு மூலமாயும் தெரிந்தெடுக்கப்பட்டனர். பெரிய குற்றம் எவரேனும் செய்யின், அவர்களன்றி அவர்களின் உறவினரும் சபையின்

அங்கத்தினராகும் யோக்கியதை அற்றவர் ஆவர். சாதாரணமாக ஒன்றரை ஏக்கர் நிலம் உடையவர் அங்கத்தினராக அருகதை உடையவர் ஆவர். பொருளில் வழி, ஏதாவது ஒரு வேதத்தைச் சொல்லவாவது ஒரு 'பிராம் மணத்தை'ப் பொருளுடன் உரைக்கவாவது அறிந்திருத்தல் போதும். ஒரு பட்டணமோ கிராமமோ பல பகுதிகளாகப் (ward) பிரிக் கப்பட்டது. ஒவ்வொரு பகுதியிலும் உள்ள முக்கியஸ்தர்களின் பெயர்கள் பதிவு செய்யப் பட்டன. அந்த முக்கியஸ்தர்களின் பெயர் களைக் குலுக்கிப்போட்டு அவற்றிலிருந்து 'ஆட்சியாளர்' தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஏதா வது தகவல் ஏற்பட்டால், கிராமக் கணக் கனே தீர்த்துவைத்தல் வழக்கமாய் இருந்தது. இப்படித் தெரிந்தெடுக்கப்பட்ட பெரிய கழக மானது (Committee) பல உட்கழகங்களாக (Sub-committees) பிரிக்கப்பட்டது. சாதா ரணமாக ஒவ்வோர் ஊரிலும் ஐந்தாறு உட் கழகங்கள் இருந்தன. பொதுக்காரியங்கள், நீர் நிலையங்களை உண்டாக்கல், தோட் டங்களைப் பயிர் செய்தல், கீாத்தல் முதலிய பல வித வேலைகளை இந்த உட்கழகங்கள் கவ னித்து வந்தன. இந்த உட்கழகங்களில் மிக முக்கியமானது பஞ்ச வார வாரியம்

(Pancha vara variyam) என்பதாம். வாரியம் என்பது ஆளுதல் என்று பொருள்படும். 'பஞ்ச' என்பதனால் அந்தக் கழகத்தில் ஐவர் இருந்தனர் என்பது கொள்ளக்கிடக்கிறது. 'ஐம்பெருங் குழு' என்பது இதையே குறிக்கும் போலும்! இந்தக் கழகமே கிராமத்தில் பொதுவாக எல்லா விஷயங்களையும் ஆட்சி செய்ததெனக் கூறலாம். தினசரிக் காரியங்கள் அனைத்தையும் பொதுவாகக் கவனித்தது இந்தக் குழுவே ஆகும்.

மிகப் பெரிய பொது விஷயங்கள் ஊர்ப் பொதுக்கூட்டங்களில் ஆலோசித்து முடிவு செய்யப்பட்டன. பல ஊர்களில் 'ஊர்' என்னும் ஒரு கழகமும், அதையன்றிச் 'சபையும்' இருந்ததாகத் தெரிகிறது. 'ஊர்' என்பது பழமையாக இருந்த ஓர் ஆட்சிக் கழகம் போலும்! சபை பிற்காலத்தில் ஏற்பட்டதாய் இருக்கலாம்.

இந்த ஊர்ச்சபைகள் கிராம நில விஷயங்கள் அனைத்தையும் தம்முள் அடக்கி நின்றன. வரி வசூல் செய்தவை இச்சபைகளே. பொதுவாக ஊர் நிலம் முழுதும் ஊருக்கே சொந்தமாய் இருந்தது. ஊராருக்குள் அந்த நிலத்தை எப்படிப் பிரித்துக் கொண்டு, யார் யார் எந்தெந்த நிலத்தைச் சாகு

படிசெய்வதென்பதை இந்தச் சபைகளே தீர்மானித்தன. சாகுபடி செய்யப்படாது காடு கரம்புகளாய் இருந்த நிலங்களைத் திருத்திச் சாகுபடி செய்வோர்க்கு மிகக் குறைந்த வரி விதிக்கப்பட்டது. பல வருஷங்கட்குப் பின்பு தான் அந்த நிலங்கட்கு மற்றை நிலங்கட்குப் போல வரி விதிக்கப்படும். யாரேனும் ஒரு தனிப்பட்டவராவது, அரசனாவது, கோயிலுக்கோ, பிராமணருக்கோ, பொது ஊழிய ஸ்தாபனத்துக்கோ நிலத்தானம் செய்ய விரும்பினால், அந்த ஊர்ச் சபையின் சம்மதம் வேண்டும். ஊர்ச் சபையே அந்த நிலப் பாத்தியமுடையவர்கட்கு என்ன நஷ்டஈடு கொடுப்பதென்பதை நிர்ணயிக்கும். ஊர்ச் சபைதான் முழு ஏற்பாட்டையும் செய்யும். நிலங்கள் ஒரு கையை விட்டு வேறு கைக்கு மாறினால், அரசின் ஆணை பெற வேண்டும்.

சபைதான் ஒவ்வொரு நிலத்திற்கும் என்ன வரி கொடுக்க வேண்டுமென்பதைத் தீர்மானம் செய்து அதை வாங்கும். ஆனால், நிலங்களை அளவிட்டு, பாகுபடுத்தி, பதிவு செய்துகொள்வது அரசின் வேலையாய் இருந்தது. இங்கிலாந்தில் வில்லியம் அரசன் 'டூம்ஸ் டே சர்வே' எனப்படும் நில, பொருள் கணக்கெடுத்தபோது தமிழ் நாட்டில் குலோத்துங்க

சோழன் நிலக்கணக்கொன்று எடுத்ததாகத் தெரிகிறது. நிலங்கள் மிகச் செவ்வையாக அளவிடப்பட்டன; ஓர் அங்குலத்தில் $\frac{1}{52000}$ பங்கு கூட அளந்து குறிக்கப்பட்டுள்ளது எனின், அந்த ஒழுங்கை என்னென்று கூறுவது!

நில உரிமைச் சண்டை, எவ்வளவு வரி கொடுப்பதென்பதில் சண்டை முதலியவைகளைச் சபையே தீர்மானித்து வந்தது. மிகப் பெரிய விஷயமாய் இருந்தால், பக்கத்து ஊர்களின் சபைகளும் ஒன்று சேர்ந்து தீர்மானஞ் செய்தன. அந்த முடிபையே அந்நாட்டின் அதிகாரியும் ஒப்புக்கொண்டு பொது உத்தரவாக அமுலுக்குக் கொண்டு வருவான்.

நில உரிமை மாறும்போதெல்லாம் தலைமை ஸ்தானத்துக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்; அரசனது ஆணை பெற வேண்டும்; அரசாங்கப் பதிவுகளில் (Records) அவை பதிவாக வேண்டும்.

இக்கிராமச் சபைகள் குளங்கள், ஏரிகள், நீர்ப்பாசனக் கால்வாய்கள் முதலியவைகளைப் பாதுகார்த்து வந்தன; சாலைகளை ஆங்காங்கு அமைத்தன; குளங்களைச் செவ்வையாக ஆண்டு தோறும் தோண்டி வந்தன. பெரிய நீர்ப் பாசன வசதிக்கான வேலைகளை மத்திய அர

சாங்கமே கவனித்து வந்தது. புதிதாக ஆறு வெட்டல், குளம் வெட்டல் முதலியவை மத்திய ஆட்சியின் வேலையாகும். அவ்வேலைகள் முடிவடைந்ததும் அது முதல் பராமரிக்க வேண்டியது கிராமச் சபைகளின் பொறுப்பாகும். குளம் முதலியவற்றின் தூற்றை வருஷா வருஷம் எடுப்பதற்காகத் தனிப்பட்டவர் கூட நிலம் முதலியவைகளை மானியமாக விட்டிருந்தனரென்பது தெரிகிறது.

இந்தச் சபைகள்தான் ஊரில் வரி முதலியவற்றை வசூலித்தன. ஊர் ஜனங்களிடம் கூலி கொடாது பொதுக் காரியங்கட்காக வேலை வாங்க இந்தச் சபைகட்கு அதிகாரம் உண்டு.

கிராமங்களில் குற்றங்கள் நடவாது காத்தல் இந்தச் சபைகளின் வேலை. குற்றவாளிகளைக் கண்டு பிடித்து நியாயத் தீர்ப்புக்குக் கொண்டுவருவதற்குக் கிராம அதிகாரிகள் இருந்தார்கள். குற்றவாளிகளை விசாரணை செய்து சபையினர் தண்டனைகள் விதித்தனர். மரண தண்டனை விதிப்பதற்குக்கூட இந்தச் சபைகட்கு அதிகாரம் இருந்தது. பெரிய கொள்ளைக் கூட்டத்தினரை அல்லது குற்றவாளிகளின் கூட்டத்தினரைக் கிராம அதிகாரிகளால் பிடிக்க முடியாவிட்டால், அரசாங்கத்தி

னர் உதவியால் அவர்களை அடக்குவது வழக்கமாய் இருந்தது.

அநேக கிராமங்களிலிருந்த சபைக்கு 'ஊர்' என்பது பெயர். இதைப்பற்றிய விவரம் நன்கு தெரியவில்லை. தமிழரின் பழைய கால 'மன்றந்'தான் பிறகு ஊர் என வழங்கப்பட்டது போலும்! 'சபைகளும்' 'மகா சபைகளும்' இருந்த ஊர்களிலேயே 'ஊர்களும்' இருந்தன.

சில ஊர்களிலே 'நகரத்தார்' என்னும் ஒரு கழகத்தினர் வேலை செய்து வந்தனர். நகரத்தார் என்பது 'வர்த்தகர் குழு'வைக் குறிப்பது என எண்ணுதற்கிடமிருக்கிறது.

கிராமத்தைவிடப் பெரிதான 'நாட்டில்' 'நாட்டார் சபை' இருந்தது. நாட்டைவிடப் பெரிய மண்டிலத்திலும் சனச் சபை ஒன்று இருந்ததாகத் தெரிகிறது. நாட்டிலும் மண்டலத்திலும் இருந்த சபைகளைப்பற்றித் திட்டமாக ஒன்றும் கூற முடியவில்லை.

சில சமயங்களில் ஓர் ஊர்ச் சபையும் மற்றோர் ஊர்ச் சபையும் ஒன்று சேர்ந்து பல விஷயங்களைப்பற்றி முடிவு செய்வதும் உண்டு. திருவிடைமருதூர்க் கோயிலில் ஒரு தருமம் சாசுவதமாக நடக்க வேண்டுவதைக் குறித்து முடிவு செய்யத் திரைமூர் (Tiraimur)ச் சபை

யும் திருவிடைமருதூர் 'நகரமும்' ஒன்று கூடிப் பேசின என்பதை ஒரு சிலாசாசனத்தால் அறிகிறோம்.

உத்தரமேரூர் கல்வெட்டுகள் நமக்கு அக் காலத்திய கிராம ஆட்சி முறையை நன்கு விளக்கிக் காட்டுகின்றன. சுமார் எட்டாவது நூற்றாண்டில் பல்லவர்களின் காலம் முதல் பதின்மூன்றாவது நூற்றாண்டின் மத்திய காலத்தில் சோழ ஆட்சி நிலை குலைந்ததுவரை வரையில் உள்ள காலத்தில் பல கல்வெட்டுகள் அங்கே வெட்டப்பட்டன. சில மாதிரிக் கல் வெட்டுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

A. D. 784. வீரமேகக் குளத்தைத் தோண்டுவதற்காக ஒருவர் கொடுத்த பணத்தைச் சபை பெற்றுக்கொண்டது. அந்தக் கொடையின் வருமானம் வருஷா வருஷம் குளம் வெட்டச் செலவிடப்பட வேண்டும்.

A. D. 896. சபை கிராமத்திலிருக்கும் விவசாயிகட்கு நிலங்களைப்பற்றிய ஏற்பாடு 'வைவஸ்தா' (Settlement) செய்தது.

A. D. 792. குளக் கமிட்டியினரின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன.

A. D. 801. தண்ணீர்ப் பந்தல் வைப்பதற்காகக் கொடுக்கப்பட்ட பொன் தானத்தால்

நூற்றுக்கு 15 வீதம் வட்டி வருகிறது. அந்த வருமானத்தைக் குளக்கழகத்தார் கையில் வைத்துக்கொண்டு அந்தத்தானம் செய்யவும்.

A. D. 923. ஆழ்ந்து கெட்டுப்போன ஒரு சாலையானது ஆடு மாடுகள் கூடப் போகத் தகுதியற்றதாக இருக்கிறபடியால், பக்கத்து நிலங்களையும் வாங்கி, ரோட்டை விசாலப்படுத்தி, சாலையைச் செவ்வையாகப் போடத் தோட்டக் கழகத்துக்கும் (Garden Committee), 'ஊர் மேல் நின்ற திருவாதி' (Ur-melninra-tiruvadi) என்ற ஓர் உத்தியோகஸ்தனுக்கும் ஆணை அளிக்கப்பட்டது.

பெருங்கூரி சபை சில நிலங்களுக்கு வரி விதிக்கக் கூடாதெனத் தீர்மானித்தது. 'ஊர்' அந்த நிலங்களிலிருந்து 'இறை' (வரி) வாங்குவதில்லையென ஒப்புக்கொண்டது.

இவற்றைப்போல இன்னும் பல.

பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் தொடங்கிய காலத்திற்கூட இந்தக் கிராமங்கள் செவ்வையான முறையில் தங்கள் காரியங்களைக் கவனித்து வந்தன என்பது தெரிகிறது. எல்பின்ஸ்டன் என்னும் சரித்திர ஆசிரியர் அக்காலத்தில் இருந்த தக்ஷிண கிராமங்களைப் பற்றிக் குறிப்பிடுவதாவது: "கிராமங்களின் ஆட்சி மிகத் திறம்பட்டதாய் இல்லை. எனினும்,

கொடிய அரசாட்சியின் கெடுதிகளை அது தடுக்கும் தன்மையதாய் இருந்தது. ஒரு பெரிய நாட்டு ஆட்சிக்குள், ஒவ்வொரு கிராமத்திலும் அக்கிராம ஆட்சிக்காக ஒரு சிறு ஆட்சி இருந்ததெனக் கூறலாம். மிக விசேஷமான அரசியல் அமைப்புக்களை இந்தியர் ஏற்படுத்தா விட்டாலும், கிராமங்களில் இத்தகைய சிறந்த ஏற்பாடு இருந்தபடியாற்றான் கிராமங்கள் நிலை குலையாது இருந்து வந்தன,'' என்பதே.

1812-ஆம் வருஷத்திய கிழக்கு இந்திய கம்பெனியாரின் அறிக்கையில் கூறப்படுவதாவது: "ஒரு கிராமம் என்பது ஆயிரக்கணக்கான ஏக்கர் நன்செய் புன்செய் நிலங்களைத் தன்னுள் அடக்கியது. அதில் அநேக உத்தியோகஸ்தர்களும் வேலைக்காரர்களும் இருந்தார்கள். ஊரில் முக்கியமானவர் படேல் (Potail), அல்லது ஊர்த் தலைவர். கிராமங்களின் சகல காரியங்களையும் கவனித்தல், கிராம வாசிகளிடையே சண்டைகளைத் தீர்த்தல், ஊர்க் காவல் வேலையை (Police) மேற்பார்வை செய்தல், ஊருக்குள்ளே வரி வசூல் செய்து அரசனுக்கு செலுத்துதல் முதலியன ஊர்த்தலைவரின் வேலைகளாகும். கர்ணம் என்பவன் ஊர்க் கணக்கு, நிலக் கணக்கு, நிலச் சாகுபடிக் கணக்கு ஆகிய இவைகளை எழுதி

வைத்திருப்பவன். ஊர்த்தலையாரி குற்றங்களை யும் குற்றவாளிகளையும் கண்டு பிடித்தல், ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்துக்குச் செல்பவருக்குத் துணை போதல் முதலிய பல வேலைகளைச் செய்வான். ஊர்த் தோட்டி பயிர்களைக் காவல் புரிந்தும், நிலங்களை அளத் தல் முதலிய வேலைகளைச் செய்தும் வந்தான். எல்லைக் காவற்காரன் ஊர் எல்லையைக் காத்து, அதில் ஏதேனும் தகவல் வந்தால், சாட்சி யம் கூறுவோன். குளங்கள் கால்வாய்களின் மேற்பார்வையாளன் நிலங்களுக்குத் தண்ணீர் விடுபவன். இவர்களல்லாமல் கோயில் பூசை செய்ய ஒரு பிராமணனும், பிள்ளைகட்குக் கல்வி கற்பிக்க ஓர் ஆசிரியனும், நல்ல நாள் முதலியன பார்த்துச் சொல்ல ஒரு புரோகி தனும், கொல்லன், தச்சன், வண்ணான், குய வன், பரியாரி, இடையன், பாடகன், கவி முதலியோரும் ஒவ்வொரு கிராமத்திலும் இருந்தனர். சில சில கிராமங்களில் இரண் டொருவர் கூடவும் குறைவாகவும் இருந் தனர்."

இவ்வளவு அழகிய திட்டத்தைக் கிராமங் களில் வளர்த்து வந்தனர். கிராமங்களின் எல்லைகள் மாறுவதில்லை; யுத்தம், பஞ்சம், நோய்கள் முதலியவைகளால் கிராமத்துக்கு

மிகச் சேதம் ஏற்பட்டாலுங்கூடக் கிராம எல்லையும், கிராம விஷயங்களும், குடும்பங்களும் பெரும்பாலும் மாருமல் இருந்து வந்தன.

ராஜாங்க மாறுதல்களைப் பற்றியும், பிரிவினைகளைப் பற்றியும் கிராமத்தினர் கவனிப்பதே இல்லை. 'அதிகாரம் யார் கையில் இருக்கிறது; யார் கையிலிருந்து யார் கைக்குப் போகிறது,' என்பவற்றைக் கவனிக்க வேண்டுமென்னும் அக்கறை ஒரு சிறிதும் கிராம வாசிகட்கு இல்லை. ஒவ்வொரு கிராமமும் அவ்வூர் விஷயங்களில் யாதொரு மாறுதலும் இல்லாமல் இருந்தது. இப்போதுங்கூடப் படேலே முக்கிய கிராமத் தலைவன். அவனே நியாயாதிபதி. அவனே தண்டத் தலைவன் (Magistrate). வரி வசூலிப்பவனும் அவனே.

மிகப் பழைய காலத்திலன்றிப் பதினெட்டாம் நூற்றூண்டிலே இந்திய கிராமங்கள் இவ்வளவு அழகிய நிலையில் இருந்தன. இந்த விவரங்கள் கிழக்கிந்திய கம்பெனியாரின் உத்தியோக முறையில் எழுதப்பட்ட பத்திரங்களில் (Records) உள்ளவை.

பிரிட்டிஷாரின் ஆட்சி தொடங்கிய காலமுதலே இந்தக் கிராமங்கள் அழியத் தொடங்கின. கிழக்கிந்திய கம்பெனியார் வரி வசூல் செய்யத் தொடங்குமுன் ஒவ்வொரு கிரா

மத்துக்கும் மொத்தமாக வரி விதிக்கப்பட்டு, கிராமத் தலைவன் மூலமாக வசூலிக்கப்பட்டது. கிராமவாசிகள் தங்களுக்குள் நிலங்களை விகிதாசாரப்படுத்தி, ஒவ்வொருவரும் எவ்வளவு வரி கொடுப்பதெனத் தீர்மானித்துக்கொள்வது வழக்கம். ஆனால், பிரிட்டிஷாரோ, ஆரம்ப காலத்திலே அதிகப் பணம் திரட்ட வேண்டும் என்னும் பேராசையாலே ஒவ்வொரு விவசாயியிடமும் நேரே வரி விதித்து, வசூலிக்கத் தொடங்கினர். அதனால், கிராமத்திட்டத்தின் உறுதிப்பாடு குலைந்தது. சிறு குற்றங்களைக் கண்டுபிடிப்பது, விசாரணை செய்வது, தண்டனை செய்வது முதலியன கிராமத்தினரே கிராமத் தலைவன் மூலமாகச் செய்துவந்தனர். பிரிட்டிஷார் எல்லாச் சிவில் கிரிமினல் அதிகாரங்களையும் தங்கள் அதிகாரத்துக்குள்ளேயே வைத்துக்கொள்ள விரும்பியபடியால், கிராமங்களுக்கிருந்த அந்த அதிகாரமும் ஒழிந்தது. பொருள் சம்பந்தமான அதிகாரம், தண்ட அதிகாரம் ஆகிய இரண்டையும் இழந்த கிராமங்கள் வன்மை குறைந்து நாளடைவில் மங்கிப்போயின.

1813-ஆம் வருஷத்திலே சென்னை வரி போர்டார் (Madras Board of Revenue) சென்னை ராஜதானியில் கிராமங்களுக்கு

மொத்த வரி விதிப்பதுதான் சரியென்றும், கிராமத் தலைவனிடமிருந்து மொத்தமாக வரியைப் பெற்றுக்கொண்டு ஊரார் தங்களுக்குள்ளே வரி நிர்ணயம் செய்துகொள்ள விடுவதுதான் பழங்கால நிலையை அநுசரித்துச் செய்யக்கூடிய காரியம் ஆகுமென்றும், மிகப் பழைய காலத்திருந்தே அது மாதிரியான ஏற்பாடுதான் இருந்ததென்றும், நீண்ட காலமாக இருந்த ஏற்பாட்டை மாற்றுவது சரியல்லவென்றும் கிழக்கிந்திய கம்பெனியின் டைரக்டர்களுக்குத் தெரிவித்தார்கள்; 1814-ஆம் வருஷத்திலும் மறுபடியும் தங்கள் வேண்டுகோட்கிணங்க வேண்டுமெனக் குறையிரந்தார்கள். அப்போது சர் தாமஸ் மன்றோ ரயட்வாரித் திட்டமே (குடிவாரத்திட்டம்) நன்றெனக்கூறிய படியாலும், அத்திட்டத்தாலேதான் அதிக வரும்படி கிடைக்குமென எண்ணியதாலும், போர்டார் கிராமத் திட்டத்தை நிராகரித்தனர்.

பம்பாய் மாகாணத்தின் பெரும்பாலான பாகத்தில் கிராமங்களின் ஆட்சியும், கிராமங்களிலிருந்தே மொத்தமாக வரி வாங்கி வந்ததும் 1819-ஆம் வருஷத்தில் எல்பின்ஸ்டன் எழுதியுள்ள அறிக்கையிலிருந்து தெரிகின்றன. 1821-ஆம் வருஷத்தில் காப்டன் ராபர்ட்ஸன் அறிக்கையின்படி பல கிராமங்களிலுள்ள

நிலங்களைக் கிராமவாசிகள் பொதுவாகவே அனுபவித்து நில வரியை ஒன்ருகக் கட்டினர்களென்றும், வழக்குகளைத் தங்களுக்குள்ளேயே தீர்த்துக்கொண்டார்களென்றும் தெரிய வருகிறது. எல்பின்ஸ்டன் 1827-ஆம் வருஷம் கிராமங்களில் ஒவ்வொரு குடியானவனிடமும் நேரே வரிவசூல் செய்வதுதான் நன்றெனத் தீர்மானித்தார். அதுவே அந்த மாகாணத்தின் கிராமங்கள் அழியக் காரணமாயிற்று. கிராமச் சபைகளிடமிருந்தும் கிராமப் பஞ்சாயத்துக்களிடமிருந்தும் மொத்தமாக வரி வசூலிக்கும் வழக்கத்தை விடாது பின்பற்றி வந்திருந்தால், கிராமங்கள் அழியாது இருந்திருக்கக்கூடும்.

வட இந்தியாவைப்பற்றி 1830-ஆம் வருஷம் எழுதிய சர் சார்ல்ஸ் மெட்காப்பு (Sir charles Metcalf) கூறுவதாவது: "கிராமங்கள் சிறிய சுயராஜ்யங்களாகும். எல்லாம் அழிந்துபோக அவை மட்டும் சாசுவதமாக இருக்கின்றன. அரசர்களின் தலைமுறை மாறி மாறி வருகிறது. அரச குடும்பங்கள் ஒன்றன்பின் ஒன்ருக அழிந்து போயின. இந்து, மொலாய, மராட்டிய, சீக்க ஆட்சிகள் தோன்றி, ஆட்சி புரிந்தன. ஆங்கில ஆட்சி தொடங்குகிறது. எது எவ்வாறு மாறி

னும், கிராம ஆட்சிகள் ஒரு சிறிதும் மாறுவ தில்லை. சிறு அரசாங்கத்தைப் போலுள்ள கிராம ஐக்கியந்தான் பல வேறுபட்ட காலங் களிலும், புரட்சிகளிலும், மாறுபாடுகளிலும், கிராம வாசிகள் கஷ்டமுறு வண்ணம் காத்து, அவர்களுடைய வாழ்க்கைச் சுகத்துக்கு ஆதா ரமாயிருந்து, அவர்களுடைய சுதந்தரத்துக் குக் காரணமாய் இருந்தது,'' என்பதேயாகும். இவ்வாறு கூறிய ஆக்டிங் கவர்னர் ஜென ரலாகிய சர் சார்ல்ஸ் மெட்காப்பு, கிராமச் சபை அல்லது தலைவன் மூலமாக வரி வசூ லிக்காவிடின் கிராமங்கள் அழிந்துவிடும் எனக் கூறினர். அவருடைய திட்டம் கம்பெனி யாரால் ஒப்புக்கொள்ளப்படவில்லை. எனவே, கிராமங்கள் அழிந்ததற்குக் காரணம் வேறு தேட வேண்டுமோ!

கிராமத்தின் ஆட்சி ஒழிந்தது. பிரிட்டிஷ் அதிகாரிகள் எல்லாவற்றையும் தங்கள் கையி லேயே வைத்துக்கொண்டார்கள். வரி வசூலித் தல், குற்றவாளிகளைக் கண்டு பிடித்தல், ஊர்க் காவல் செய்தல் முதலியவைகளில் சில அதி காரங்களையாவது கிராம வாசிகட்குக் கொடுத் திருந்தால்—கிராம வாசிகளை நம்பிக்கைக்குப் பாத்திரர்களாக எண்ணி இருந்தால்—கிரா மங்கள் இவ்வளவு சீர்கேடான நிலைமைக்கு

வந்திருக்கமாட்டா. கிராம ஆட்சியை ஒழித்த பின் அதற்குப் பதிலாக வேறு சுய ஆட்சிக்கான ஏற்பாடு எதுவும் செய்யவில்லை. கிராம வாசிகளின் பிரதிநிதிகட்குங்கூட அரசில் விசேஷப் பங்கு இல்லை. அநேக நூற்றாண்டுகளாக இந்து மகமதிய அரசாங்கங்களில் இருந்த மக்கட்கும் அரசாங்கத்துக்கும் இருந்த தொடர்பு அழிந்துபோயிற்று.

கடந்த சில ஆண்டுகளாகத்தான் சில மாகாணங்களில் கிராமப் பஞ்சாயத்துக்கள் நியமிக்கப்பட்டு வருகின்றன.

இதுகாறும் கூறிய விவரங்களால் இந்தியாவில் மிகப் பழங்கால முதல் கிராம ஆட்சியே தலை சிறந்து இருந்ததென்பதும், அதனால் பல நன்மைகள் இருந்தன என்பதும், ஆங்கிலேயர் ஆட்சி முறைகளின் மாறுபாட்டாலும் வேறுபாட்டாலும் கிராமங்கள் அழியத் தொடங்கின என்பதும் தெள்ளிதில் விளங்கும். பழைய கிராமங்களைப் புனருத்தாரணம் செய்தலே இந்தியரின் முக்கிய வேலையாக இருத்தல் வேண்டும். அதுதான் இந்திய மக்கட்குப் பெரும்புகழை அளிக்கும். அதைத்தான் நாம் விரைந்து செய்யவேண்டும்.

"ஒன்றே செய்யவும் வேண்டும்; ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும்; நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும்; இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும்." —கபிலர்

3. ஊர்ச் சீர்திருத்தம்

இந்திய நாடு வேளாண்மையைத் தலை சிறந்ததாகக் கொண்டுள்ள நாடு. ஆங்காங்குப் பல சிற்றூர்கள் இந்தியா முழுதும் பரவி நிலவியுள்ளன. அவை சுமார் ஏழு லக்ஷம். பிரிட்டிஷ் இந்தியாவில் மாத்திரம் 500,000 கிராமங்கள் இருப்பதாகக் கணக்கு எடுக்கப் பட்டிருக்கிறது. பட்டணங்களெனக் கணக் கிடப்படுமிடங்களிற் பல பேரூர்களே. மேல் நாடுகளிலுள்ள நகரங்களைப் போன்ற பட்ட ணங்கள் நம் நாட்டில் மிகச் சிலவே உள. ஏனெனில், மேல் நாட்டு நகர்கள் பல பண்ட உற்பத்தித் தலங்களும், பெரிய வர்த்தக ஸ்தானங்களுமாகும். உழுது பயிரிடுவதையே தமது வாழ்க்கை இலட்சியமாக வைத்துள்ள மக்கள் வாழும் நாட்டில் பெரும்பட்டணங்கள் தோன்றுவதெப்படி?

மக்கட்செறிவு மிக்குள்ள பட்டணங்களைச் சுத்தமாக வைத்திருத்தல் மிகச் சிரமமானது. மேல் நாடுகளிலோ, மிகப் பெரிய பட்டணங் களையும் அழகியனவாக, செவ்வையான நிலையி லுள்ளனவாக நன்கு வைத்துள்ளார்கள். நம் நாட்டுக் கிராமங்கள் கூட மிகக் கேவலமான

நிலைமையிலிருக்கின்றன. தெருக்கள் அசுத்தக் களஞ்சியங்களாய் இருக்கின்றன. ஊரே துர்நாற்றத்திற்குப் பிறப்பிடமாய் இருக்கிறது.

எந்தக் கிராமத்திற்குச் சென்றாலும் முதலாவதாக ஒருவர் கவனத்தை ஈர்ப்பது அவ்வூரின் துர்க்கந்தமே. திரு. பிரேயன் I. C. S. என்பவர் முதல் முதல் இந்திய கிராமங்களைப் பார்க்கச் சென்றபோது, கிராமங்கள் மிக அழகியவாய், பல்வேறு பூச்செடிகளும் மரங்களும் செறிந்திருப்ப, நல் உடல் நலம் பெற்ற மக்கள் உலவும் பெருமை உடையவாய் விளங்குமென எண்ணினாராம். என்ன ஏமாற்றம்! ஊருக்குள் நுழைந்ததுமே அருவருக்கத்தக்க ஒருவித நாற்றத்தையும், வாடி உலர்ந்த உடலுடை மக்களையும், தெருக்களில் குப்பையையுமே கண்டு மனம் வருந்தினாராம்.

'சுத்தம் சோறளிக்கும்,' என்பது நமது தமிழ் நாட்டுப் பழமொழி. சுத்தமில்லாததாற்றான் சோறு கிடைப்பது இப்போது துர்லபமாயிருக்கிறது போலும்! கிராமங்களைக் கண் கவரும் வனப்பினவாய், வசீகரமுடையவாய் வைத்திருக்க வேண்டுவது ஒவ்வொரு கிராமவாசியின் கடமையென எவரும் உணர வேண்டும். கிராமங்கள் சுக வாழ்வுக்கு ஏற்றவையாகச் சீர்திருத்தப்படல் வேண்டும். கிராம வாழ்க்கை

மனோரம்மியமானதாய் இருத்தல் வேண்டும். அவ்வழியில் முயன்று பாடுபட வேண்டியவர்களில் முக்கியமானவர்கள் கிராம வாசிகளே.

வசிக்கும் கிராமம் செவ்வையாய் இருந்தாற்றான் கிராம வாசிகளைப் பிணி தொடராது. நோயற்ற வாழ்வு இருந்தால், குறைவற்ற செல்வம் உண்டாகும். திடம் இல்லாவிட்டால், உழைப்புக்கு உடம்பு இடம் தராது; பொருளுற்பத்தி செவ்வையாகச் செய்ய முடியாது; உண்டான பொருள்களை அநுபவிக்க முடியாது. பாரதியார், 'வெள்ளிப் பனிமலை மீதுலவுவோம்—அடி, மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்; பள்ளித் தலமனைத்துங் கோயில் செய்குவோம்—எங்கள், பாரத தேசமென்று தோள் கொட்டுவோம்,' என்று கூறியுள்ளபடி மகிழ் ததும்பும் மாண்புடை வாழ்க்கையை நடத்த இயலாத நடைப் பிணங்கள் ஆக வேண்டி நேரிடும்.

இயற்கையோடியைந்த வாழ்க்கையை உடைய கிராம மக்கள், நோயில்லாத் திட ஆக்கையுடன், ஏறுபோற் பீடு நடையுடன், உலவுவார்களென எதிர் பார்த்தல், மான் கானல் நீரைப் பின்பற்றிச்செல்வதை ஒக்கும். பிணி சிற்றூர்களிலும் பெரிது உலவுவதன் காரணம், அவ்வூர்கள் சீர் கேடான நிலையி

விருத்தலேயாகும். கிராமங்களின் தெருக்கள் என்றும் சுத்தமாய் இருப்பதே இல்லே. ஒவ்வொரு வீட்டினரும் தம் வீட்டு வாயிற்படிக்கு நேர் எதிரே கூட்டி, மெழுகிக் கோலமிடுவர். ஆனல், தெரு முழுவதையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென்னும் உணர்ச்சி கிராம வாசிகளிடத்திலில்லே. ஊராருக்குள் ஓர் ஏற்பாடு செய்துகொண்டு, தெருக்களே முழுதும் செவ்வனே நாடோறும் சுத்தம் செய்தல் அத்தியாவசியம். அவ்வாறு செய்தால் இரு வகைப் பயன் கைகூடும்:

முதலாவதாகத் தெருக்கள் சுத்தமாகும். அதனல் பிணிக்குத் தடை ஏற்படும். இரண்டாவதாக எரு சேர்க்க ஒரு வழி உண்டாகும். நம் நாட்டில் எருவின் சிறப்பை நம்மவர்கள் இன்னும் முற்றும் உணரவில்லே. விவசாயத்திற்கு ஜீவ நாடி எருவே. இவ்வுண்மை புலப்பட்டால், தெருக்கள் எளிதில் சுத்தமாகிவிடும்.

அதிக பணச் செலவில்லாமல் செய்துகொள்ளக் கூடிய மற்றொரு சௌகரியம் தெரு விளக்கிடலாகும். மூங்கிலோ, சவுக்கு மரமோ எல்லாக் கிராமத்திலும் கிடைக்கும். அதை மரமாக நட்டுத் தெருக்களில் இரவு பத்து மணி வரையிலுமாவது விளக்கிடின், இப்போது கிராமங்களிலுள்ள அந்தகாரத்தை எளிதில்

ஓட்டலாம். சில முக்கியமான சந்து பொந்து களில் இரவு முழுதும் விளக்கிட்டு வைத்தால், திருடர் பயமும் குறையும்.

தெருக்களில் ஆடுமாடுகள் உலவும்போது அவை இடும் சாணங்களைத் திரட்டிச் சேமித்து வைத்தால், அத்தனையும் தங்கம் ஆகும் என அறிந்தவர் சிலரே. கிராமங்களில் குப்பைக் குழிகள் சரியாய் இருப்பதில்லை. அகப்படும் குப்பைகளை எல்லாம் ஒன்று சேர்த்து, நன்ருக அகழ்ந்த குழிகளிலிட்டு, காற்றில் பறக்காமல் சேமித்து, அவற்றை மக்க வைத்தால், உழவுத் தொழிலுக்கு மூலப் பொருள் எவ்வளவு எளிதில் கிடைக்குமென்பதை மக்கள் உணராதது பாரத மாதாவின் தவக்குறைவே! இந்தியாவில் சாணத்தைப் பொன்னேயெனப் போற்றிப் பயிரிடற்கு உபயோகப்படுத்தாது வரட்டியாகத் தட்டி அடுப்பெரித்துச் சாம்பலாக்குவதைக் கண்ட மேல் நாட்டு விவசாய நிபுணர் பலர், கண்ணீர் விட்டிருக்கின்றனர். பெண்களைச் சாணம் தட்டச் சொல்வதும், சாணத்தை எரித்துவிடுவதும் ஒழியும் அந்நாளிலேதான் நாடு மேம்படும்.

கிராமங்களில் ஆண்களும் பெண்களும் வெற்றிடங்களில் மலசலங் கழிக்கும் வழக்கம் மிகக் கேவலமானது ; மிக அருவருக்கத் தக்

கது ; அநாகரிகமானது ; அசௌக்கியம் தரு வது. மனிதர்களை மிருக நிலைக்குக் கொண்டு வருவது இப்பழக்கம். கிராம மக்களிடையே இப்பழக்கம் மிக வேரூன்றிப் போயிருப்ப தால், இப்பழக்கத்தை நகரங்களிலும் கையாள முயலுகின்றனர் அறியா மாந்தர். இப்பழக் கத்தால் கிராமங்களிலுள்ள வெற்றிடங்கள் பாழாகின்றன. இப்பழக்கம் கொக்கிப் புழு நோய், காசம் முதலியன பரவ ஏற்ற சாதன மாய் இருக்கிறது. இப்பழக்கம் அடியோடு நிற்றல் வேண்டும். பத்து முதல் இருபதடி ஆழ மும் பத்தடி அகலமுமுள்ளதாகக் குழியைத் தோண்டி, அதன் குறுக்கே சிறு துவார முள்ள கல்லையாவது, நெடுங்கல்லொன்றையா வது போட்டுக் குழியை மூடிவிட்டுச் சுற்றிலும் கீற்றுத் தட்டியையாவது வேறு மறைப்பையா வது வைத்துவிட்டால், சிறந்த கக்கூசு ஆகி விடும். அல்லது கக்கூசு கட்டும் வேறு பல முறைகளில் எந்த முறையையாவது பக்கத்து ஊர் டாக்டரிடமிருந்து தெரிந்துகொண்டு அநுஷ்டிக்கலாம். எங்ஙனமாயினும் இப்போ துள்ள பழக்கம் ஒழிய வேண்டும்.

ஒவ்வோர் ஊரிலும் நீர் வசதி நன்றாக இருத்தல் வேண்டும். ‘ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்,’ என்பர். இது நீர் வசதி இன்

றேல் வாழ்க்கை சிறப்புடையதாகாது என் பதையே குறிப்பின் உணர்த்தும். அநேக கிராமங்களில், நீர் வளமுள்ள ஜில்லாக்களிற் கூடக் குடி தண்ணீர் கிடைப்பது அரிதாகி இருக்கிறது. பல ஊர்களில் ஒரே குளம் உண்டு. நாய், பன்றி முதலிய குளிப்பதும் அக்குளம்; மக்களும் நீராடுவது அக்குளம்; மீன் பிடித் தற்காகக் குழப்பிச் சேராக்கப்படுவதும் அக் குளமே; குடி நீருக்கு ஜீவாதாரமாய் இருப்ப தும் அக்குளமே. அத்தியாவசியமான நீர் வசதி இவ்வளவு மோசமாயிருப்பின், சுகாதா ரம் எப்படி இருக்கும்? காலரா முதலிய வியாதிகள் அவ்வூரில் தோன்றினல் என்ன வாகும் அவ்வூர்? பண வசதியுள்ளவர்களும் கிணறு எடுப்பதில்லை. குடி தண்ணீருக்கு மாத்திரமாவது ஒவ்வொருவரும் கிணறு எடுக்காவிடினும், ஊர்க்குப் பொதுவாக ஒரு கிணறேனும் இருக்கலாகாதா?

கிராம மக்கள் தங்கள் வாழ்க்கையை மிக ரம்மியமானதாக்கிக்கொள்ள, அதிக செல வில்லாமல் சில காரியங்கள் செய்யலாம். அழ கிய பலன் தரும் மரங்களைத் தெருவின் இரு மருங்கிலும் வைத்து வளர்த்தால் அவை மன மகிழ்ச்சியைத் தரும். வீட்டைச் சுற்றிலும் அழகிய பூஞ்செடிகளையும், பலன் தரும் பச்



எதற்கும் ஒரே குளம்; எல்லாம் அதிலே

[பக்கம் 38]

சிளங்கொடிகளையும் வைத்துப் பயிர் செய்தால், உள்ளக் கிளர்ச்சி எவ்வளவோ உண்டாகும்; வாழ்க்கை எவ்வளவோ நலம் பெற்றுத் திகழும். கிராமங்களைச் செம்மைப்படுத்தினுல்,

"எக்கால மும்பெரு மகிழ்ச்சி யங்கே
எவ்வகைக் கவலையும் போரு மில்லை."

—பாரதியார்

4. கிராம வாழ்க்கை

"ஒழுக்கம் விழுப்பந் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்."

என்று கூறியுள்ளார் நமது தமிழ் நாட்டுப் பொய்யா மொழிப் புலவர். நம் நாட்டிலுள்ள எல்லாச் சமயங்களும் நல்லொழுக்கத்தின் அவசியத்தை மிகவும் வற்புறுத்திக் கூறியுள்ளன. பௌத்த மதத்திலே ஒழுக்கத்திற்கே பிரதானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவம், இஸ்லாம் முதலிய மதங்களும் ஒழுக்க வாழ்க்கை மிகவும் அவசியம் எனத் தெள்ளிதின் உரைத்துள்ளன.

அப்படி இருந்தும், எம்மதத்தினராயினும் கிராமங்களில் வாழ்வோர் பலர் ஒழுக்க ஈனர்களாய் இருத்தல் வருத்தத்தைத் தரத்தக்க தொன்று. இந்திய நாட்டினரே, கற்றறிந்தோராயினும் சரி, மற்றையரே ஆயினுஞ் சரி, பொதுவாக, உயரிய சீரிய வாழ்க்கையினின்று வழுக்கி விழுந்தவராய் இருக்கின்றனர். பல சிறந்த மதங்கட்குப் பிறப்பிடமான நமது நாட்டு மக்களின் வாழ்க்கை குறைபாடுடையதாய் இருப்பது இந்தியாவின் துரதிர்ஷ்டமே ஆகும். விழுத்தக்க ஒழுக்கம் குறைந்திருப்பதன் முக்கியக் காரணம் நாம் அந்நியராட்சி

யில் அடிமைப்பட்டிருத்தலேயாகும். அடிமைப் பட்ட எந்தச் சமூகமும், தன் மதிப்பின்றித் தன் நலத்தைப் பேணுது, வாழ்க்கையின் உயரிய இலட்சியங்களை மறந்துவிடுமென்பது சரித்திர ஆராய்ச்சியாளர் கூறும் ஓர் உண்மை. ஆதலால், ஒவ்வோர் இந்தியனும் தன்னாட்சி பெற முயல வேண்டும்.

நமது நாட்டிலே இப்போது பழைய மதக் கட்டுப்பாடுகளும், சட்ட திட்டங்களும் தங்கள் வலிமையை இழந்து நிற்கின்றன. கடவுளின் தண்டனைக்குப் பயந்து நல்வழியில் நடந்தோர் பலர்; சாதிக் கட்டுப்பாட்டுக்கு அஞ்சிச் செவ்விதின் வாழ்ந்தோர் பலர். அவ்விரண்டு விதப் பயமும் பெரும்பாலாருக்கு இப்போதில்லை. மேல்நாட்டு வாழ்க்கைக் கொள்கைகளும், நீதி அபிப்பிராயங்களும் துரிதமாகப் பரவுகின்றன. வரம்பு மீறிச் செல்லொணுது மேல்நாட்டாரைத் தடுக்கும் கல்வியறிவு நம் நாட்டில் இல்லை. எனவே, புது வாழ்க்கை முறைகளைப் பின் பற்றி, கடிவாளம் இல்லாக் குதிரையே போன்று, மேலும் கீழும் போய்த் திரிவாரின் எண், நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

நகர வாசிகளின் வாழ்க்கை ஒரு புறம் இருக்க, கிராம வாசிகளின் வாழ்க்கை மிக

மோசமாய் இருக்கிறது. 'சோம்ப ரென்பவர் தேம்பித் திரிவர்,' என்பது யாவரும் அறிந்த ஓர் அறிவுரை. சோம்பல் பல பிணிகளையும் வறுமையையும் சுமந்து வரும் மரக்கலமென ஓர் அறிஞர் கூறியுள்ளார். ஆண்டொன்றில் சில நாட்களையன்றி, ஏனைய நாட்களில் பலர் வறிதே திண்ணைகளிலும், தெருச் சந்திகளிலும் உட்கார்ந்து, வீண் பேச்சுப் பேசிப் பொழுது போக்குகின்றனர்; அல்லது சீட்டு ஆட முனை கின்றனர்; நாளடைவில் சீட்டாட்டத்தில் (Card playing) பணம் வைத்தாடவும் பழகிவிடு கின்றனர். என்னே இவர்தம் அறியாமை!

இவர்கள் மனத்திற்கு வேறு வேலையில் லாததால் அற்ப விடயங்களைப் பெரியவெனக் கொண்டு இடர்ப்படுகின்றூர்கள். பல கிராமங் களில் ஒற்றுமை என்பது உரை மருந்துக்குக் கூடக் கிடையாது. ஆதலால், சமாதான உணர்ச்சியின்றி வீண் வெகுளியும் பொறாமை யும் விருத்தியடைகின்றன. தங்களூரிலேயே சிரமமின்றி ஒழுங்குபடுத்திக்கொள்ளக்கூடிய சிறு விடயங்கட்கெல்லாம் வழக்கு மன்றங்கட் குப் போய், அரிதின் தேடிய பொருள்களை எல்லாம் வறிதே விழலுக்கு இறைத்த நீரே போல வாரி இறைக்கின்றனர். நகரங்களில் பெரிய அழகிய பங்களாக்களில் இந்திர

போகத்துடன் வாழும் நியாய வாதிகளின் (Lawyers) வாழ்வு, கிராமங்களில் நூற்றுக் கணக்கான குடும்பங்கள் அழிந்ததனால் உண்டானது அன்றோ ? நல்ல செல்வ நிலையிலிருந்த எத்தனையோ குடும்பங்கள் கோர்ட்டு ஏறிச் செலவு செய்தமையால் அழிந்தொழிந்தன. கிராம மக்களே, இனியாவது கண் விழியுங்கள். மூடத்தனமான ரோஷத்தையும் மாற்சரியத்தையும் விட்டுவிடுங்கள். கிராமங்களிலேயே உறவினர்களைக் கொண்டோ, பஞ்சாயத்தினரைக் கொண்டோ உங்கள் விவகாரங்களைத் தீர்த்துக்கொள்ளுங்கள் ; உயிரிருக்கும் போதே பிடுங்கித் தின்னும் நகரக் கழுகுகட்கு இரையாகாதீர்கள்.

கிராமங்கள் மூடத்தனமான பல பழக்க வழக்கங்கட்கு உறைவிடமாய் இருக்கின்றன. நம் நாட்டில் உள்ள பழக்கங்கள் பல அறிவுக்குப் பொருத்தமானவையல்ல. ஆடம்பரத்தையும் தற்பெருமையையும் விரும்பிய சிலர் சுபாசுப காரியங்களில் அளவு கடந்த செலவு செய்கின்றனர். அதுதான் கௌரவம் என்ற தப்பெண்ணம் உலவுகிறது. அப்படிச் செலவு செய்வது கைப்பணத்தை அன்று ; வீட்டையோ, நிலத்தையோ அடகு வைத்துப் பெரும்பாலும் அதிக வட்டிக்குப் பணம் வாங்

சிச் செலவு செய்துவிடுகின்றனர். பிறகு கடன் கொடுக்க வழி இருப்பதில்லை. வட்டியும் அதிகரித்துவிடும். 'வட்டிக்குத் தூக்கம் இல்லை,' என்று சொல்லுவார்கள். சிறு தொகையாக வாங்கிய கடன் சில வருஷங்கள் கழித்து வட்டியும் முதலுங் கூடிப் பெருந்தொகையாய், சொத்தையெல்லாம் விழுங்கிவிடும். இது நாள் தோறும் கிராமங்களில் காணக் கூடிய ஒரு கோரக் காட்சி. கடன் கொண்ட அவர்கள் நெஞ்சம் போல வருத்தும் நரகம் வேறில்லை. அதனாலேதான் 'கடன் கொண்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்,' எனப்புலவர் உவமை கூறியுள்ளார். என்னே அறியாமை! மாந்தர் தம் வருவாய்க்கும் இயல்புக்கும் தக்கச் செலவிடாததால் வரும் தீமை அன்றோ இது!

"ஆன முதலில் அதிகஞ் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்குங் கள்ளனாய் யாவர்க்குந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு."

என்பது உயர்ந்த நல்லுரையன்றோ?

நகைப் பித்து இல்லாதவர் கூட இருப்பரோ என எண்ணும்படி கிராம வாசிகளில் அநேகமாக எல்லோரும் நகைகள் அணிவதில் பேரவாவுடையவராய் இருக்கின்றனர். ஓர்

ஆடவனுக்கோ பெண்ணுக்கோ இயற்கையில் வனப்பின்றேல் நகைகள் எத்தனை பூட்டினும் பயனின்று. இயற்கையில் எழிலிருப்பின், 'யாரே அழகுக்கழகு செய்வார்?' கிராமங்களில் பெண்களேயன்றி ஆடவருங்கூட நகை மோகங் கொண்டவர்களாய் இருக்கிறார்கள். வைரக்கடுக்கன், கைச்சங்கிலி முதலியவைகளில் பண விரயஞ்செய்யும் ஆடவரும் பலருளரெனின், அவர் அறியாமையை என்னென்று கூறுவது! இந்தியாவில் நகைகளின் உருவமாய் இருக்கும் பணத்தைத் திரட்டினல் எத்தனையோ கோடி ரூபாய் ஆகும்; எத்தனையோ பெரிய ஆலைத்தொழில்கள் தொடங்கற்கான முதல் ஆகும்; லக்ஷக்கணக்கான மக்களின் பசிப்பிணி தீரும். அப்படியின்றி, நகைகளின் உருவமாய் மாதர் காதுகளிலும் கழுத்திலும் தொங்குவதிலென் பயன்? அணிகலன்களாகப் போட்டுத் தேய்வதில் சேதாரம் ஆண்டொன்றுக்கு எத்தனையோ ஆயிர ரூபாய் மதிப்பெனச் சில அறிஞர் கூறுகின்றனர். ஆபரணங்கள் செய்வதும் கைப்பணத்தால் அல்ல. கலியாணம் முதலிய சந்தர்ப்பங்களில், கடன் வாங்கியே பலர் நகை செய்கின்றனர். நகைகள் கழுத்தில் தேய்ந்துகொண்டு ஒருபுறமிருப்ப, மற்றொரு புறம் வட்டி வளர்ந்து

கொண்டே வரும். பிறகு அந்நகைகளையே அன்றி, வேறு சொத்தின் சில பாகங்களை யேனும் கடன் தீர்க்க வேண்டி இழத்தல் நேரிடும். இதை உன்னிப் பாராது இன்னற் படுவோர் எத்தனையோ பேர்! நற்சடங்கு களின் போதும், தீய சடங்குகளின் போதும் அபாரச் செலவிடுவதும், நகைகட்கென ஆயிரக்கணக்கான பொருள் செலவிடுவதும் நில்லாத வரையில் நம் நாட்டு மக்கள் இனிய வாழ்க்கையை நடத்தல் இயலாத காரியம்.

எனவே, நமது நாட்டுக் கிராம மக்கள் தாங்களாகவே நல்வாழ்வு நடத்தலை இலட்சிய மாகக்கொண்டு சிறப்புற வேண்டும். வாழ்க்கை முற்றிலும் சுகமுடையதாய் இருக்க வேண்டு மானல், நேரிய வாழ்க்கையையே கைப்பிடித் தல் வேண்டும். நெறி தவறிய வாழ்க்கை யானது, நல்லது போலத் தோற்றினும், பின் பல அல்லல்கட்கு வித்தாகும். வீண் பொழுது போக்கலை அறவே ஒழித்து, விவசாயத்தில் ஈடுபட்ட காலம் போக, ஏனைய காலங்களில் ஏதாவது வீட்டிலேயே செய்யக்கூடிய கைத் தொழிலில் பொழுதுபோக்க வேண்டும்; சில நேரத்தை வாசக சாலைகளில் அறிவு விருத்திக் கெனச் செலவிட வேண்டும். பல வேலையும் செய்ய முன்வர வேண்டும். இவற்றைச் செய்

யும் அன்றே நம் பாரத மாதா விடுதலை அடைவாள்.

“ மண்ணெடுத்துக் குடங்கள்செய் வீரே!
மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே!
உண்ணக் காய்கனி தந்திடு வீரே!
உழுது நன்செய்ப் பயிரிடு வீரே!
எண்ணெய் பால்நெய் கொணர்ந்திடு வீரே!
இழையை நூற்றுநல் லாடைநெய் வீரே!
விண்ணி னின்றெமை வானவர் காப்பார்;
மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே!”

—பாரதியார்

கிராமக் கல்வி

"கல்லாத மூடரைக் காணவும் ஆகாது;
கல்லாத மூடர்சொல் கேட்கக் கடன் அன்று;
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லாராம்;
கல்லாத மூடர் கருத்துஅறி யாரே."

என்று தமிழ் நாட்டிலே பேரறிஞராய் இருந்த திருமூலர் கல்வி அறிவில்லாத மனிதரை மிக வன்மையாகக் கண்டித்திருக்கிறார். மனிதர்கட்கும் மிருகங்கட்கும் உள்ள வித்தியாசம் பகுத்தறிவே. மக்கள் அப்பகுத்தறிவைக் கல்வியால் பிரகாசிக்கச் செய்ய வேண்டும். உலகத்தில் சுக வாழ்க்கையை விரும்பாதார் எவரும் இலர். அச்சுக வாழ்வைப் பெறக் கல்வியறிவு இன்றியமையாததாகும். எத்துணைச் செல்வ முதலியன பெறினும், கல்வியறிவில்லாதாருடைய வாழ்க்கை சிறப்புடைத்தாய் இராது. நல்லது தீயது அறிந்து செவ்வையாகவாழ்க்கையை நடத்தக் கல்வியறிவு அவசியம்; ஊர் உலக விவகாரங்களை அறிந்து உலகத்தோடு ஒட்ட ஒழுகற்குக் கல்வியறிவு இன்றியமையாதது. கல்வியறிவில்லாத ஒருவனை மோசம் நிறைந்த இவ்வுலகம் எளிதில் ஏமாற்றிவிடும். எனவே, தற்காப்புக்கும், தன் நலத்திற்கும் ஒவ்வொருவனும் கற்றல் வேண்டும். ஆதலாற்றான்,

"கேடில் விழுச்செல்வம் கல்வி ; ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை."

என வள்ளுவர் மொழிந்துள்ளார்.

அடுத்த பக்கத்திற்காணும் அட்டவணையி லிருந்து இந்தியா கல்வியறிவில் எவ்வளவு தாழ்ந்திருக்கிறது என்பதைச் சுலபத்தில் அறியலாம்.

கிராம வாசிகளில் அநேகமாக எல்லோரும் நிரட்சர குக்ஷிகளாய் இருக்கிறார்கள். உலகப் போக்கோ, நாட்டுப் போக்கோ, அவர்கட்குச் செவ்வையாகத் தெரிவதில்லை. பழைய மூட வழக்கங்களும் குருட்டு எண்ணங்களும் அவர்களை வறுமையிலும் துன்பத்திலும் அமிழ்த்தி வைத்துள்ளன. அறிவு இல்லாமையால், கண் மூடித்தனமான வாழ்க்கையை நடத்திக் கடன் சுமையை மேலும் மேலும் அதிகரிக்கச் செய்து, இன்னல்களைப் பெருக்கிக் கொண்டு, அவர்கள் வாழ்கிறார்கள் ; கல்வி அறிவு இல்லாமையால் புதிய விவசாய முறைகளை அறிந்து அநுஷ்டிக்க இயலாதவர்களாய் இருக்கிறார்கள். எத்தகைய நிலைத்த சமூக, பொருளாதாரச் சீர்திருத்தத்தையும் செய்ய, அறியாமையானது ஒரு பெருந்தடையாய் இருக்கிறது. சீர்திருத்தத்திற்கு அடிப்படையானது அறிவுடைமை அன்றோ?

தேசம்	கல்வியறிவு நிலை			
	வருஷம்	ஜனத்தொகை (மில்லியனில்)		நூற்று விகிதம்
		மொத்தம்	படித்தவர்	
அகில இந்தியா	1931	353	28	8
பிரிட்டிஷ் இந்தியா	1931	272	22·7	8·5
இங்கிலாந்து	1921	42·7	32·5	76·1
அமெரிக்கா (U S.A.)	1920	105·7	79	74·5
கனடா	1921	8·8	6·3	71·6
ஜெர்மனி	1925	62·4	50·2	80·5
பிரான்சு	1926	40·2	32 2	80·1
ஜப்பான்	1925	59·7	42·8	71·7.

அநேக கிராமங்களில் சிறுவர் கல்வி கற்ப தற்கு ஏற்ற சௌகரியங்கள் இல்லை. அநேக சிறு கிராமங்களில் பள்ளிக்கூடம் இல்லை. அக்கிராமங்களில் உள்ளோருக்கு மிக இளஞ் சிறுவர்களை அதிக தூரம் படிப்புக்கென அனுப்புவது கஷ்டமாய் இருக்கிறது. இப்போ துள்ள புதிய கல்வித் திட்டம் புகுவதன் முன்னே, அநேகமாக ஒவ்வொரு கிராமத் திலும் ஒரு சிறு பள்ளிக்கூடம் இருந்தது. அப் பள்ளிக்கூடங்கட்குப் பெரிய கட்டடமோ, அர சாங்கத்தினர் உபகார நிதியோ, தேவையாய் இருக்கவில்லை. படிப்பதற்கான பொருட் செலவும் மிகக் கொஞ்சம். அதற்குச் சில நூற்றாண்டுகட்கு முன் பார்த்தால் ஒவ்வொரு கோயிலிலும் ஒரு மண்டபத்திலே கல்விச் சாலை நடைபெற்றது எனக் காணக் கிடக் கிறது. அப்போது பல இடங்களில், கோயில் வருமானத்தைக்கொண்டே அந்தப் பள்ளிக் கூடங்கள் நடைபெற்றன என்பது எண்ணக் கிடக்கிறது.

அக்காலமெல்லாம் மலையேறிப் போய் விட்டது. தனிப்புட்டோர் நடத்தும் சில பள்ளிக்கூடங்கள் தவிர, ஏனையவை அரசின ரும் ஜில்லா ஆட்சிக் கழகத்தினரும் நடத்தும் பள்ளிக்கூடங்களே. கிராமத்தினர் அப்பள்

ளிக்கூடங்களில் ஊழல் இருக்குமானால், கண்டிக்க அசக்தர்களாய் இருக்கிறார்கள். ஆட்சியாளர் கண்காணிப்பு எப்போதும் இருக்க முடியுமா? 'குரு' என்னும் பக்தியுடனும் ஆர்வத்துடனும் உபாத்தியாயரைப் போற்றும் நாள் இஃதன்று. உபாத்தியாயரிற் பெரும்பாலார் நாட்டு மக்கட்குச் சேவை செய்ய வேண்டுமென்னும் சீரிய குறிக்கோள்கொண்டு சமூகப்பணி செய்ய உற்சாகத்துடன் முன்வராமல், 'கூலிக்கு மாரடிக்கும்' கூட்டத்தில் சேரத் தொடங்குகின்றார்கள். ஆசிரியர்கள் பொது ஜனங்களின் மதிப்புக்குப் பாத்திரர்களாக நடந்துகொண்டு, தன்னலமற்று, ஊதியத்தைப் பெரிதெனக் கொள்ளாது, புதுமுறையில் பல அரிய விஷயங்களைப் போதித்தாற்றான் இந்தியா முன்னேற்றமடையும்.

கிராம வாசிகட்கென ஒரு கல்வித் திட்டம் வகுப்பது அவசியம். இப்போதுள்ள கல்வி முறைகளும், சொல்லிக் கொடுக்கும் பாடங்களும் பெரும்பாலும் நகரமாந்தர்க்கென வகுக்கப்பட்டவை. அமெரிக்க கல்வி பீரோ குறிப்பிடுவதாவது, 'அமெரிக்க கல்வியில்மிகச் சிக்கலானது கிராமப் பள்ளிக்கூடப் பிரச்சினையே,' என்பது. எனவே கிராமங்கட்கெனக் கல்வித் திட்டத்தை மிக்க ஆலோசனையுடன்

ஏற்பாடு செய்ய வேண்டும். அங்ஙனம் ஏற்பாடு செய்யும்போது கண்ணை மூடிக்கொண்டு மேல் நாட்டு முறையை அப்படியே புகுத்தி விடக் கூடாது. ஜெர்மானியர் எல்லா நாட்டுக் கிராமக் கல்வி முறையையும் ஆராய்ந்து, தம் நாட்டுக்குத் தக்க எத்தனையோ சிறப்பியல்பு களுடன் கிராமக் கல்வித் திட்டம் வகுத்துள்ளனர். அதே போல நாமும் நம் நாட்டின் தனிப்பட்ட நிலைமைக்கேற்பக் கல்வித் திட்டம் ஒன்றை ஆக்கல் வேண்டும்.

கிராமக் கல்வித் திட்டமானது கிராம மக்களின் தினசரி வாழ்க்கையோடு ஒத்ததாய், அவர்கள் அடைந்த கல்வியறிவை வாழ்க்கை நலத்துக்கு உபயோகப்படுத்தத் தக்க தன்மைத்தாய் இருத்தல் வேண்டும். அவர்களுக்குப் போதிக்கப்படும் கல்வி அவர்களின் அறியாமையை ஓட்டுவதோடு குருட்டு எண்ணங்களையும் மூடப்பழக்க வழக்கங்களையும் அழிக்கத்தக்க திறனுடையதாய் இருத்தல் அவசியம். விரிந்த மனப்பான்மையும், காருணியமும், சமத்துவ உணர்ச்சியும் தலை சிறந்து நிற்றல் வேண்டும்.

“ அச்சமும் பேடிமையும்
அடிமைச் சிறுமதியும்
உச்சத்திற் கொண்டாரடி—கிளியே
ஊமைச் சனங்களடி.”

எனப் பாரதியார் கூறியபடி மூங்கைகளாய் இராது வீரர்களாய்த் திகழும்படி கல்வியறிவைப் பரப்பல் வேண்டும். சுதந்தர தாகம் மக்கட்கு வருதல் வேண்டும்; 'என் கடன் பணி செய்து கிடப்பதே,' என்னும் உணர்ச்சியும் வரல் வேண்டும்.

9 அல்லது 10 வயது வரையில் சிறு பையன்கட்கும், சிறு பெண்கட்குமெனத் தனித்தனியே பள்ளிக்கூடங்கள் இருத்தல் அவசியமன்று. பொதுவாக மொழியை அறிதற்கும் சிறு கணக்குகள் போடுவதற்கும் அந்த வயதிற்குள் பயிற்றுவிக்க முடியும். பிறகு ஆண் பிள்ளைகட்கு வாழ்க்கைக்கு இன்றியமையாத விஷயங்கள் போதிக்கப்பட வேண்டும். சுகாதார அறிவு அத்தியாவசியமானது. உடலைப்பற்றிய சில முக்கிய விஷயங்கள், சுக வாழ்க்கை முறைகள், நோயணுகா விதிகள், நோய்வரின் முதலில் செய்ய வேண்டிய காரியங்கள், முதல் உதவி (First Aid) முதலியன கற்பிக்கப்படல் வேண்டும். நமது நாட்டுச் சரிதமும், கிரீஸ், ரோம், இங்கிலாந்து நாட்டுச் சரிதங்களில் முக்கிய அமிசங்களும் போதிக்கப்படல் அவசியம். அந்நாட்டு வரலாறுகளைப் போதிக்கையில் அந்நாட்டு மக்களின் வீரம், சுதந்தர உணர்ச்சி, ஜன

நாயக ஆட்சி வளர்ச்சி இவைகளை நன்கு விளக்கிக் காட்ட வேண்டும். மேலும், நவீன விவசாய முறைகளை நன்கு கற்பிக்க வேண்டும். ஒவ்வொரு பள்ளிக்கூடத் தோட்டத்திலேயும் எல்லாச் செடி கொடிகளையும் எப்படிச் சாஸ்திரீய முறையில் பயிரிடுவதென்பதை நேரில் காட்ட வேண்டும். பிள்ளைகளைச் சமீபத்திலிருக்கும் மாதிரிப் பண்ணைகட்கு (Demonstration farms) அழைத்துக்கொண்டு போய்க் காட்ட வேண்டும். ஒவ்வொரு பிள்ளைக்கும் - ஒன்றோ அல்லது பலவோ - கைத்தொழில்கள் கற்பிக்கப்படல் அத்தியாவசியம்.

பெண்களுக்கோ, பொது அறிவுக்கல்வியுடன் சுகாதாரம், முதல் உதவி இவைகளைப் போதித்தல் வேண்டும். ஆண் பிள்ளைகட்குக் கற்பிக்கப்படும் சரித்திரத்தோடு, பல நாட்டு வீரப் பெண்மணிகளின் சரிதமும், சமூகசேவையிற் சிறந்த பெண் ரத்தினங்களின் வரலாறும் நன்றாகக் கற்பிக்கப்படல் வேண்டும். வீட்டுச் சீரமைப்பு (Domestic economy), குழந்தைகளின் பராமரிப்பு, சிறு சட்டை முதலிய தைத்தல், பின்னல் வேலை, சமையல் வேலை சிறு வியாதிகட்கு வைத்தியம்செய்தல் முதலிய இல்வாழ்க்கைக்கு இன்றியமையாத பல விஷயங்களைத் தெளிவுறப் போதிக்க வேண்டும்.

" சாத்தி ரங்கள் பலபல கற்பராம்
சஷ்தி யங்கள் பலபல செய்வராம்
மூத்த பொய்ம்மைகள் யாவும் அழிப்பராம்
மூடக் கட்டுகள் யாவும் தகர்ப்பராம்
காத்து மானிடர் செய்கை அனைத்தையும்
கடவு ளர்க்கினி தாகச் சமைப்பராம்
ஏத்தி ஆண்மக்கள் போற்றிட வாழ்வராம்
இளையநங்கையின் எண்ணங்கள் கேட்டிரோ !"

எனக் கூறியுள்ளபடி புதுமைப் பெண் சிறந்த தாயாய், வீராங்கனையாய், அறிவிற் சிறந்தவளாய் இருக்கத்தக்க கல்வியறிவு புகட்டப்படல் மிக அவசியம். அப்போதுதான் நாடும் சுகமுறும்; வருங்கால ஆடவரும் சிறப்புறுவர்; வாழ்க்கை நலமும் ஓங்கும்.

கிராமங்களில் பல வாலிப ஆடவரும் பெண்டிரும் கல்வியறிவு பெறாது தம் இளமையைக் கழித்துவிட்டனர். அவர்களின் நன்மைக்காக அவர்கட்கு ஓய்வு இருக்கும் நேரங்களிலே பாடம் சொல்லிக்கொடுக்க வேண்டும். இந்த முயற்சியில் வேலை இல்லாமல் இருக்கும் படித்த இளைஞரும், உபகாரச் சம்பளம் பெற்றவர்களும் பெரிதும் வேலை செய்யலாம். அவர்களுடைய அறிவு விருத்திக்காகப் படங்காட்டும் விளக்குகளை (Magic lanterns) உபயோகப்படுத்தி அறிவு விளக்கப்படங்கள் காட்டுதல் மிக நன்று.

ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலே படித்து அத்துடன் நிறுத்திவிடுபவர் பலர், தாம் கற்ற யாவற்றையும் மறந்துவிடுகின்றனர். 'தொட்டனைத்து ஊறும் மணற்கேணி ; மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு,' என்றபடி படிக்கப் படிக்க அல்லவோ அறிவு விசாலமாகும்? அதற்கு இப்போது போதிய சாதனங்கள் இல்லையென்பது உண்மை. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு வாசகசாலையேனும் இருத்தல் வேண்டும். ஒரு நூல் நிலையம் (புத்தக சாலை) அவசியமாக நிறுவப்படல் வேண்டும். இவ்விரண்டிற்கும் அரசாங்கத்தார் பெரிதும் பொருளுதவி செய்தல் அவசியம்.

விவசாயிகள் முக்கியமாக அறிய வேண்டிய விஷயங்களைத் தெளிவாக எளிய நடையில் எழுதி வெளியிடும் வாரப்பத்திரிகை ஒன்று தொடங்கப்படல் வேண்டும். அதனை ஒவ்வொரு கிராம வாசியும் படித்து அறிய வேண்டும்.

மேலும் மேலும் புத்தம்புது அறிவு நுட்பங்களை ஆகாச வசனி (Radio) மூலமாகப் பரப்புதல் எளிது. இந்திய கவர்ன்மெண்டார் பெரிய ஒலி பரப்புத் திட்டம் ஒன்று போட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு கிராமமும் ஓர் ஆகாச வசனியை (Radio set) உபயோகப் படுத்த வேண்டுமென்பது அவர்களது விருப்

பம். பல புதிய விஷயங்களை அறிந்துகொள்ள உதவுவதோடு, மிக ரம்மியமான கானங்களைக் கேட்டு வாழ்க்கையை மனோகரமாக்கிக்கொள்ளவும் அது பெரிதும் பயன்படும்.

அஃதேயன்றி, சிறு துண்டுப் பிரசுரங்கள் மூலமாயும், சுவரொட்டி விளம்பரங்களாலேயும், பஜனைக் கோஷ்டிகள் மூலமாயும், சங்கங்கள் மூலமாயும், சொற்பொழிவுகள் மூலமாயும், சிறு நாடகங்கள் மூலமாயும், கண் காட்சிகள் வாயிலாயும், தனிப்படத் தயாரித்த பேசும் படக் காட்சிகளின் உதவியாலும், பல அரிய விஷயங்களைக் கிராம மக்களுக்குப் போதிக்க ஒவ்வோர் இந்தியனும் தன்னுலியன்ற உதவி செய்ய வேண்டும்.

உடல் நலனையும் சரீர விருத்தியையும் கவனியாத எந்தக் கல்வித் திட்டமும் பழுதுபட்டதே ஆகும். நெஞ்சுலர்ந்து, உடல் வாடி, கண் குழிந்து, மெலிந்து இராதவாறு உடல் வலிவு பெற அநேக விளையாட்டுகளும், தேகப் பயிற்சிகளும் ஒவ்வோர் ஆணுக்கும் பெண்ணுக்கும் கற்பிக்கப்படல் வேண்டும்.

"உடம்பா ரழியில் உயிரார் அழிவர்;
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்;
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன்; உயிர்வளர்த் தேனே."



கிராமச் சிறுர்களின் கேவல நிலை இது

[பக்கம் 58]

என்ற திருமூலர் திருமந்திரத்தைப் பொன்னே போலப் போற்ற வேண்டும்.

எனவே, முன் கூறியபடி பல வேறு வழிகளாலும் அறிவின்மையை அகற்றவேண்டும். சிறந்த வாழ்க்கை இலட்சியங்களை மக்கள் கைக்கொள்ளுமாறு செய்ய வேண்டும். வாழ்க்கையை இன்பமுடையதாக ஆக்கிக்கொள்ள வேண்டும். அரசினரும், தனவந்தரும், படித்தவரும் ஒரே மனத்தினராய் அஞ்ஞானப் பேயை அடித்துத் துரத்த வேண்டும்.

"நிதிமி குத்தவர் பொற்குவை தாரீர் !
நிதிகு றைந்தவர் காசுகள் தாரீர் !
அதுவு மற்றவர் வாய்ச்சொல் அருளீர் !
ஆண்மை யாளர் உழைப்பினை நல்கீர் !
மதுரத் தேமொழி மாதர்கள் எல்லாம்
வாணி பூசைக்கு உரியன பேசீர் !
எதுவும் நல்கிஇங்கு எவ்வகை யானும்
இப்பெ ருந்தொழில் நாட்டுவம் வாரீர் !"

6. கிராமப் பெண்கள்

“ மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின், வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்.” —திருவள்ளுவர்

ஓர் இல்லத்தை மேம்பாடுடையதாக்கு வோர் பெண்டிரே. நல்ல குணம் செயல் உடைய பெண்ணால் இல்வாழ்க்கை சிறப் புடைத்தாகும்; வாழ்க்கை நலம் பெருகும். அதனாற்றான் ‘ இல்லாள் அகத்து இருப்ப இல் லாதது ஒன்றில்லை,’ என்றும், ‘பொற்றாலியோ டெவையும் போம்,’ என்றும் ஆன்றோர் கூறியுள்ளனர். இல்வாழ்க்கை என்னும் சக டத்தை ஆண் பெண் என்னும் இரண்டு பகடு களும் இழுத்துச் செல்ல வேண்டி இருப்பதால், இருவரும் ஒத்த நலனும் ஒத்த செய்கையும் உடையராய் இருத்தல் வேண்டும்.

கண்ணகி, சாவித்திரி முதலிய மாது சிரோமணிகள் வாழ்ந்த இந்நாட்டில் பெண் கள் இப்போது மிகத் தாழ்ந்த நிலையிலிருக் கிறார்கள். கல்வியறிவோ, மிகப் பூஜ்யம். நல்ல பழக்க வழக்கங்கள் அவர்கட்கு இருப்பது அரி தாய் இருக்கிறது. உடல் நலமோ, மிக மோச மாய் இருக்கிறது. பெண்களோ, மிகச் சிறு வயதிலேயே விவாகம் செய்யப்படுவதால், அவர்

கள் வாழ்க்கையின் கம்பீரத்தையும், நலனை யும் இழக்கிறார்கள். ஆடவர்களோ, பெண்கள் தங்களது மிருக உணர்ச்சியைத் திருப்தி செய்யவும் பிள்ளை பெறும் கருவிகளாய் இருக்கவும் வேண்டுமென எண்ணுகிறார்கள். இந்த மனப்பான்மை அடியோடு ஒழிய வேண்டும்.

10 வயதிற்குள் ஆண் குழந்தைகள் 1000 இருந்தால்பெண் குழந்தைகள் 940 தான் இருக் கின்றன என 1931-ஆம் வருஷம் எடுத்த சன சங்கியை (Census) மூலம் அறிகிறோம். அந்த வயதில் பெண் குழந்தைகளின் எண் இந்தியா வில் குறைந்திருப்பதன் காரணம், பல தாய் தந்தையர் பெண் குழந்தையை விரும்பாததே ஆகும். தாழ்ந்த வகுப்பினர்களேயன்றி, உயர்ந்த வகுப்பினர்களாகிய ஜாதர்கள்,காத்தி ரிகள், குஜார்கள், ராஜபுதனியர் (Jats, Khatris, Gujars, Rajputs) முதலிய வகுப்பினர்களுங் கூடப் பெண் குழந்தைகளைக் கொன்றுவிடுகின் றார்கள்; அல்லது கவனக் குறைவால் இறக் கும்படி செய்கின்றார்கள் என்று பலர் எண்ணு கின்றனர். எனவே, பெண்களை எவ்வளவு தாழ்வாகப் பலர் எண்ணுகின்றனர் என்பது புலப்படும். கொஞ்சம் பெரிய பெண்கள் ஆனதும் கலியாணம் ஏற்படுத்துவதால், பல

பெண்கள் எமனுக்கு இரையாகின்றார்கள். பரோடா சன சங்கியை சூப்பரின்டெண் டெண்டு, "அநேக குழந்தை மனைவிகள் சாந்தி முகூர்த்தக் கட்டிலிலிருந்து பாடை ஏறுகிறார்கள். நரம்புப் பலவீனமும், காச நோயும், நீர்த்தாரையும், கருப்பை நோய்களும் அநேகரை வாட்டுகின்றன," என்று குறிப் பிட்டிருக்கின்றார். எனவே, நமது சமூகம் பெண் மக்களுக்கு எவ்வளவு தீங்கு இழைக்கிற தென்பதை உன்னும்போது மனம் பெரிதும் வாடுகின்றது.

'கோஷா' அல்லது 'புருதா' என் னும் கொடிய பேய் நம் நாட்டில் உலவுகிறது. அவ்வழக்கம் பெண் மக்களின் உடல் நலத் துக்கு எவ்வளவு தீங்கு இழைக்கின்றதென் பதைக் கற்றறிந்தவர்கள்கூட உய்த்துணருவ தில்லை. நல்வினைப்பயன் காரணமாகத் தென் இந்தியாவில் இப்பழக்கம் அதிகமாக இல்லை. ஏனெனில், இப்பழக்கத்துக்குக் காரண பூதர் கள் மகம்மதியர்கள். அவர்கள் ஆதிக்கம் தென் இந்தியாவில் அதிகமில்லாமையால், அப்பழக் கம் தென் சில்லாக்களில் அதிகமாக நிலவி நிற்கவில்லை. எனினும், பல குடும்பங்களில் பெண்களை வீட்டினுள்ளேயே போட்டு அடைத்து வைக்கும் பழக்கம் இன்றும் இருக்

கிறது. 'சிறை காக்கும் காப்பு எவன் செய் யும்? மகளிர் நிறை காக்கும் காப்பே தலை,' என்ற உண்மையை நம்மக்கள் நன்கு உணர்ந் தால், இப்பழக்கம் நாளடைவில் அழிந் தொழிந்து போகும்.

இந்தக் காலத்திலும் பெண்கட்குக் கல்வி ஏதுக்கு என்று சொல்லும் மக்களும் இருக் கிறார்கள். பண்டைத் தமிழ் நாட்டிலே எத் தனையோ பெண்மணிகள் சிறந்த கல்வியறிவு பெற்றிருந்தார்கள். ஔவையார், காக்கை பாடி னியார், காவற்பெண்டு, பாரிமகளிர், பேய்மகள் இளவெயினி, கழாற்கீரன் எயிற்றியார், காமக் கணிப் பசலையார், நக்கண்ணையார், நல் வெள்ளியார், நப்பசலையார், வெள்ளி வீதியார், காமக் கண்ணியார் முதலிய கல்வி அறி வில் தலை சிறந்த பல பெண் இரத்தினங்களை இத்தமிழ் நாடு பயந்தெடுத்திருக்கிறது. இடைக் காலத்திலேதான் பெண்கல்வி குன்றிவிட்டது. மேல் நாட்டு நாகரிகம் சற்றுப் பரவிய பின்பு தான் மறுபடியும் பெண் கல்வி புத்துயிர் பெற்று எழ ஆரம்பித்திருக்கிறது.

"புதுமைப் பெண்ணிவள் சொற்களும் செய்கையும்
பொய்மை கொண்ட கலிக்குப் புதிதன்றி,
சதும றைப்படி மாந்தரி ருந்தநாள்
தன்னி லேபொது வானவ ழக்கமாம்:

மதுரத் தேமொழி மங்கையர் உண்மைதேர்
மாதவப்பெரி யோருடன் ஒப்புற்றே
முதுமைக் காலத்தில் வேதங்கள் பேசிய
முறைமை மாறியிக் கேடு விளைந்ததாம்.''

எனப் பாரதியார் கூறியுள்ளபடி, பெண்கள் படிப்பதும், சிறந்த அறிஞர்களோடு உயர்ந்த விஷயங்களைப் பற்றி அளவளாவுதலும்; உயர்ந்த பல அரிய கருத்துகளடங்கிய நல் லுரைகள் கூறுவதும் பண்டைப் பெண் மக்களின் செய்கைகளாய் இருந்தன. அந்தப் பண்டை முறைகளைப் புதுப்பிக்க வேண்டும். அப்படிச் செய்தால், இல்லங்கள் சுவர்க்கங் களாக மாறும். சிறு வயதில் குழந்தைகள் தங்கள் தாய்மார்களுடனேயே நெருங்கிப்பழகி அவர்களுடைய கண்காணிப்பிலிருப்பதால், தாய்மார்கள் சிறந்த அறிவினராக இராவிட் டால் தங்கள் குழந்தைகளைச் சிறந்த அறிஞர் களாயும், வீரர்களாயும், சுதந்தர தாகமுடை யவர்களாயும், 'நாமார்க்கும் குடியல்லோம்,' என்ற தீர உணர்ச்சி உடையவர்களாயும் திக ழும்படி செய்ய எப்படி முடியும்? 'ஈன்ற பொழுதிற் பெரிது உவக்கும் தன் மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய்,' என்றபடி தன் மகன் மிக மேதாவியாய் எல்லாராலும் புகழப்பட வேண்டும் என்ற ஒரு பெருவிருப்

யையே உடைய தாய் கல்வியறிவில்லாதவளா யிருந்தால், ஈன்ற பொழுதைவிடப் பெரிது உவக்கும் சந்தர்ப்பம் வாழ்க்கையில் இராது போயினும் போகும்.

இந்திய மக்கள் ஒழுக்கத்தை உயிரைவிட மேலாகக் கருதும் சீரியர்கள். ஆடவர்களோ, தாங்கள் ஒழுக்கத்தில் சிறிது வழுவினுலும் பெண்கள் ஓர் இம்மிகூடப் பிசகலாகாதெனும் பேராசை பிடித்தவர்கள். பெண்கள் நல்லது தீயது இன்னதென அறிந்து தக்க வழியில் நடப்பதற்குக் கல்வியறிவு இன்றியமையாதது. கட்டாயத்தினுலும் நிர்ப்பந்தத்தாலும் நல் வழியில் எவரேனும் நடந்தால், அது அத்துணைச் சிறப்புடையதன்று. தானுகவே நல் வழியில்ஒழுக வேண்டும் என்ற எண்ணத்துடன் நடத்தலே மிக மேம்பாடுடையது. அப்படிப் பட்ட எண்ணம் உண்டாவதற்குக் கல்வியறிவு அத்தியாவசியம். அங்ஙனமாக, பெண்களுக்குக் கல்வியறிவு புகட்டாது அவர்கள் மிக நல்ல நெறியில் நடக்க வேண்டுமென்பது 'குருடனை இராச விழி விழிக்கச் செய்தலை' ஒக்கும். 'இப்போது புதுக்கல்வி பெற்ற பெண்களிற் சிலர் ஒழுக்கமுடையராகக் காணப்படவில்லையே!' எனக் கூறலாம். அதற்குக் காரணம் அவர்கட்குப் புகட்டப்படும் அறிவு அத்துணைச் சிறப்

பினதாய் இராமையேயாகும். நல்ல அறிவு உண்டாகக்கூடிய முறையில் கல்வி போதிக்கப்படுமேயாயின், அது கற்றதனாலாய பயன் பெற உதவும்.

"கற்பக் கழிமடம் அஃகும்; மடம்அஃகப்
புற்கம்தீர்ந்து இவ்வுலகின் கோளுணரும்;
கோளுணர்ந்தால்,
தத்துவ மான நெறிபடரும்; அந்நெறி
இப்பால் உலகத்து இசைநிறீஇ, அப்பால்
உயர்ந்த உலகம் புகும்."

—நான்மணிக்கடிகை

பெண்கட்குப் புகட்டப்படும் கல்வி அவர்களை வீர மாதர்களாக்க வேண்டும். "என் மகன் புறமுதுகிட்டு இறந்துபட்டிருப்பானேல் நானும் இறப்பேன்!" எனப் போர்க்களம் சென்ற வீரப் பெண்மணியைப் போலும் பெண்கள் இந்தியா முழுதும் தோன்ற வேண்டும். "என் கணவனை அகாரணமாகக் கொன்ற அரசை அழிப்பேன்!" எனக் கர்ஜித்துச் சென்று தன் மறக் கற்பால் சிறப்புற்ற கண்ணகியைப் போலக் கோடிக்கணக்கான பெண்கள் இந்நாட்டில் பிறந்து வளர்ந்தாற்றான், "விட்டு விடுதலையாகி நிற்பாய் இந்தச் சிட்டுக் குருவியைப் போலே!" என்று செம்மாந்து

மகிழ்ந்திருக்கலாம் இந்திய மக்கள். இப்பெண்கள் வளர்க்கும் ஆண்களும் வீரந்திகழ்ந்து நிற்பார்களென்பதில் ஐயமுண்டோ?

பெரும்பான்மையான இந்திய பெண்கட்கு, அவர்களிலும் விசேஷமாகக் கிராமப் பெண்கட்கு உழைப்பு மிக அதிகம். திரு. பிரேயன் I. C. S. முதலியோர் இவ்வாறே அபிப்பிராயப்படுகின்றனர். பிள்ளைப் பேற்றுக்குமுன்பும், பிள்ளைப் பேற்றுக்குப் பின்பும் அவர்கட்குப் போதிய ஓய்வு இல்லை. அவர்கள் வீட்டில் செய்யும் வேலை முறையும் உடலுக்கு மிக்க வருத்தத்தைத் தரும் முறையே. இன்னும் குறைந்த நேரத்திலும் குறைந்த முயற்சியாலும் சமையல் முதலிய வேலைகளைச் செய்யத் தக்க சாதனங்களைத் தேட வேண்டும். "தக்க ஏற்பாட்டுடனும் தக்க உபகரணங்களுடனும் வேலை செய்தால், வீட்டு வேலை செய்வதைத் தொழிலாகக் கொண்டிராத ஓர் ஆசாமியும் சமையலுக்குத் தயார் செய்து, சமைத்து, பரிமாறி, சாப்பிட்டு, பாத்திரங்களைச் சுத்தி செய்து, ஒரு மணி நேரத்தில் முடித்துவிடலாம். நமது நாட்டுப் பெண்களோ, மிகச் சிறிய குடும்பத்துக்கும் பல மணி நேரம் வேலை செய்கிறார்கள். வீட்டுக் காரியஞ் செய்தல் (Domestic economy) ஒரு முக்கியப் பாடமாக ஒவ்வொரு

பள்ளிக்கூடத்திலும் கற்பிக்கப்பட வேண்டும். தனியே அதற்கெனப் பள்ளிக்கூடம் ஒன்றேனும் ஒவ்வொரு பட்டினத்திலும் இருக்க வேண்டும்,'' என்று திரு. சர். M. விசுவேஸ்வரய்யா எழுதி இருப்பது ஈண்டுக் கவனிக்கற்பாலது.

கிராமங்களிலுள்ள பெண்களுக்கு ஆடு மாடுகளைப் போஷித்தல், கோழி வாத்து முதலியவைகளை வளர்த்தல், தோட்டத்தைக் கவனித்தல், வீட்டுக் காரியங்களைச் செய்தல், வீட்டுச் சுகாதாரத்தைக் கவனித்தல், சமைத்தல், சட்டை தைத்தல், குழந்தைகளைப் பராமரித்தல், இல்லை (வீட்டை) நிறைவுடையதாக வைத்திருத்தல் முதலிய விஷயங்கள் நன்ருகக் கற்பிக்கப்பட வேண்டும். பெண்கள் முன்னேறினுற்ருன் கிராமங்கள் சீர்படுமென மிக விளக்கமாக திரு. பிரேயன் அநேக சமயங்களில் கூறி இருக்கிருர்.

எனவே, கிராமச் சீர்திருத்தத்திற்கு மூலாதாரமானது பெண்கள் முன்னேற்றம். அதில் கருத்துச் செலுத்தினுற்ருன் நாடு செழிப்புறும். பெண்கள் எல்லாத் துறையிலும் முன்னணியில் நிற்க உதவுதல் நாட்டின் நலத்தை விரும்புவோரின் கடன்.

"உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேடவும்
ஓது பற்பல நூல்வகை கற்கவும்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவும் சென்று புதுமை கொணர்ந்துஇங்கே
திலக வாணுத லார்நங்கள் பாரத
தேச மோங்க உழைத்திடல் வேண்டுமாம்
விலகி வீட்டில்ஓர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்."

—பாரதியார்

7. கிராமச் சுகாதாரம்

"உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்;
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்;
உடம்புளேஉத்தமன் கோயில்கொண்டான்;என்
உடம்பினை யான்இருந்து ஓம்புகின் றேனே."

எனத் திருமூல நாயனர் உடம்பை மிகவும் போற்றுகிறார்; உடம்பை நன்கு காப்பாற்ற வேண்டுமென விளக்கி இருக்கிறார். இகலோக சாதனங்களையெல்லாம் நன்றாக அனுபவித்தற்கு நோயின்றியன்ற யாக்கை மிக அவசியம். அதனாற்றான், "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்," என்ற திருவாக்கும் எழுந்தது. இந்தியாவிலேயே உடம்பைப் பெரிதும் பேணுவார் மிகச் சிலரே. உடம்பை ஓம்புதல் அவசியம் என அறிவார் கூட மிகச் சிலரே. உடல் நலமின்றிப் பல நோயாலும் வருந்தி வாடுவார் பலர்.

அதற்கு முக்கியக் காரணம் அறியாமையே. நோய் மூலத்தையும், நோயைத் தடுக்கும் வழிகளையும் மக்கள் அறிந்தால், எத்தனையோ வியாதிகளைச் சுலபத்தில் தடுக்கலாம். அந்த அறிவை மக்களிடையே பரப்பப் பெரிதும் முயலல் ஒவ்வோர் இந்தியனுக்கும் உரிய கடமையாகும்.

கிராம வாசிகளிற் பெரும்பாலோர் மிக பலவீனராய் இருக்கின்றனர்; அல்லது நோய் வாய்ப்பட்டு வருந்துகின்றனர். இந்தியாவில் சாதாரணமாக ஒரு மனிதனின் சராசரி வாழ் நாள் 26·7 வருஷமாகும். மற்றத் தேசங்க ளோடு ஒப்பிட்டால், இது எவ்வளவு குறைவு என்பது தெரியும்.

நாடு	வாழ்க்கையின் சராசரி அளவு
இந்தியா	26·7 ஆண்டு
இங்கிலாந்து	57·6 ,,
அமெரிக்கா (U. S. A.)	56·4 ,,
ஜெர்மனி	49·04 ,,
பிரான்சு	50·5 ,,
ஜப்பான்	44·5 ,,

இந்தியருடைய வாழ்க்கை எவ்வளவு குறுகி இருக்கிறதென்பதைப் பாருங்கள்!

தடுக்கக் கூடிய வியாதிகளால் இந்தியா வில் ஆண்டுதோறும் இறப்பவர் 6 மில்லியன் ஜனங்களென்பது அகில இந்திய வைத்திய மகாநாட்டில் கூறப்பட்டது. இந்திய மக்களில் சராசரி ஒவ்வொருவரும் 2 அல்லது 3 வாரங் கள் வியாதியால் பீடிக்கப்படுவதாகக் கணக்

கிடப்பட்டிருக்கிறது. தக்க போஷணையில்லா லாமையாலும், வியாதியாலும் மனிதரின் சக்தி நூற்றுக்கு 20 பங்கு குறைகிறதெனக் குறிப் பிடப்படுகிறது. மக்களின் தேக சக்தி மிகக் குறைவாய் இருப்பதால், நோய் வரின் அதை எதிர்க்க உடம்பில் வலுவில்லை. ஆதலால், 1918-ஆம் ஆண்டில் 14 மில்லியன் ஜனங்கள் இந்தியாவில் பெருவாரிக் காய்ச்சலால் (Influenza) இறந்தனர். விவசாயக் கமிஷன் முன்பு சாட்சியம் கூறிய போது இந்தியாவில் நூற் றுக்கு எண்பது பேர் போஷணைக் குறைவால் வருந்துகின்றனர் என்று லெப்டினண்டு கர்னல் சர் R. மக்காரிசன் (Lt. col Sir. R. Mc. carrison) கூறியிருக்கிறார்.

கடுங்காவலிலிருக்கிற கைதிக்கு (Prisoner on hard labour) ஒவ்வொருவனுக்கு 1·7 பவு ண்டு (lb) உணவு கொடுக்க வேண்டி இருக் கிறது. அதுவே மிகக் குறைவான உணவாம். பஞ்ச காலத்திலுங்கூட 1·29 பவுண்டு உணவு ஒவ்வொருவருக்கும் வேண்டியதாய் இருக்கும். இந்திய உணவை இந்திய மக்களுக்குப் பங்கிட் டுப் பார்த்தால், சாராசரி தலைக்கு 1·2 பவுண்டு உணவுதான் கிடைக்கும். இதைக் கவனித் தால் உணவுக் கஷ்டம் இந்தியாவில் எவ்வளவு என்பதும், போதிய ஆகாரம் இன்மையால்

இந்தியர் எவ்வாறு வருந்துகின்றனர் என்பதும் தெரிகின்றன. சுமார் 30 முதல் 40 மில்லியன் மக்கள் நாள்தோறும் ஒரு வேளை உணவுகூட இல்லாமல் சதா காலம் பட்டினியாய் இருக்கிறார்களென்று கூறுவது, மிகைபடக் கூறல் ஆகாது.

இந்தக் குறைகள் இந்தியாவின் பொருளாதார விருத்தியாலேதான் நிவர்த்தியாகும். புதிய முறைகளால் விவசாயத்தை விருத்தி செய்து பல வேறு கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்தால், வறுமை நீங்கும்; வறுமை நீங்கின், வாழ்க்கை சிறக்கும்.

வறுமையால் ஏற்படும் சுதாதாரக் குறைபாடுகள் ஒரு பக்கமிருப்ப, அறியாமையால் ஏற்படும் குறைபாடுகளும் இடர்ப்பாடுகளும் பல. இந்தியாவில் பாலிய விவாகம் மிகப் பரவி இருக்கிறது. சாரதா சட்டம் இயற்றப்பட்ட பின்னும் பெண்கட்கு 14 வயதின் முன்னர் விவாகம் செய்து வைக்கும் படித்தவர்கூடப் பலர் இருக்கின்றனர். சிறுவர்களுக்கும் சிறுமிகட்கும் விவாகஞ் செய்து வைப்பதால், இளஞ்சிசு மரணம் நமது நாட்டில் அதிகமாய் இருக்கிறது. பிறக்கும் குழந்தைகளில் ஐந்தில் ஒரு பங்கு குழந்தைகள் ஒரு வயது நிரம்புவதன் முன்பே இறந்துவிடுகின்றன. மொத்தம்

இறப்பவர்களின் எண்ணில் ஐந்தில் ஒரு பங்கு சிசு மரண எண்ணே. கீழ்க்கண்ட அட்டவணையின் உதவியால் இளங்குழந்தைகளின் இறப்பு எத்தனை என்பதையும், அது எவ்வளவு துக்கத்துக்குக் காரணம் என்பதையும் அறிந்து கொள்ளலாம் :

வருஷம்	ஒரு வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் 1000 க்கு எத்தனை இறக்கின்றன	
	ஆண்	பெண்
1911	214	196
1912	216	199
1913	193	197
1914	219	204
1915	208	195
1916	209	195
1917	212	198
1918	274	260
1919	228	220
1920	201	188
1922	183	166
1925	181	167
1928	181	164
1931	188	170



கேவல நிலையன கிராம வீடுகள்

[பக்கம் 75]

சில இடங்களில் குழந்தை அழுது தொந்தரவு செய்யாதிருப்பதற்காகக் கஞ்சா அபினி முதலிய கொடுப்பதனுலும் சிறு குழந்தைகட்குச் சாவு ஏற்படுகிறது. பல குழந்தைகள் வாடி வதங்கிய தாய்க்குப் பாலில்லாமையாலும், வேறு நல்ல பால் கிடையாமையாலும் இறக்கின்றன. தாய்மார்களும் இந்தியாவிலே பிள்ளை பெறும் பருவத்திலே அநேகர் இறக்கின்றனர். உடலில் நல்லவலிமை இராததே அதற்கு முக்கியக் காரணம். கிராமங்களில் பல இடங்களில் போதிய மருத்துவ உதவி இன்மையால் நல்ல பயிற்சியும் கல்வியுமில்லாத மருத்துவச்சிகளைக்கொண்டு பிள்ளைப்பேறு பார்ப்பதும் மற்ருெரு முக்கியக் காரணமென்னலாம். எனவே, இள மணம் (பாலிய விவாகம்) அறவே ஒழிக்கப்பட வேண்டும். ஆண்களுக்கும் பெண்ளுக்கும் சிற்றின்ப வாழ்க்கையைப் பற்றிய சாஸ்திரீயமான எல்லா விஷயங்களும் நன்கு கற்பிக்கப்பட வேண்டும். கர்ப்பத் தடை முறைகளின் அறிவு விசாலிக்க வேண்டும்.

கிராமங்களில் மக்கள் வசிக்கும் வீடுகள் சுகாதார விதிகட்கு முரணுகக் கட்டப்பட்டிருக்கின்றன. மண் சுவரெடுத்து, தென்னங்கீற்ருலோ, விழல் அல்லது வைக்கோலாலோ, பனமட்டையாலோ வேயப்பட்ட வீடுகளே மிகப்

பல. அவைகட்குப் பலகணிகள் (ஜன்னல்கள்) இல்லை. எனவே, உள்ளெங்கும் இருள்; நல்ல காற்றோட்டம் இல்லை. இருளும் குப்பையும் நிறைந்த இடங்களில் எலிகளோ மிக அதிகம். பிளேக்கு முதலிய சில வியாதிகள் எலியாற் பரவுவதால்,எலிகளைப் பிடித்தேனும் அடித்தேனும் கொல்லல் வேண்டும். வெளிச்சமுள்ள வீட்டில் எலி இருப்பது அரிது. எனவே, சுகாதாரத்துக்காக வெளிச்சமுள்ள, காற்றுச் செவ்வையாய் அடிக்கக்கூடிய வீடுகளில் வசித்தால் நோய் அணுகாது.

வீடுகளைச் சுற்றிலும் அழகிய பூஞ்செடிகளையும் பழ மரங்களையும் வைக்க வேண்டும். அப்போது வாழ்க்கை அழகியதாய், இனிமையானதாய் இருக்கும். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பூஞ்சோலை அந்த ஊர் மக்களுக்காக ஏற்படுத்தப்படல் வேண்டும். பெண்களை வீட்டினுள்ளேயே போட்டு அடைத்து வையாமல், அவர்களும் வெளியில் உலவி வர ஏற்ற சௌகரியங்கள் செய்து தரல் வேண்டும். பெண்கள் சுக சரீரிகளாய் இருந்தாற்றான் நாட்டுச் சுகாதார நிலை மேம்பட்டு விளங்கும்.

1934-ஆம் வருஷத்தில் இந்தியாவில் மாத்திரம் இறந்தவர் எண் 34½ லக்ஷம். வைசூரி,

வயிற்றுளைவு, காலரா முதலிய வியாதிகளால் இந்தியாவில் மிகப் பலர் இறக்கின்றனர். இவ் வியாதிகள் உண்டாவதற்கும் பரவுவதற்கும் முக்கியக் காரணம் அசுத்தமே. தெருக்களையும் வீடுகளையும் சுத்தமாக வைத்திருந்தால் இந்த வியாதிகள் இத்துணைத் துன்பம் விளைவிக்க முடியாது.

மலேரியா என்னும் சுரம், முக்கியமாகக் கொசுக்களாலேயே பரவுகிறது. கிராமங்களில் ஆங்காங்குத் தண்ணீர் தேங்கி நிற்கிறது. அவ்விடங்களே கொசுக்களின் பிறப்பிடம். கூடிய வரையில் தண்ணீர் தேங்காதிருக்கச் செய்ய முயலவேண்டும்; அப்படியும் தண்ணீர் தங்கினுல், மண்ணெண்ணெயை ஊற்றினுல் கொசு உண்டாகாது. அதல்லாமலும், கொசு வலையைக் கட்டிக்கொண்டு படுத்தல், அந்தச் சௌகரியம் செய்துகொள்ளக் கூடியவர்கட்கு நன்று.

கண்ட இடங்களில் மலசலம் கழித்தலினுலேதான் கொக்கிப் புழு (Hook worm), நரம்புச் சிலந்தி (Guinea worm), யானைக்கால் (Elephantiasis), மதுரைப் புற்று (Madura foot) முதலிய வியாதிகள் எளிதல் பரவுகின்றன என்று வைத்திய நிபுணர் கூறுகின்றனர். ஊரையும் ஊர்ப்புறங்களையும் சுத்தமாக வைத்-

துக்கொண்டால், இந்நோய்களின் வாய்ப்பட்டு வருந்தாமல் சுக வாழ்வு வாழ முடியும்.

சில வருஷங்கட்கு முன்புகூடப் பல கிராமங்களில் கம்பு, கேழ்வரகு, சோளம், தினை முதலிய பண்டங்களை உண்டுவந்தார்கள்; இப்போதோ, போலி நாகரிக எண்ணம் பரவி, அவ்வுணவுப் பொருள்களை உண்ணல் அநாகரிகமென எண்ணத் தலைப்படுகின்றார்கள்; மில்களிலே நன்றாக இழைத்த அரிசியை உண்ண விரும்புகின்றார்கள். அந்த அரிசியிலோ, போதிய சத்து இல்லையென்று ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். கையால் குற்றிய அரிசியே சத்துடன் கூடியது என்பது இப்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் பல ஊர்களில் உரல் உலக்கை கிடைப்பது அரிதெனும் நிலை வந்துள்ளது. சத்தில்லா உணவை ஒழித்து, சத்துடைப் பொருள்களையே இனியேனும் உண்டால், கிராம வாசிகள் சுகம் பெறலாம். கிராம வாசிகட்குக் காய் கறி கிழங்குகளைப் பயிர் செய்து உண்ணப் போதிய சௌகரியம் இருந்தும், காய் கறிகளை அவர்கள் அதிகமாக உண்பதில்லை. அதன் காரணம் காய் கறிகள் எத்துணை வன்மையை உடலுக்குத் தரும் என்பதை அவர்கள் அறியாததே.

கிராமங்களிலுங்கூடக் காப்பி தேயிலை முதலிய தீய குடிப்பழக்கம் பரவிவிட்டது. கிராமத்தில் காப்பிக் குடி இல்லா வீடே இராது போலும்! இக்குடிகள் பெரும்பாலும் உடலுக்கு ஊறே விளைக்கின்றன. கிராம மக்களும் வேண்டிய சிற்றுண்டிகளை வீட்டிலேயே குறைந்த செலவில் செய்து உடலுக்கு நன்மை பயக்கத் தக்கவாறு உண்ணுமல் சிற்றுண்டிச் சாலைகட்கு நாடோறும் செல்லுகின்றூர்கள். என்னே பேதைமை!

மிகத் தாழ்ந்த நிலையிலுள்ளவர்கள் கள் முதலியவற்றையும், சற்றுப் பொருள் நிலையில் மேம்பட்டவர் சாராயம், பிராந்தி, அபின் முதலிய மயக்கப் பொருள்களையும் உபயோகிக்கும் கொடிய பழக்கம் கிராமவாசிகளிடையே மிகப் பரவ ஆரம்பித்துவிட்டது. படித்தவர்களும், கௌரவ குடும்பத்தைச் சேர்ந்தவர்களுங்கூட இத்தூர் அப்பியாசத்தைக் கைக்கொள்கின்றூர்கள். அதற்குக் காரணம் மேல்நாட்டினர் குடிப்பதால் தாமும் அப்படியே குடித்தாற்றூன் வாழ்க்கை நலனை அடைந்தவர்களாவார்களென்றும், அதுவே நாகரிக வாழ்க்கைக்கு அடையாளமென்றும் எண்ணும் பேதைமை மனப்பான்மையே. "துஞ்சினர் செத்தாரின் வேறல்லர்; எஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள்

ளுண்பவர்,'' என்ற அறவுரையை நம் மக்கள் பின்பற்ருதது இந்தியாவின் துரதிர்ஷ்டம் என்றே கூற வேண்டும்.

எனவே, இந்திய மக்கள் தங்கள் வாழ்க்கையைச் சிறப்புடையதாக்கி, நல் வாழ்க்கை முறைகளைக் கைக்கொண்டால், நீண்ட ஆயுளுடன், நோயில்லாச் சிறப்பு வாழ்க்கையை நடாத்திப் பெரிதும் இன்புறக் கூடும்.

"வலிமை அற்ற தோளினுய் போபோபோ !
மார்பி லேஒ டுங்கினுய் போபோபோ !
பொலிவி லாமு கத்தினுய் போபோபோ !
பொறியி ழந்த விழியினுய் போபோபோ !
ஒலியி ழந்த குரலினுய் போபோபோ !
ஒளியி ழந்த மேனியாய் போபோபோ !
கிலிபி டித்த நெஞ்சினுய் போபோபோ !
கீழ்மை என்றும் வேண்டுவாய் போபோபோ !
"ஒளிப டைத்த கண்ணினுய் வாவாவா !
உறுதி கொண்ட நெஞ்சினுய் வாவாவா !
களிப டைத்த மொழியினுய் வாவாவா !
கடுமை கொண்ட தோளினுய் வாவாவா !
தெளிவு பெற்ற மதியினுய் வாவாவா !
சிறுமை கண்டு பொங்குவாய் வாவாவா !
எளிமை கண்டி ரங்குவாய் வாவாவா !
ஏறு போலு நடையினுய் வாவாவா !"

—பாரதியார்

8. கிராம விவசாயம்

"சீர்வளரும்; மறைவளரும்;
திறல்வேந்தர் முடிவளரும்;
பேர்வளரும்; வாணிபத்துப்
பெருநிதியம் மிகவளரும்;
ஏர்வளரும்; திருவளரும்;
இசைவளரும்; கடல்சூழ்ந்த
பார்வளரும் காராளர்
பயிர்வளரும் திறத்தாலே." —கம்பர்

தொன்றுதொட்டு இந்தியநாடு வேளாண்மையில் தலை சிறந்து நின்றது. விவசாயமே இந்திய மக்களுக்கு உயிர் நாடியாய் இருக்கிறது. பயிர்த்தொழிலே உயிரைக் காக்கும் தொழிலாய் இருக்கிறது. மேலே காட்டி உள்ள செய்யுள் வேளாண்மையை நம் மக்கள் எத்துணைச் சிறப்பினதாகக் கொண்டிருந்தார்கள் என்பதை விளக்கமாகக் காட்டுகிறது. கடந்த சில ஆண்டுகளாக, நம் நாட்டு விவசாயம், மற்றை நாட்டு விவசாயத்துடன் ஒத்திட்டுப் பார்த்தால், மிக க்ஷீண தசையில் இருப்பது புலப்படும். மற்றத் தேசங்களிலோ, விவசாயத்துடன் பல வேறு தொழில்களும் விருத்தி அடைந்திருக்கின்றன. மக்கள் பல வகையிலும்

சம்பாதிக்கின்றார்கள். நமது நாட்டிலோ, மக்கள் விவசாயத்தையே நம்பிக் காலங் கழிக்க வேண்டி இருக்கிறது.

தேசம்	மக்களில் விவசாயத் தொழில் செய்வோர் நூற்றுக்கு இத்தனை பேர்
இந்தியா	65·6
இங்கிலாந்தும் வேல்ஸும்	6·7
அமெரிக்கா (U. S. A.)	21·5
கனடா	27·5
ஜெர்மனி	30·3
பிரான்ஸ்	37·8
ஜப்பான்	48·3

மேலே காட்டியுள்ள அட்டவணையிலிருந்து நம் மக்களுக்கு முக்கியத் தொழில்விவசாயமே என்பது தெரிகிறது. அவ்விவசாயிகளெல்லாம் கிராம வாசிகளே. அவர்கள் புதிய சாஸ்திரீய முறைகளைக் கையாளாததால், விளைவு மிகக் குறைவாய் இருக்கிறது. நமது நாட்டு வேலையாள் ஒரு வருஷத்தில் சம்பாதிப்பதை, அமெரிக்கா,கனடா தேச வேலையாள் ஒரு வாரத்தில் சம்பாதிப்பதாக, சர். M. விஸ்வேஸ்வரையா தம் நூலில் குறிப்பிட்டிருக்கிறார். ஜப்பானில் ஒவ்வொரு மனிதனும் $\frac{1}{3}$ ஏக்கரில் வரும் வருமா

னத்தில் ஜீவிக்கலாம். இந்தியாவிலோ, $\frac{5}{6}$ ஏக்கர் வரும்படியிலேதான் வாழ முடியும். இந்தியாவில் ஓர் ஏக்கரின் வருமானம் 20 ரூபாய்க்கு மேல் இராது; ஜப்பானிலோ, ஏக்கருக்கு 150 ரூபாய் வருமானம் கிடைக்கிறது.

இந்தியாவில் ஓர் ஏக்கரில் 700 முதல் 1000 பவுண்டு எடையுள்ள அரிசி உற்பத்தி ஆகிறது. ஜப்பானிலோ, இரு மடங்கு; இட்டாலி, ஸ்பெயின் தேசங்களிலே ஐந்து மடங்கு; இந்தியாவில் கோதுமை விளைவு ஏக்கர் ஒன்றுக்கு 575 முதல் 760 பவுண்டு. இது இங்கிலாந்தின் விளைவில் மூன்றில் ஒரு பங்கே. இந்தியாவிலே ஏக்கருக்கு 1 டன் கரும்பு உண்டாகின்றது; ஜாவாவிலோ, இதைப்போல நான்கு மடங்கு. நமது தேசத்திலே பஞ்சு விளைவு ஏக்கருக்கு 80 முதல் 100 பவுண்டு. அமெரிக்காவிலே 200 பவுண்டும், எகிப்திலே 450 பவுண்டும் விளைகின்றன. ஆள் சராசரி விகிதம் எடுத்தால், விளைபொருள்கள் மற்றத் தேசங்களில் ஆள் ஒன்றுக்கு எவ்வளவு விளைகின்றதோ, அதில் பாதி கூட இங்கே விளையவில்லை. இந்தியாவில் விவசாய உற்பத்தி ஆள் ஒன்றுக்கு 64 ரூபாய் மதிப்பாம்; அமெரிக்காவிலோ, 175 ரூபாய்; கனடாவில் 213 ரூபாய்; ஜப்பானில் 57 ரூபாய்; இங்கிலாந்தில் 62 ரூபாய்.

நமது நாட்டிலுள்ள எல்லாமக்களுடைய போஷணைக்கும் வருஷாவருஷம் 85 முதல்90 மில்லியன் (மில்லியன்—பத்து லக்ஷம்) டன் வரையில் உணவுப்பொருள் தேவையாகும். சாதாரணமாகப்பயிரிடும் 203 மில்லியன் ஏக்கராவில் விளையும் உணவுப் பொருள் 60 முதல் 70 மில்லியன் டன்னுக்குமேல் இல்லையாம். எனவே, நன்ருக விளையும் காலத்திற்கூட விதைக்காகவும், வெளி நாட்டு ஏற்றுமதிக்காகவும் உபயோகிக்கப்படும் விளை பொருள் போக, நமது தேச மக்களின் உணவுக்காக எஞ்சி நிற்பது 50 மில்லியன் டன் என்ருல், ஜனங்கட்கு உணவுப் பொருள் முட்டுப்பாடு எவ்வளவு என்பதை எளிதல் ஊகிக்கலாம்.

எனவே, இந்தியாவில் எவ்வளவு தூரம் விவசாயத்தை விருத்தி செய்ய வேண்டுமென்பதை விவரித்துக் கூற வேண்டுவதில்லை. விவசாய விருத்திக்கு எத்தனையோ இடர்ப்பாடுகள் இந்நாட்டில் இருக்கின்றன. இயற்கை எப்போதும் நமக்குச் சாதகமாய் இருப்பதில்லை. நாம் மாரியையே எப்போதும் நம்பி இருக்கிரேம். "விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியன் உலகத்து உண்ணின்று உடற்றும் பசி," என்றவாறே ஒரு கால மழை பெய்யத் தவறினும், அநேக மக்கள் பசியால் வாட

வேண்டி நேரிடுகிறது. நமது நாட்டு வாரிசு சட்டங்களின்படி ஆண் குழந்தைகள் அனைவருக்கும் சொத்துப் பாத்தியம் இருப்பதால், நிலங்கள் தலைமுறை தோறும் பிரிக்கப்பட்டு, ஒவ்வொருவருக்கும் மிகச் சிறு நிலமே சொத்தாய் இருக்கிறது. அதனால், விசேஷமான விவசாய முறைகளை அநுஷ்டிக்க இடர்ப்பாடு ஏற்படுகிறது. மேலும், நம் நாட்டினர் வறியர். பெருமுதல் வைத்து விவசாயத்தை விருத்தி செய்ய அவர்கட்குச் சக்தி இல்லை. அஃதன்றி, கல்வியறிவில்லாமையால் அநேக புதிய விஷயங்களை அறிந்து காலத்துக்கு ஏற்றவாறு சிறப்புடை முறைகளை அநுஷ்டிப்பதற்கில்லை. வரிப்பளுவோ, மிக அதிகம். நம் கவர்ன்மெண்டார் மற்றை நாட்டுச் சர்க்கார்களைப் போல விசேஷமாக விவசாய விருத்தியில் அக்கறை செலுத்தி, மிகுந்த பணத்தைச் செலவிட முன் வரக் காணோம். விவசாய விஷயங்களைப் பரப்புவதற்கும், விவசாய சம்பந்தமான கல்வியைப் போதிப்பதற்கும் இங்கிலாந்திலே 1000 ஏக்கருக்குச் சராசரி 1 ஷில்லிங்கு 11 பென்ஸ் செலவிடுகிறார்கள்; இந்திய சர்க்காரோ, 1000 ஏக்கருக்கு ½ பென்னி வீதம் செலவிடுகிறது. எனவே, இவ் விஷயத்தில் இந்தியாவிலே செய்ய வேண்டு

வது எவ்வளவென்பதைக் கூறவும் வேண்டுமோ !

இந்தியாவில் இரண்டொரு திருத்தங்கள் செய்தாற்கூட எவ்வளவோ பணம் இலாபமாகும். உதாரணமாக, இந்தியாவிலே பூச்சிகள் எலிகள் முதலியவைகள் சேதமாக்கும் பயிரின் வருஷாந்திர மதிப்பு 135,000,000பவுன் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. நெல்லைச் சரியான முறையில் பாதுகாக்காமல் சேமித்துவைக்கும் குறைபாட்டால்(Defective storage) நூற்றுக்கு 5 வீதம் சேதமாகிறதாம். அதாவது, 40 மில்லியன் மணங்கு எடையுள்ள நெல் நஷ்டமாகிறதாம். அவ்வித நஷ்டம் வருஷா வருஷம் 120 மில்லியன் ரூபாய் எனக் கூறப்படுகிறது. பயிரின் சத்துருக்களை நாசம் செய்து வரும் பூச்சி முதலியவைகளை ஒழித்து, நெல்லைச் செவ்வையாகச் சேமித்து வைத்தலாலேயே அநேக லட்ச ரூபாய் இந்தியாவிற்கு இலாபம் என்றால், நாம் செய்ய வேண்டுபவைகளைச் செய்யாததால் வரும் பயனை உன்னுங்கள் !

கிராமங்களில் இயற்கை எருவைச் சரியாக உபயோகிக்காமல் பாழ்படுத்துகிறார்கள்; சாணியை வரட்டியாகத் தட்டி எரித்துவிடுகிறார்கள்; தழை எருவை அதிகமாக உபயோகப்படுத்துவதில்லை. செயற்கை எருவைத் தக்க

உணவுஞ் செயலும் அற்றவை மாடுகள்

[பக்கம் 87]

அறிஞர்களின் ஆலோசனைப்படி எங்கெங்கு எதை எதை உபயோகிக்க வேண்டுமோ, அவ்வாறு செய்ய வேண்டும். எருச் சரியாக இடப்படாவிடில், உண்டி வினையில்லா உயிர் யாக்கை போல, நிலம் தன் வளங் குன்றும். அதனாற்றான், "ஏரினும் நன்றால் எரு இடுதல்," என்றார்.

இரண்டாவதாக விதைகளை நன்றாகத் தேர்ந்தனவாகவும், முற்றினவாகவும், தேர்ந்து எடுக்கவேண்டும். நல்ல சாதி விதைகளை முயன்றேனும் சேர்க்கவேண்டும். விதையின் தன்மையைப் போலத்தான் பயிரும் இருக்கும். கவர்ன்மெண்டு விவசாயப் பண்ணைகளில் நல்ல விதைகளை உற்பத்தி செய்து குறைந்த விலைக்குத் தருகிறார்கள். அந்த விதைகளையேனும் வேறு நல்ல விதைகளையேனும் உபயோகித்தால், நல்ல பயன் கிட்டும்.

மாடுகளைப் போஷணைசெய்வதில் விசேஷ சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். பசுக்களோ, ஆகாரங்களில் மிகச் சிறந்த பாலைத் தருகின்றன; உணவுப் பொருள் விளைவுக்கு உற்ற துணையான எருவைத் தருகின்றன. எருதுகளோ, உழுது பெரும்பயன் அளிக்கின்றன. "பகடு நடந்த கூழ் பல்லாரோடுண்க," என்றதால், உணவுப் பொருளுண்டாக்குவதற்கு எருது எத்துணைச் சிறப்புடையது

என்பதை அறியலாம். பழந்தமிழர் ஆனி ரையையே தமது சிறப்புடைப் பொருளாகக் கொண்டிருந்தனர் என்பதைத் தமிழ் நூல்கள் வாயிலாக நன்கு அறியலாம். மாடுகட்குத் தக்க உணவுப் பயிர்கள் (Fodder crops) விளைவிக்க வேண்டும். நன்ருக மாடுகளைப் போஷணை செய்ய வேண்டும். பொலி காளைகளைச் சிறந்த தன்மையனவாக வைத்திருத்தல் வேண்டும். இப்போதுள்ள இந்திய சர்க்கார் பொலி காளைகள் பலவற்றைப் பல ஊர்கட்கு வாங் கிக் கொடுத்திருக்கிறது; பொலி காளைகளின் போஷணைக்காகப் பண உதவிகூடச் செய் கிறது. ஆடு மாடுகளிடையே வியாதி பரவாத படி செய்தல், அவைகட்கு இனுகுலேஷன் (Inoculation) செய்தலே.

நீர்ப்பாசன வசதிக் குறைவால் அநேக இடங்களில் சில வருஷங்களில் பயிரிட முடிவ தில்லை; வேறு சில இடங்களில் சில மாதங் களே பயிரிடமுடிகிறது. அந்தக் குறையைநீக்கி, அநேக இடங்களில் கிணறுகளைத் தோண்ட வேண்டும். பார்சியன் கிணறுகளென வட இந்தியாவில் இருப்பனபோலத்தோண்டலாம். பூமியைத் துளைத்து எடுக்கும் கிணறுகள் (Boring wells) பல எடுக்கலாம். குழாய்க் கிணறு கள் (Tube wells) ஆங்காங்கு உண்டாக்கலாம்.

கிணற்று நீர் இறைப்பதிலும் சில நல்ல முறைகளை அநுஷ்டிக்கலாம். முன்னும் பின்னுமாகப் போய் மாடுகள் இறைக்கும் கபிலை ஏற்றம் மிகவும் கொடியது. கிணற்றுப் பாசனம் இருந்தால், வருஷம் முழுவதும் பல பயிரிட முடியும். அதிலும், கிணற்றுப் பாசனமுடைய அந்த இடத்தை மாத்திரம் வேலியால் பாது காத்தால், காய் கறி, பழம், பூ முதலிய பல பொருள்களையும் உற்பத்தி செய்ய முடியும்.

நிலத்தில் ஒரே பயிரையே எப்போதும் வளர்த்தல் நன்றன்று. நிலத்தின் அப்போதைக்கப்போதுள்ள தன்மைக்கேற்றபடி மாறி மாறிப் பல பயிர்களை (Rotation of crops) இட வேண்டும். நிலத்தில் பல வேறு சத்துக்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பயிருக்கு ஒவ்வொரு சத்து அதிகமாக வேண்டி இருக்கும். வெவ்வேறு பயிரை மாறி மாறி இட்டால், நிலத்தின் சத்தாலுண்டாகும் முழுப் பயனையும் பெற முடியும்.

எல்லா இடங்களிலும் மனிதருக்கான உணவுப் பொருள்களையே விளைவிக்காமல் ஆங்காங்கு மாடுகள் மேய்வதற்கான பசும் புலங்களையும் உண்டாக்க வேண்டும். வேண்டுமானல் அவைகளை வேலி போட்டுக் காக்கலாம். மழை நாட்களில் மாடுகட்குப் போதிய உணவு

இப்போது இருப்பதில்லை. பல ஊர்களில் மாடு கள் மேய்வதற்கான புல் தரை கூடக் கிடைப் பது துர்லபமாய் இருக்கிறது. இக்குறையை நீக்கல் மிக அவசியம்.

கூடிய வரையில் மிகப் பழைய நாள் தொட்டு உபயோகித்து வரும் பயிர்க்கருவிகளை விட்டுவிட்டுப் புதுக் கருவிகளை உபயோகித்தல் நன்று. புது மாதிரியான ஏர்களால் ஆழ உழ முடியும். "அகல உழுவதைவிட, ஆழ உழல் நன்று," என்றபடி, புது ஏர்களை உப யோகித்தால், விளை பொருள் அதிகரிக்கும். புது உழவுக் கருவிகளைப் பத்து நாள் உபயோ கித்தால், அவைகளைப் பிறகு சுலபமாக உப யோகிக்க அப்பியாசமாகிவிடும். அதிக விலை இல்லாத, சுலபத்தில் உபயோகிக்கக் கூடிய எத்தனையோ கருவிகள் இருக்கின்றன. அவை களைக் கையாண்டால், தக்க பயன் பெறுவது உறுதி. தண்ணீர் இறைப்பதற்கும் சிறு எண் ணெய் இயந்திரத்தையாவது (oil engine), மின் சார சக்தி எளிதில் கிடைக்கக் கூடிய இடங்க ளில் அதற்கேற்ற இயந்திரத்தையாவது உப யோகித்தால், பயிரிடுவதற்கு மிகச் சௌ கரியமாய் இருக்கும். பல இடங்களில் காற்றூடி இயந்திரத்தையும் (wind mill) உபயோகிக்க லாம்.

பல ஊர்களிலும் பழவிருட்சங்களைப் பயிர் செய்தல் வேண்டும். இந்த விஷயத்தைப் பலர் கவனிப்பதில்லை. நெல்லோ, கோதுமையோ —ஏதேனும் ஒரு பயிரிட்டுவிட்டால் போது மென இருந்துவிடுதல் சகஜமாய் இருக்கிறது. அப்படியன்றிப் பழ மரங்களையும் உண்டாக்க வேண்டும். வெங்காயம், உருளைக்கிழங்கு, காய் கறிகள், உள்ளிப் பூண்டு, கரும்பு முதலியவை களைப் பயிர் செய்தால், விசேஷ இலாபங் கிடைக்கும்.

விவசாய முறைகளில் புதுப் புது விஷயங் களைப் பத்திரிகைகள் மூலமாயும், துண்டுப் பிரசுரங்கள் மூலமாயும், உபந்நியாசங்கள் மூல மாயும், சினிமாக்கள் ரேடியோ முதலியவை களின் மூலமாயும், ஊர் ஊராகக்கொண்டு செல் லக்கூடிய கண் காட்சி ஏற்பாடுகள் வாயிலாயும் ஜனங்கள் அறியும்படி செய்தல் விவசாயிகட் குப் பெருநன்மை தரும்.

வேறு பல பெரிய விவசாயச் சீர்திருத் தங்கள் செய்வதற்கு இடையூறாக இருப்பன விவசாயிகளின் கடன் சுமையும், விவசாய விருத்திக்குப் பொருள் கிடையாமையுமேயா கும். வங்காளத்துக்கு உதவிக் கவர்னராய் இருந்த (Lieutenant Governor) சர் ஆண்டிரூ பிரேசர் (Sir Andrew Fraser) கூறியதாவது,

"விவசாயத்தின் விருத்திக்கு இடையூருக இருப்பன விவசாயிகளின் கடனும், விவசாய விருத்திக்காக நியாயமான வட்டிக்குப் பணம் கிடைக்காததுமே ஆகும்," என்பதே. 1880, 1901 வருஷங்களில் ஆராய்ச்சி செய்த பஞ்ச விசாரணைக் கமிஷன் நிலச் சுவாதந்திரர்களில் மூன்றில் ஒரு பங்கினராவது கடனில் முழுகி இருப்பவர் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறது. பாங்கி விசாரணைக் கமிட்டியார் சுமார் 900 கோடி ரூபாய்க் கடனில் விவசாயிகள் அழுந்தி இருக்கின்ருர்கள் எனக் கூறியுள்ளார். அதாவது, விவசாயத் தொழிலில் ஈடுபட்ட ஜனத் தொகையில் ஆளுக்குச் சராசரி 50 ரூபாய் கடனுக்குக் குறையாமல் இருக்கிறது. கடன் பளுவைத் தீர்க்க வேண்டுமென்று அரசினர் இப்போது பெருமுயற்சி செய்கின்றனர். கூட்டுறவுச் சங்கங்கள் கடன் தொந்தரவைக் குறைக்கின்றன. அவை புதிதாக மார்வாரி முதலிய கடன் கொடுப்போர் கையில் விவசாயிகள் சிக்காதிருக்க உதவுகின்றன. சென்னை, பஞ்சாப்பு, பம்பாய், வங்காளம், அஸ்ஸாம் முதலிய மாகாணங்களில் பல நில அடைமானப் பாங்குகள் ஏற்படுத்தப்பட்டபடியால், விவசாயிகட்குப் பண உதவி உண்டாயிருக்கிறது. மாகாண சர்க்கார்களும், இந்திய சர்க்காரும்

இந்த இரண்டு குறைகளையும் நிவர்த்திக்கப் பெரிதும் உழைக்க வேண்டும்.

மிகப் பெருங்குறைகளைச் சர்க்கார் உதவியால், நிவர்த்தித்துக்கொள்வதல்லாமல், சர்க்காரையே முழுதும் நம்பி இராது, மேற்கூறிய பல முறைகளையுங் கைக்கொண்டு விவசாயிகள் தங்கள் பொருள் நிலையை விருத்தி செய்து கொள்ள வேண்டும்.

> "நளிர்மணி நீரும், நயம்படு கனிகளும்,
> குளிர்பூந் தென்றலும், கொழும்பொழிற் [பசுமையும்,
> வாய்ந்துநன் கிலகுவை, வாழிய அன்னை!"

9. கிராம வேலையாள்

“ முள்ளரை முளரி வெள்ளி
முளைஇற முத்தும் பொன்னும்
தள்ளுற மணிகள் சிந்தச்
சலஞ்சலம் புலம்பச் சாலில்
துள்ளுமீன் துடிப்ப ஆமை
தலைபுடை சுரிப்பத் தூம்பின்
உள்வரால் ஒளிப்ப மள்ளர்
உழுபக டுரப்பு வாரும்” —கம்பர்

எனக் கவிச் சக்கரவர்த்தியாராகிய கம்பர் விதந்து கூறிய பயிர்த்தொழிலாளிகள் மிகப் பழையகாலந்தொட்டு மக்களுக்கு இன்றியமையாதனவான உணவுப் பொருள்களைப் பயிர் செய்து வருகின்றார்கள். அவ்வேலையாட்கள் இல்லையேல், உலகத்தைப் பசிப்பிணி பீடிக்கும் அன்றோ? “செய் ஆளும் சொற்கேட்கில், என்றும் உழவே இனிது,” என்று கூறப்பட்டிருத்தலால், விவசாயத்திற்கு உண்மையாக உழைக்கும் ஆட்கள் எத்துணை அவசியம் என்பது பெறப்படும்.

சொந்த நிலம் வைத்திருக்கிற கிராமவாசிகளே வறுமையால் கஷ்டப்படுகிறார்களென்றால், விவசாயத் தொழிலாளிகளின் நிலைமையைக் கூறவும் வேண்டுமோ! பல இடங்களில்

என்றும் உழவே இனிதென ஓராய்!

[பக்கம் 94]

பயிர்த்தொழில் நடக்கும் சில மாதங்களிலே அன்றி ஏனைய மாதங்களில் ஒரு வேளை உணவு தானும் இன்றி வருந்துவோர் எத்தனையோ பேர்! வறுமையால் வாடி வதங்குவோர் எப்படி வேலைத்திறன் (Efficiency) மிகவும் உடையோராக இருத்தல் கூடும்? கிராமங்கள் மிகவும் செழிக்க வேண்டுமானால், விவசாயத் தொழிலாளிகளின் நன்மையை முதலில் கவனிக்க வேண்டும்.

இப்போதுள்ள நிலையில் விவசாயவேலை ஆட்கள் ஐரோப்பிய அமெரிக்க நாட்டுக் கூலியாளைவிடத் திறமைக்குறைவு உடையவர்கள். அது அவர்களுடைய இயற்கைக் குற்றமன்று. தக்க வசதியளித்தால், இந்திய உழவர்களும் திறம் மிகப் பெறுவார்கள் என்பது உறுதி.

நல்ல மழை, தண்ணீர் வசதியுள்ள இடங்களில் உழவர்கள் முயற்சி உடையவர்களாயும், மனக் களைப்பு அதிகமில்லாதவர்களாயும் இருக்கிறார்கள். இன்னும், வளனிலா இடங்களிலுள்ளோர் சோம்பேறிகளாயும், தலைவிதி இது என்னும் எண்ணமுடையோராயும், மன உற்சாகம் அற்றவர்களாயும், ஏழைகளாயும் இருக்கிறார்கள். எனவே, அவர்கள்மேல் குற்றம் எதுவுமில்லை; அவர்களின் நிலைமை மிக

மோசமாய் இருத்தலே அவர்களின் வீழ்ச்சிக்குக் காரணம். டாக்டர் வியோல்கர் (Dr. Voelcker, Consulting Chemist to the Royal Agricultural Society) இந்திய உழு தொழிலோன் உழைப்பும், விடாமுயற்சியும், ஆழ்ந்த அறிவும் உடையோன் எனப் பாராட்டி இருக்கிறார். நாம் செய்ய வேண்டுவதெல்லாம் என்ன எனின், அவர்கள் வாழ்க்கை இன்னும் சற்று மேம்பட்டதாக இருக்கச் செய்வதே.

முதலாவதாகத் தொழிலாளியின் தேக நிலையைக் கவனிக்க வேண்டும். போதிய உணவுப் பொருள் அவனுக்குக் கிட்டும்படி செய்ய வேண்டும். புது முறையாகப் பல்வேறு பயிர்களையும் இட்டால், எப்போதும் அவனுக்கு வேலை கிடைக்கும்; அவனது பசிப்பிணியும் ஒழியும். உடல் வன்மை இல்லாமையால், காலரா, மலேரியா முதலிய பிணிகள் அவனை அடிக்கடி வாட்டுகின்றன. அவற்றை நிவர்த்திக்கப் போதிய வைத்திய உதவிகள் அவனுக்குக் கிட்டும்படி செய்ய வேண்டும். அவ்வியாதிகள் உண்டாகாமல் தடுப்பதற்கு, கிராம வாசிகளுடைய சுகாதார நிலைமையை மேம்படுத்த வேண்டும்.

விவசாயக் குடிகள் இருக்கும் வீடுகள் மிக ஆபாசமானவை; இருட்குகைகள்; நோய்கட்

குப் பிறப்பிடம். பெரிய நிலச்சுவான்களும், சர்க்காரும் தகுதியான இருப்பிடங்கள் கட்டிக் கொடுக்க முன்வரல் வேண்டும். கிராமக் கூட்டுறவு வீடுகட்குச் சங்கங்கள் அநேகம் நிறுவி, அவைகளின் மூலம் அவர்களின் குடி இருப்புக் கஷ்டத்தை ஒழிக்க வேண்டும். முதலில் இருப்பிட வசதி இருந்தாற்றான் அவர்கள் திறம்பட வேலை செய்ய முடியும்.

உழவர்கட்கு நல்ல குடி தண்ணீர் கிடைப்பது அரிதாய் இருக்கிறது. நீர் வளம் பெற்ற தஞ்சை ஜில்லாவில் காவிரிக் கரைக்குப் பக்கத்திலுள்ள ஊர்களிற்கூடக் கோடை நாட்களில் தங்களுக்கெனக் கிணறுகள் தோண்டிக் கொள்ளச் சக்தி இல்லாமல் குடி தண்ணீருக்குக் கூடக் கஷ்டப்படும் ஏழை மக்கள் எண்ணிலடங்காதவர்கள். எனவே, ஒவ்வொரு சேரியிலும் ஒரு நல்ல கிணற்றையாவது கட்டிக்கொடுத்தல் சர்க்காரின் முக்கியக் கடமையாகும்.

தெருக்களைச் சுத்தமாக வைத்திருத்தல் விளக்கிடல் முதலியவைகளைப் பற்றி வேறோரிடத்திற் கூறப்பட்டது. உழு தொழிலோரின் கல்வியை விருத்தி செய்தால், அவர்களிடையே உண்டான பல குறைபாடுகள் எளிதில் நீங்கும்.

விவசாயத் தொழிலாளிகளிற் பலர் பெண்டிர். இந்தியாவில் அவர்களுக்கு இடப்

படும் வேலை அதிகம். அவர்கள் வீட்டு வேலைகள் செய்வதை அல்லாமல் ஆடவனுட னேயும் நாள் முழுதும் வேலை செய்யவேண்டி இருக்கிறது. நோய், பிள்ளைப்பேறு இவைக ளால் உடல் நலமில்லாத காலங்களிற்கூட அவர்கள் வேலை குறைவதில்லை. முக்கியமாக அப்பெண்கட்குப் பிள்ளைப் பேற்றுக்கேற்ற மருத்துவம் செய்யக் 'குழந்தைகளின் நன்மை நிலையங்கள்' (Child welfare centres) நிறுவப் பட வேண்டும், தக்க பண வசதி உள்ள மக்க ளிடையே கர்ப்பத் தடை முறைகள் இருப்பது பற்றி அபிப்பிராய பேதங்களிருப்பினும், இந்த மக்களிடையே அம்முறைகள் பரவுதல் அவசியமென்பதை ஆட்சேபிப்பார் அரக் கரே ஆவார்.

"ஆடுநனி மறந்த கோடுயர் அடுப்பில்
ஆம்பி பூப்ப; தேம்புபசி உழவா,
பாஅல் இன்மையின் தோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமார்பு
சுவைத்தொ றழூஉம்தம்மகத்துமுகம் நோக்கி"

—புறநானூறு

அப்பெண்மணிகள் கஷ்டமுறுவதைக் காணும் எவனும் அவர்கள் பல குழந்தைகளைப் பெற் றுக் கஷ்டப்பட வேண்டுமென எண்ணவே மாட்டான். வருந்தி வாடி இருக்கும் அவர்க

ளிடையே கர்ப்பத் தடை முறைகள் பரவுதல் மிக அவசியம். அரசினர் ஆங்காங்கே பல 'கர்ப்புத் தடை நிலையங்களை' நிறுவி, அம் மக்களுக்கு அவ்வறிவு உண்டாகும்படி செய்தல், மனித வர்க்கத்திற்கே பெரிய நன்மை செய்ததாகும்.

ஆங்கில ஆட்சிக்கு முன்னே இவ்வேலை ஆட்களில் பலர் அடிமைகளாகவே இருந்தனர். அடிமை முறிச்சீட்டுகள் எழுதிக் கொடுக்கும் வழக்கமும் இருந்தது. அது மாறி இப்போது 'பொருள் அடிமை'களாய் இருக்கிறார்கள். ஒவ்வொரு பண்ணையாளும் தன் கலியாணத்தின்போது ஒரு தொகைப் பணத்தைத் தன் எஜமானனிடம் கடனாகப் பெறுகிறான்; அதற்காக வட்டி குறிக்கப்பட்ட உறுதி மொழிச் சீட்டு (Promissory Note) எழுதிக் கொடுக்கிறான். அந்தக் கடனை அவன் தீர்க்க முடிவதில்லை. 'வட்டிக்கோ, தூக்கமிருப்பது இல்லை.' எந்நாளும் மீளா அடிமையாய் அவன் வருந்துகிறான். அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடாவிடில், அவன் வேறிடத்துக்குப் போக முடியாது. அப்படித் தவறி ஓடிவிட்டாலும், அவனைப் பலாத்காரமாகத் திருப்பி அழைத்து வந்துவிடுகிறார் அந்தக் கொடிய நிலக்கிழவர். இந்த நிலைமையை இல்லதாக்க அச்சீட்டுகள்

செல்லுபடி ஆகாவெனச் சட்டம் ஒன்று ஆக்க வேண்டும். அந்த ஆட்களும் கடன் வாங்காத வாறு அவர்கட்குப் புத்திமதி புகட்டி, சிக்கன முறையில் கலியாண முதலிய சுபாசுபக் காரியங்களைச் செய்ய அவர்களைத் தயாரிக்க வேண்டும்.

பல கொடிய மிராசுதார்கள் குறைந்த கூலிக்கு அதிக வேலை வாங்குவதே அல்லாமல், அவர்களை அடித்தும் வைதும் மிக இமிசை செய்கிறார்கள். என்ன கொடுமை! இப்பழக்கம் நாளடைவில் மக்களின் உயரிய கொள்கையாற்றான் அழியும். இம்மாதிரியான கொடுமைகள் அரசாங்கத்தினர் கவனத்துக்கு ஈர்க்கப் பட்டால் நல்ல தண்டனை அளித்தல் நன்று.

இந்திய நாட்டிலே மிகப்பழைய இந்துமதத்தையும் இந்து சமூகத்தையும் ஒருபெரிய தொழு நோய் (Leprosy) வாட்டுகிறது. இத்தொழு நோய் 'தீண்டாமை' என்பதே. இக்கொடிய ஏற்பாட்டிற்கு நூல் ஆதாரம் எதுவும் இல்லை. எப்படியோ இவ்வியாதி இந்து சமூக உடலைப் பிடித்துவிட்டது. இந்நோயைப் போக்காவிடில், கை கால்கள் குறைந்தே போகும்; இந்து சமூக தேகம் நாற்றமடித்துப்போம்; நாளடைவில் அழிந்து போயினும் போகும். இதை உணர்ந்தே மகாத்துமா காந்தி முதலி

யோர் இக்கொடுமை அறவே ஒழிய வேண்டு மென்று பெரும்பாடு படுகின்றனர். மக்களின் அறியாமையால் அவர்கள் முயற்சி இன்னும் பெரும்பயன் தரவில்லை. சமீபத்தில் திருவாங் கூர் மகாராஜா தம் அரசெல்லைக்குள் இருக் கும் கோயில்களுள் தீண்டாதாரும் சென்று கடவுளை ஆராதிக்கலாமென உத்தரவிட்டது, உலக முழுதும் போற்றத்தக்க தண்ணளி ததும்பும் ஒரு காரியமாகும். தீண்டாமைக் கொடுமை ஒழியுமாறு ஒரு சட்டமியற்ற இந்திய சர்க்கார் முயலுமாயின், இந்தியர் அதற்கு என்றும் நன்றியறிதலுடையோராவர்.

“அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயாராய்
ஆவுரித்துத் தின்றுஉழலும் புலைய ரேனும்,
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்ப ராயின்
அவர்கண்டீர் யாம்வணங்கும் கடவு ளாரே.”

என்ற அருள் வாக்குப் பிறந்தெழுந்த நாட்டில் தீண்டாமை தலைவிரித்தாடுதல் இந்து மக்களின் துரதிர்ஷ்டமே! நம் முன்னோரின் வாழ்க்கை விருப்பு, ‘எல்லாரும் இன்புற்று இருக்க நினைப் பதே.’ அவர்கள் அதல்லாது வேறொன்றும் அறியார்கள். அவர்களின் சந்ததியாராகிய நாம் இத்தீண்டாமையை ஒழித்து, இம்மக்களும் அளப்பில் வாழ்க்கை நலன்களைத் துய்த்து மேம்பட உதவல் வேண்டும்.

தீண்டப்படாதவர்களென வழங்கப்படும் இவர்கள் 1919-ஆம் ஆண்டில் 42,200,000 பேர்கள் இருந்தார்களெனக் கணக்கிடப்பட்டது. இப்போது 43,600,000 மக்கள் இருப்பதாக அரசினர்கள் கணக்கின்படி தெரிகிறது. இந்திய மக்களுள் நூற்றுக்கு 19 பேர் இந்த ஹரிஜனங்கள். இந்து மத சமூகத்தை மாத்திரம் கணக்கிட்டால், நூற்றுக்கு முப்பது பேர் இம்மக்கள். இதுகாறும் இவர்கள் முன்னேற்றத்தைப்பற்றிப் போதிய அக்கறை எடுத்துக் கொள்ளாதபடியால், இவர்களிற் பலர் இம்மதத்தை விட்டுக் கிறித்து மதத்தையும், துலுக்க மதத்தையும் தழுவ ஆரம்பித்துள்ளனர். அப்புறமதத்தினர் விரித்த கைகளுடன் காத்திருந்து வரவேற்று மார்புறத்தழுவித் தம் மதங்களிற் சேர்த்துக்கொள்கின்றனர். மத உணர்ச்சி ஒரு புறமிருப்ப, பல லௌகிக சௌகரியங்களை எண்ணித் தங்கள் சன எண்ணைப் பெருக்க வேண்டும் என்ற அடிப்படையான தத்துவம் தங்களை ஊக்க, அது காரணமாக மதமாற்றஞ் செய்யும் வேலையில் முனைந்திருப்போர் அம்மதங்களிற் பலர் இருக்கின்றனர். அஃதெங்ஙனமாயினும், இவ்வேழை மக்களின் சமூகச் சீர்கேட்டைச் செம்மைப்படுத்தல் ஒவ்வோர் இந்தியனுக்குமுரிய கடமையா

கும். இதற்கென எவன் தன் வாழ்நாளைச் செலவிடுகிறானோ, அவனே பெரிய தியாகி.

இம்மக்களின் தாழ்ந்த நிலைக்கு முக்கியக் காரணம் அறியாமை. எனவே, கல்வியறிவு இவர்களிடையே பரவ வேண்டும். சுகாதார விதிகள் பலவற்றை இவர்கட்குக் கற்பிக்க வேண்டும். இவர்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்த வேண்டும். இவர்கள் வாழ்வை நலமுடையதாக்க வேண்டும்.

இம்மக்களிடையே குடிப்பழக்கம் பரவி, அதனால் இவர்கள் மிக வருந்துகிறார்கள். அக் கொடிய பழக்கம் இவர்களைவிட்டு அகல மறுக்கிறது. பல நாட்களில் தங்கள்கூலி முழுவதையும் குடிக்கெனச் செலவிட்டுப் பட்டினியாகத் தங்கள் பெண்டு பிள்ளைகளை விட்டுவிட்டுத் தங்களறிவு கெட்டுக்கிடக்கிறார்கள் இவ்வேழை மக்கள்.

“ அறிவை அழிக்கும் ; செயலழிக்கும் ;
அழியா மானந் தனையழிக்கும் ;
செறியும் அறிஞர் மதியாத
செருக்கை விளைக்கும் ; ஈன்றாளும்
முறியும் வெறுப்பு மிகவிளைக்கும் ;
முனிவு விளைக்கும் ; பகையஞ்சாக்
குறிகள் விளைக்கும் ; நகைவிளைக்கும் ;
கொள்ளேல் கள்ளுண் டலைமைந்தா !”

—விநாயக புராணம்

என்று இவர்கட்கு நல்லுரைகளால் புத்தி புகட்டி, இவர்கள் வாழ்க்கையைச் சிறப்புறச் செய்ய வேண்டும்.

“ஈனப்ப றையர்க ளேனும்—அவர்
எம்முடன் வாழ்ந்திங்கி ருப்பவ ரன்றோ ?
சீனத்த ராய்விடு வாரோ ?—பிற
தேசத்தர் போற்பல தீங்கிழைப் பாரோ ?”

—பாரதியார்

10. கிராமச் சிறு கைத்தொழில்

"கடவுள் ஈகுவன்என் றெண்ணிநித் தியமும்
கருதுறு முயற்சிசெய் யானேல்,
அடல்உறு செல்வம் அடைகுவ னேகொல்?
அருங்கலத்து இட்டபால் அடிசில்
மிடலுடைக் கரத்தால் எடுத்துணுது எங்ஙன்
வீங்கும்வெம் பசிப்பிணி ஒழிப்பன்?
உடல்பவந் தனக்கோ ராகர மாகும்
உடல்நனி வாட்டுமெய்த் தவத்தோய்!"

—குசேலோபாக்கியானம்

நம் நாட்டினரிடையே 'எல்லாம் கர்ம பலன்,' என்று முடிவு கட்டும் குணம் மிகவும் வலுத்து நிற்கிறது; 'மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்,' என்ற வாழ்க்கைத் தத்துவமே தலையெடுத்து உலவுகிறது. 'எல்லாம் அவன் செயல்,' என்று எந்தக் காரியத்திற்கும் வியாக்கியானம் கொடுப்பது சர்வ சாதாரணமாய் இருக்கிறது. கஷ்டப்படுவோர் அக்கஷ்ட நிவர்த்திக்கான முயற்சி செய்வதில்லை. அக் கஷ்டம் தலை எழுத்தின்படியாம் என்று அநேகர் சும்மா இருப்பது கண்கூடு. இப்படிப் பட்ட போலி வேதாந்தம் பேசிப்பேசி நம்மவர் பலர் வீண் பொழுது போக்குகின்றனர். அவர்கள் தங்கள் பொருள் நிலையை விருத்திசெய்ய

விரும்புகிறார்களில்லை; அதற்காக முனைந்து முயற்சி செய்கிறார்களில்லை. நகரங்களிலிருக்கும் மாந்தர்களைவிடக் கிராம வாசிகள் இந்த விஷயத்தில் பெரிய குற்றவாளிகளாய் இருக்கிறார்கள்.

கிராம வாசிகள் ஓர் ஆண்டில் சுமார் 4 அல்லது 6 மாதங்களே வேலை செய்கிறார்கள். தக்க இயந்திரங்களின் உதவியைக்கொண்டு சாஸ்திரீயமான முறையில் அதே வேலையை 40 நாட்களுக்குள் செய்துவிடலாமென்று அறிஞர் கூறுகின்றனர். நல்ல நீர்ப்பாசன வசதிகள் இல்லாத இடங்களிலே வருஷத்துக்கு 150 முதல் 270 நாட்கள் வரையில் வீண் பொழுது போக்க வேண்டி இருக்கிறது எனக் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. தென்னிந்தியாவைப் பற்றி ஆராய்ச்சி செய்த டாக்டர் சிலேட்டர் என்பார், 'வருஷத்தில் பன்னிரண்டில் ஐந்து பங்கு (5/12) காலத்தைத்தான் விவசாயி பயனுளதாகச் செலவிடுகிறான்,' எனக்குறிப்பிட்டிருக்கிறார். அரசாங்க விவசாயக் கமிஷன் அங்கத்தினர், "பொதுவாகக் கூறுமிடத்து விவசாயி மிகக் குறைந்தபட்சம் இரண்டு முதல் நான்கு மாதம் வீண் பொழுது போக்குகிறான்," என அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். பம்பாய் டெக்காணைப்பற்றி எழுதி

யுள்ள திரு. கீட்டிஞ்சு, 'விவசாயி சாதாரண மாக 180 முதல் 190 நாட்கட்குமேல் வேலை செய்யக்காணேன்,' என எழுதியுள்ளார். கால் வர்ட் என்பவர், 'பஞ்சாபு மாகாணத்தில் சுமார் 150 நாட்கட்குமேல் விவசாயிகட்கு வேலை இல்லை,' எனக் கண்டிருக்கிறார். ஐக்கிய மாகாணப் பாங்கு விசாரணைக் கமிட்டியார், 'விவசாயிகளுக்கு 200 நாட்கட்கு மேல் வேலை இல்லை,' எனக் கூறியுள்ளார்.

எனவே, வேலை செய்த நாட்கள் தவிர ஏனைய நாட்களை விவசாயிகள் வீணே கழிக்கின்றார்கள். விவசாயத்தில் மாத்திரம்போதிய வரும்படி கிடைப்பது அரிதாயிருக்கிறது. எனவே, திரு. டார்லிங்கு என்பார் கூறியுள்ளபடி விவசாயி கடனுண்டு வாழாமல், வறுமையால் வருந்தாமல் இருக்க வேண்டுமானல், ஏதேனுமோர் உதவிக் கைத்தொழிலைக் கைக்கொள்ள வேண்டும். ஜப்பான் இப்போது கைத்தொழிலிலும் வாணிபத்திலும் உலகத்திலேயே முன்னணியில் இருக்கின்றது. அந்தத் தேசத்தில் விவசாயிகள் அனைவரும் ஏதானும் ஒரு கைத்தொழிலைச் செய்கிறார்கள். ஜப்பானில் உள்ள கைத்தொழிற்சாலைகளெல்லாம், மற்ற நாடுகளிலுள்ளவை போல மிகப் பெரியவைகள் அல்ல. ஜப்பானில் 55,948 கைத்தொழிற்

சாலைகள் இருக்கின்றனவாம். அவைகளில் பாதிக்கு மேற்பட்டவை 5 ஆட்கள் முதல் 9 ஆட்கள் வரையில் வேலையாட்களை வைத்துக் கொண்டு நடத்தப்படுவனவாம். நூற்றுக்கு 0·5 ($\frac{1}{2}$%) விகிதம் கைத்தொழிற்சாலைகளே 1000 தொழிலாளிகளையும் அதற்கு மேற்பட்ட எண்ணுடைத் தொழிலாளிகளையும் உடையன வாம். ஜெர்மனியிலும் தொழிற்சாலைகளில் 100க்கு 90 தொழிற்சாலைகள் சிறு தொழிற் சாலைகளே. மொத்த சனங்களில் ஐந்தில் இரு பங்கினர் அந்தச் சிறு தொழிற்சாலைகளிலே வேலை பார்க்கின்றனராம். பிரான்ஸ், இட்டலித் தேசங்களிலும் சிறு கைத்தொழில் களே கிராம வாசிகளிடையே மிகப் பரவி இருக்கின்றன. ஜப்பானில் 'பட்டுப்பூச்சி வளர்த்தல்' மிகவும் இலாபகரமான சிறு கைத் தொழிலாய் இருக்கிறது. ஐரோப்பிய நாடு களில், முக்கியமாகப் பிரான்சு, ஜெர்மனி, இட்டலித் தேசங்களில், ஆடுமாடு போஷணை செய்தல், பன்றி வளர்த்தல், கோழியைப் பெருக்கல் முதலியவை முக்கியமான கிராமக் கைத்தொழில்களாகும். அவை நல்ல பயனை யும் தருகின்றன.

இந்திய விவசாயிகட்கு ஏற்றனவாக, அவர் களின் விவசாய முயற்சிக்கு இடையூறு இல்லா

தனவாக, வருவாய் தரத்தக்கனவாக, சில கைத் தொழில்களை ஏற்படுத்த வேண்டும். சர் ஆல் பிரட் சேட்டர்டன் (Sir Alfred Chatterton) கூறியுள்ளது போல இந்தியாவில் அநேக சிறு கைத்தொழில்கள் விருத்தியாவதற்கு ஏற்ற வசதிகளுள்ளன. கடந்த நூறு ஆண்டுகட்கு முன்பு இந்தியாவில் எல்லா இடங்களும் எல்லாக் கைத்தொழிலிலும் சிறந்திருந்தன. கிழக்கிந்திய கம்பெனியாரின் ஆதரவில் டாக்டர் புக்கனன் (Dr. Buchanan) என்பவர் வட இந்தியா தென்னிந்தியா முழுவதையும் சுற்றிப் பார்த்துக் கைத்தொழில்களின் நிலையைப்பற்றி விவரமாய் எழுதியிருக்கிறார். அக் குறிப்புகள் 1838-ஆம் ஆண்டில் வெளியிடப் பட்டன. அவற்றைப் பார்த்தால், நாடெங்கும் எல்லாத் தொழில்களும் செய்யப்பட்டன என் பதை அறியலாம். குறித்த சில ஜாதியாரே குறித்த தொழில்களைச் செய்யலாம் என்ற கட்டுப்பாடு அவ்வளவாக அப்போதில்லை. உதாரணமாகப் பார்ப்பனப் பெண்டிர் தவிர மற்ற எல்லாச் சாதிப் பெண்களும் நூல் நூற்ப தையும், பட்டு இழைப்பதையும், தமது வேலை யாக வீடுகளில் செய்துவந்தார்களென அவர் குறிப்பிட்டிருக்கிறார். அத்தொழில்களெல்லாம் அரசினர் நோக்கு முறை வேறுபாடுகளாலும்,

மில்களின் போட்டியாலும் அழிந்தொழிந்து போயின. வறுமை மிகுத்தது. எனவே, அக் கைத்தொழில்களைப் புத்துயிர் பெற்று எழுந் துலவும்படி செய்ய வேண்டுவது இன்றி யமையாதது.

கைத்தொழில்களை உயிர்ப்பிக்கும் போதும், துவக்கும்போதும் சில விஷயங்கள் கவனிக்கற்பாலன. சிறு கைத்தொழிற்சாலைகளில் உண்டாக்கப்படும் பொருள்கள் மிகப் பிரயோஜனமானவையாக இருக்க வேண்டும். திரு. உல்பு (Mr. Wolf) என்பவர், "இங்கிலாந்தில், இந்திய பொருள்கள், ஜப்பான் பொருள்களைப்போல அவ்வளவு நன்ருக விற்பதில்லை. இந்திய பொருள்கள் அழகியவாகவும், செவ்வையாகவும் செய்யப்பட்டிருப்பினும், ஜப்பான் பொருள்களைப்போல அத்துணை உபயோகமானவையாக இல்லை," எனக் குறிப்பிட்டிருக்கிருர். எனவே, கிராமங்களில் செய்யப்படும் பொருள்கள் மிகவும் பிரயோஜனமானவைகளாக இருத்தல் வேண்டும்.

இரண்டாவதாகக் கிராமங்களில் செய்யப்படும் பொருள்களின் மதிப்பில் பெரும்பாலான பாகம் தொழிலாளியின் உழைப்பினுல் ஏற்பட்டதாய் இருத்தல் வேண்டும். அப்படிப் பட்ட பொருள்களை உண்டாக்கிறைற்ருன்

தொழிலாளிக்குத் தக்க ஊதியம் கிடைக்கும். அந்தந்த இடத்தில் எந்த மூலப் பொருள்கள் எளிதில் கிடைக்கின்றனவோ, அவற்றிற்கேற்ற பண்டங்களை உற்பத்தி செய்ய வேண்டும். இங்குக் குறிக்கப்பட்டவைகளில் இரண்டாந் தன்மையைப் பெற்றுள்ளவை கண்ணாடி வளையல் தொழில் போன்றவை.

மூன்றாவதாகக் கவனிக்கவேண்டிய விஷயம் கிராமங்களில் மிக அழகிய, தனிப்பட்ட மனிதர் விரும்பத்தக்க பொருள்களையே உற்பத்தி செய்ய வேண்டுமென்பதே. சாதாரணமான, பெருவாரியான மக்கள் உபயோகிக்கிற, ஒரே மாதிரியான பொருள்களை இயந்திர உதவியால் அபாரமாக உற்பத்தி செய்து குறைந்த விலைக்குக் கொடுக்கக்கூடும். அப்படிப்பட்ட பொருள்களைக் கிராமத்தினர் உற்பத்தி செய்ய முயலுவதில் பயனில்லை. விசேஷ தன்மையதாய், ஒன்றைப்போல மற்றொன்றில்லாததாய், தனவந்தர் விரும்பக் கூடியதாய் உள்ள பொருளைக் கிராமங்களில் உற்பத்தி செய்தால், பெரும்பயன் கிட்டும். உதாரணமாக, இரத்தினக் கம்பளத்தைை எடுத்துக் கொள்வோம்: நெய்வோன் திறமைக்கேற்றவாறு பல வேறு விதமான அழகிய கம்பளங்கள் நெய்யலாம் அல்லவா?

சமீப காலம் வரையில் நீராவியையே இயந்திரங்களை இயக்குவதற்கு உபயோகித்தனர். இப்போதோ, மின்சார சக்தியின் உதவியால் கிராமங்களில் சிறு கைத்தொழிற் சாலைகள் பலவற்றை எளிதில் ஏற்படுத்தலாம்.

கிராமங்களில் மிக முக்கியமாக வளர்க்கக் கூடிய கைத்தொழில், ஆடுமாடு சம்ரக்ஷணை. பால், பாலேடு வியாபாரத்தில் டென்மார்க்குத் தேசத்தினர் மிக்க இலாபம் அடைகின்றனர். அவர்களைப்போல நாமும் நல்ல பசுக்களைச் செவ்வையாகப் போஷித்து, திரண்ட பாலைப் பக்கத்திலுள்ள பட்டினங்கட்கு அனுப்பலாம். வெண்ணெயை டின்களில் அடைத்து, நீண்ட தூரத்திலுள்ள இடங்கட்குக்கூட அனுப்பலாம். அம்மிருகங்களின் சாணம் முதலியவை தக்க எரு ஆகும். திரு. கீட்டிஞ்சு என்பவர், விவசாயிகட்கு இதுவே மிகச்சிறந்த தொழிலாகும் எனக் கூறுகிறார்.

'கோழி வளர்த்தல்' நல்ல தொழில். வற்றிய உடம்புடன் ஊர் முழுதும் திரிந்து வரும்படி கோழிகளை வளர்த்தல் அறிவுடைமை அன்று. கோழிகட்கெனக் கூண்டுகள் தயாரித்து, நல்ல போஷணையில் வைத்து, நல்ல ஜாதிக்கோழிகளை வளர்த்தால், முட்டைகளைப் பக்கத்து ஊரிலோ அல்லது சற்றுத் தூரத்தில்



தேனீ வளர்த்தல் தேடற்காம் தொழில்
(சென்னை, ஹரிஜன குருகுலமான 'கோகுலத்தில்' தேனீ வளர்த்தல்)
[பக்கம் 113]

உள்ள ஊரிலோ விற்று நல்ல ஊதியம் பெறக் கூடும்.

'தேனீ வளர்த்தல்' இலாபகரமான ஒரு தொழில். தேனீக்கட்கென நல்ல கூண்டுகள் தயாரித்து, நல்ல பூச்சிகளை விட்டுவிட்டால், நிறையத் தேனைப்பெறலாம். சென்னையிலுள்ள கோகுலத்தாரும், சென்னை விவசாய டிபார்ட் மெண்டாரும் இதைப்பற்றிய முழு விவரங்களை யும் மகிழ்வுடன் தெரிவிப்பார்கள்.

விவசாயத்திற்கு வேண்டிய சிறு கருவி களை ஆங்காங்குச் சிறு தொழிற்சாலைகளில் கிராம வாசிகள் செய்ய முயல வேண்டும். அப் போது தொலை தூரத்திலிருந்து கொண்டு வரும் தூக்கு கூலி இல்லாது போகும். நமது இஷ்டப்படி வேண்டிய கருவிகளைச் செய்து கொள்ளலாம்.

'பட்டுப்பூச்சி வளர்த்தல்' மிக நல்ல கைத்தொழிலே. ஆனல், அதை எல்லாவிடத் திலும் செய்ய முடியாது. சீதோஷ்ண ஸ்திதி முதலியவை ஏற்றவையாக இருக்குமிடங்களிற் ரூன் அத்தொழிலைச் செய்ய முடியும்.

'பூ, பழத் தோட்டங்கள் வைத்தல்' மிகப் பிரயோசனகரமானது. பல இடங் களில் காய் கறிகளைப் பயிராக்குவதில்லை; இனிய பல பழங்களை உண்டாக்குவதில்லை;

அழகிய மணமுடைப் பூச்செடிகளை வளர்ப்பதில்லை. இந்தத் துறையில் கிராம வாசிகள் முயன்றால், நல்ல இலாபம் பெறலாம்.

இவையல்லாமல், குறிப்பிடத் தக்க சிறு கைத்தொழில்கள் எத்தனையோ உள. சரிகை தைத்தல், துணிகளில் பூ வேலை செய்தல், அரக்கு வேலை செய்தல், நெட்டி வேலை செய்தல், விளையாட்டுச் சாமான்கள் செய்தல், மூங்கில் பிரம்புச் சாமான்கள் செய்தல், கயிறு திரித்தல், பின்னல் வேலை செய்தல், பீடி சுருட்டு சிகரெட்டுச் செய்தல், கண்ணாடி வளையல் செய்தல், மரச் சாமான்கள் செய்தல், தித்திப்புத் தின்பண்டங்கள் பெப்பர்மிண்டு முதலியவை செய்தல், கம்பளி ஜமக்காளம் நெய்தல், மா அரைத்தல், நெல் குற்றல், எண்ணெய் ஆட்டல், பழங்களையும் பழங்களாலான பண்டங்களையும் டின்களிலடைத்து அனுப்பி வியாபாரஞ் செய்தல், மண் பாண்டங்கள் செய்தல், தாவரப் பொருள்களிலிருந்து சாயம் இங்கி வர்ணம் முதலிய பொருள்களை உற்பத்தி செய்தல், பொத்தான்கள் செய்தல், பென்சில் பேனுக்கட்டை முதலியன செய்தல், எனமல் சாமான்கள் செய்தல், சோப்பு வாசனைத் திரவியங்கள் செய்தல், சர்க்கரை செய்தல், கத்தி முதலிய சாமான்கள் செய்தல், தீக்குச்சி செய்

தல், தோல் சாமான்கள் செய்தல், பனியன் கால் மேல்ஜோடு முதலியவைகளைப் பின்னல், காகிதஞ் செய்தல், பிரஷ் செய்தல் (Brush Making) முதலிய பலவாகும். ஒவ்வொரு தொழிலையும் பற்றிய குறிப்புகளையும் இங்கே விரிவாக எழுதுவதற்கிடமில்லை.

நூல் நூற்றலையும், கை நெசவு நெய்தலையும் பற்றி ஒரே விதமான அபிப்பிராயம் இல்லை. மகாத்துமா காந்தி முதலிய பெரியோர் கதருற்பத்தியின் அவசியத்தைப்பற்றி மிகவும் விளக்கமாகக் கூறியுள்ளனர். ஒவ்வொரு ராட்டினமும் ஓர் ஆண்டுக்கு 15 முதல் 25 ரூபாய் வருமானத்தைத் தருகிறது. கதர் அபிவிருத்திக்கு இரண்டு இடர்ப்பாடுகள் இருக்கின்றன: ஒன்று, மிக மெல்லிய உடைகளை மக்கள் அணிந்து பழகியுள்ளது; மற்றொன்று, மில் துணிகளைவிடக் கதர் விலை கிராக்கியாக இருப்பது. முதலாவதான இடரை நீக்குதல் அதிக சிரமமானதன்று. இரண்டாவது தடை பெரிய கஷ்டத்தை உண்டாக்குகிறது. கவர்ன்மெண்டார் உதவி நிதியளித்தல் முதலிய பல வகைகளால் கதர்த் தொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டும். இத்தொழில் அதிக இலாபத்தைத் தரவில்லை எனினும், வறுமையில் வருந்துவோருக்கு நன்மையாயிருக்கிறது.

எனவே, கிராம வாசிகள் தங்கள் நேரத்தை வீணாக்காது, பல துறைகளில் புகுந்து பல தொழில் மூலமாகவும் பொருள் விருத்தி செய்தால், இல்லாமை இல்லாததாகிவிடும்.

“ இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!
யந்தி ரங்கள் வகுத்திடு வீரே!
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே!
கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே!
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயி ரந்தொழில் செய்திடு வீரே!
பெரும்பு கழ்நுமக் கேஇசைக் கின்றேன்
பிரம தேவன் கலைஇங்கு நீரே!”—பாரதியார்

11. கிராமக் கூட்டுறவு

“ஒன்றுபட் டாலுண்டு வாழ்வே !—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே !
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் ;—இந்த
ஞானம்வந் தாற்பின் நமக்கெது வேண்டும்?”

—பாரதியார்

ஒற்றுமையின் சிறப்பை இவ்விரண்டு அடிகளும் நன்கு விளக்கிக் காட்டுகின்றன. ஒற்றுமை இருந்தால், எத்தனையோ காரியங்களைச் சாதிக்கலாம். அது இல்லாததாற்றான் பல இன்னல்கள் விளைகின்றன. ஒவ்வொருவரும், பிறருக்கும் உதவிபுரிந்து தாமும் பயன் பெறுவதே கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படையான கொள்கையாகும். ‘ஒருவருக்காகப் பலரும்; பலருக்காக ஒவ்வொருவரும்,’ என்பதே கூட்டுறவு இயக்கத்தின் தத்துவமாகும். 1915-ஆம் ஆண்டின் கூட்டுறவு இயக்க அறிக்கையிற் கூறுமாறு, “ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் மற்றவர்களுடன் கூடி, ஒழுக்க முறையில் உயர்ந்து, பரஸ்பர உதவியால், பணக்காரருக்கோ அதிகாரம் மிக்கவர்கட்கோ கிடைக்கக்கூடிய வசதிகளையெல்லாம்

பெற்று, முழு மனிதனைத் தன் எல்லா வித விருத்திக்கும் ஆக்கம் தேடுவதுதான்" கூட்டுறவு இயக்கத்தின் பயன் ஆகும். இக்கூட்டுறவு இயக்கம் பல வழியாலும் கிராமவாசிகட்குப் பயன் தர வல்லது.

சமீபத்தில் எடுக்கப்பட்ட கணக்குகளின் படி விவசாயிகளின் கடன் 900 கோடிகளாகும். 1880, 1901 வருஷப் பஞ்ச விசாரணைக் கமிட்டிகளின் அறிக்கைகளின்படி நில உரிமை பெற்றோர்களில் மூன்றில் ஒரு பங்கினர் கடனாளிகளாய் இருக்கின்றனர். சராசரி ஒவ்வொரு விவசாயியும் ரூபாய் 50 கடன் உடையோனாய் இருக்கிறான்.

அடுத்த பக்கத்திலுள்ள அட்டவணை கடன் பளுவை எளிதில் காட்டுகிறது. மேலும், விவசாய விளை பொருள்களின் விலை மிக விழுந்து போய்விட்டபடியால், இக்கடன் சுமை இன்னும் அதிகமாகிறது.

பிரிட்டிஷ் ஆட்சி ஏற்படுவதன் முன்பு மக்களிடையே நிலைப்பட்ட ஆட்சியும் நிலைமையும் இல்லாமையால், கடன் அதிகமாய் இல்லை. "கடனுண்டு வாழாமை காண்டல் இனிதே," என்றபடி சௌக்கியமாய் வாழ்ந்தார்கள் இந்திய விவசாயிகள். ஆங்கில ஆட்சியிலே கடன் அதிகப்பட ஆரம்பித்தது. நிலத்தை அடை

மாகாணத்தின் பெயர்	மக்கள் தொகை இலட்சக் கணக்கில்	கடன் தொகை கோடிக்கணக்கில்	ஒரு விவசாயியின் கடன்
சென்னை	460	150	50
பம்பாய்	218	81	49
வங்காளம்	501	100	31
ஐக்கிய மாகாணம்	484	124	36
பர்மா	146	50-60	,,
மத்திய மாகாணம்	155	36	30
பஞ்சாப்பு	235	135	92
பீகார்—ஒரிஸா	376	155	31
மத்திய மாகாணங்கள்	,,	18	,,
பிரிட்டிஷ் இந்தியா முழுதும்	2715	881	,,
திருவாங்கூர்	50	27	54

மானமாக வைத்துக் கடன் வாங்கவும், கடன் கொடுத்தோன் கோர்ட்டில் பிராது செய்து பணத்தையாவது நிலத்தையாவது எடுத்துக் கொள்ளவும் வசதிகள் இப்போதுள்ளன.

ஆங்கில ஆட்சியின் ஆரம்ப காலத்திலே மிக அதிகமாக வரி விதித்ததும், கண்ணோட்டமின்றி அவ்வரி முழுதையும் வசூல் செய்ததுமே கடனுக்கு அஸ்திவாரமாய் இருக்கின்றன. சொற்ப வருமானத்தை உடைய விவசாயி அக்கடனைத் தீர்க்க அசக்தனுகிறான்; மூடப் பழக்க வழக்கங் காரணமாகச் சுபாசுபக் காரியங்களுக்காக மேலும் மேலும் கடன் வாங்குகிறான். ஓர் அறிஞர் கூறியதே போல இந்திய விவசாயி, 'கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனிலேயே இறக்கிறான்.'

சமீப வருஷங்களில் விளை பொருள்களின் விலை மிகவும் இறங்கிப் போய்விட்டபடியால், அநேக விவசாயிகள் அரசிறை (கிஸ்தி அல்லது நிலவரி)யைக் கொடுக்க முடியாது வருந்துகிறார்கள். நில வரி கால நிலைக்கேற்ப மாறுந் தன்மையதாய், என்றும் பதினாறுள்ள மார்க்கண்டேயனைப் போல, ஒரே அளவாய் இருக்கிறது. எனவே, வரிப்பணம் கொடுப்பதற்காகக்கூட அநேகர் கடன் வாங்க நேரிடுகிறது.

பெரும்பாலும் விவசாயிகள் கடன்கொள்வது பொருள் உற்பத்திக்கு அன்று. உடனே செலவிடற்கு அல்லது உண்டு களிப்பதற்கே ஆகும். அப்படிப்பட்ட கடனைக் குறைந்த வட்டிக்கு வாங்கினால், ஒரோ வழி திருப்பிக் கொடுக்க முடியும். அஃதங்ஙனமில்லை. வட்டி மிகக் கடுவட்டி. மாக்லாகர் கமிஷன் (Maclagar commiisson) கூறியதே போல நூற்றுக்கு 38,48,60 (38%48 % 60%) வட்டி வாங்குகிறார் அந்தக் கடன் கொடுப்போர். அம்மட்டோ? வேண்டும்போது சிறு தொகைகளைக் கடன் கொடுத்து, வட்டிக்கு வட்டி கூடப் போட்டு, வருத்திப் பணத்தைப் பெறுகிறார்கள். சிறு கடைக்காரர்கூடச் சில சாமான்களைக் கடன் கொடுத்துவிட்டு அறுவடைக் காலங்களில் ஒன்றுக்கிரண்டாக வசூலித்துவிடுகின்றனர். அதல்லாமலும், கடன் கொடுக்கும்போது மாசூல் கைக்கு வந்ததும் அந்தப் பொருளை இன்ன விலை வீதம் கொடுக்க வேண்டுமென்றும் ஏற்பாடு செய்துகொண்டு குறைந்த விலைக்கு அவைகளை வாங்கிக்கொள்ளுகின்றனர். விவசாயியும், வேறு வழியில்லாமல், கடனுக்கு அடிமையாகிறான்.

இந்த மோசமான நிலைமையை நிவர்த்திக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் பெரிதும் பயன்

படக் கூடும் எனக் கண்டு, அவ்வாறு செய்ய வேண்டுமென முதலில் 1899-ஆம் ஆண்டில் எடுத்துக் காட்டியவர் சென்னை அரசாங்க அதிகாரியாயிருந்த திரு. பிரடரிக் நிக்கல்ஸன் என்பார். (Mr. Frederic Nicholson). பிறகு 1900-ஆம் ஆண்டில் மத்திய மாகாண அதிகாரி யாய் இருந்த திரு. டூபர்நெக்ஸ் (Mr. Dupernex) என்பவர், 'வட இந்தியாவில் ஜனங்களின் பாங்கி' என்னும்பெயருள்ள நூலில் கூட்டுறவு இயக்கத்தின் மேம்பாடுகளை விளக்கிக் காட்டி உள்ளார். லார்டு கர்சன் காலத்திலேதான் (1904ஆம் ஆண்டு) கூட்டுறவுக் கடன் சங்கச் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. அது முதல் கூட்டுறவு இயக்கம் இந்தியாவில் பரவ ஆரம்பித்தது.

இந்தக் கூட்டுறவு இயக்கம் டென்மார்க்கு, ஜெர்மனித் தேசங்களிற்றான் முதன்முதல் உண்டாகி, அத்தேசங்கட்குப் பெரிதும் பயன் தந்துள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் இரு வகைப்படும்: ஒன்று, உறுப்பினர் ஒவ்வொரு வரும் ஓர் அளவு, வரையறை இன்றி முழு லாப நஷ்டத்துக்கும் உரியராய் இருப்பது; மற் றொன்று, குறித்த ஒரு தொகை வரையிலே தான் நஷ்டத்துக்குப் பாத்திரராய் இருப்பது. இந்த இரு வகைச் சங்கங்களும் இந்தியாவில் பரவி வருகின்றன.

கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம வாசிகள் கடன் கொடுப்போர் கையில் சிக்காமல் இருக்க உதவி புரிகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் இப்போது விவசாயச் செலவு, நிலச் சீர்திருத்தச் செலவு, ஆடு மாடு வாங்கல், நில அடைமானத்தை நீக்கல், பழங்கடன் தீர்த்தல், வரி கொடுத்தல், விவசாயக் கருவிகள் வாங்கல், சுபாசுபக் கிரியைச் செலவு, கோர்ட்டுச் செலவு, குழந்தைகளைப் படிக்க வைத்தல் முதலிய பல செலவுகட்கும் கடன் தருகின்றன. ஆனால் குறித்த ஒருசிறு தொகையை ஆண்டுதோறும் கொடுத்துச் சில வருஷங்களில் அக்கடனைத் தீர்க்க வேண்டுமென்பது அச்சங்கங்கள் கோருவதாகும். விவசாயிகள் தக்க முறையில் அச்சங்கங்களை உபயோகித்துக் கொண்டால், பழங்கடன்களைத் தீர்த்துவிட்டு, மார்வாரி, சவுக்கார், நாட்டுக்கோட்டைச் செட்டி, உள்ளூர் உலோபி முதலியவர்களிடம் கடன் வாங்கி நிலத்தையும் பொருளையும் இழக்காது, சுகமாக வாழ முடியும்.

சிறு சிறு விவசாயிகள் உள்ள நாட்டிலே கூட்டுறவு இயக்கம் வேறு பல நன்மைகளையும் அளிக்கக்கூடும் என்பதற்கு டென்மார்க்கு, அயர்லந்து தேசங்கள் எடுத்துக்காட்டுகளாய் இருக்கின்றன. விவசாயக் கருவிகள், இயந்திரங்

கள், எரு, நல்ல விதைகள் முதலியவைகளைத் தனித்தனியே ஒவ்வொரு விவசாயியும் வாங்கு வதைவிடப் பலர் ஒன்று சேர்ந்து வாங்கினல், விலை குறைவாகவும் நல்லனவாகவும் வாங்கக் கூடும். அதற்காக மேற்கூறிய நாடுகளில் அநேக சங்கங்கள் வேலை செய்து வருகின் றன. இந்தியாவிலும் அங்கங்கே இத்தகைய சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆடு மாடு களின் உயிரை உறுதி கூறும் சங்கங்கள் அல் லது மிருக இன்ஷியூர் செய்யும் கூட்டுறவுச் சங் கங்கள் (Cattle Insurance Societies) சில நமது நாட்டிலும் தோன்றின. தக்க உணவின்மையா லும் பல் வேறு வியாதிகள் உண்மையாலும் மாடுகள் இறப்பதால், இச்சங்கங்கள் அதிக முன் னேற்றமடைய இடர்ப்பாடு ஏற்படுகிறது. மாடு களை விருத்தி செய்வதற்கென, 'பொலி காளைக் கூட்டுறவுச் சங்கங்கள்' (Cattle-breeding Socie- ties) சில ஏற்படுத்தப்பட்டுள்ளன. பம்பாய் மாகாணத்தின் தென் பகுதியில் காட்டுப்பன்றி முதலிய மிருகங்களால் பயிர்கட்கு ஊறு உண் டாகாதவாறு வேலி போட்டுக் காப்பதற்கென, 'வேலி போடும் சங்கங்கள்' தோன்றிப் பய னளிக்கின்றன. கூட்டுறவு நீர்ப்பாசனச் சங் கங்களும் சில உண்டாகிப் பாசன வசதியை விருத்தி செய்துள்ளன. இச்சங்கங்கள் வங்

காள, சென்னை ராஜதானிகளில் சில ஜில்லாக் களில் மிக அரிய சேவை செய்துள்ளன.

பஞ்சாப்பு மாகாணக் கிராமங்களில்வேறு விதச் சங்கங்கள் பெரிய நன்மை தந்துள்ளன. ஒரே மனிதனுடைய நிலம் சிறு சிறு துண்டு களாய் ஆங்காங்குச் சிதறுண்டு கிடப்பதை ஒன்று சேர்த்தால் பல நன்மைகள் விளையும்; எத்தனையோ விருத்திகள் செய்யலாம். அவ்வா றான காரியத்தையே பஞ்சாப்புப் புலங்களைக் கூட்டும் சங்கங்கள் (Societies for the Consolidation of holdings) செய்கின்றன. அவை களின் விருத்தி விரும்பத்தக்கது. பால், நெய் உண்டாக்கி நகரங்களில் விற்கக்கூடிய ‘நெய் பால் சங்கங்கள்’ (Dairy Societies) பல ஏற் பட்டால், கிராம ஆடு மாடுகள் அபிவிருத்தி அடையும்.

வங்காளத்திலே இரண்டொரு ஜமீந்தாரி சங்கங்கள் பெரிய நிலக்கிழவர்களின் பிள்ளை கட்குப் புதிய சாஸ்திரீய முறையில் பயிரிடக் கற்றுக் கொடுக்கின்றன.

அங்கத்தினர்கட்கு இராப்பள்ளிக்கூடங் கள் மூலமாகவும் வேறு வழியாகவும் அறிவு வளர்ப்பதற்கெனக் ‘கல்விக் கூட்டுறவுச் சங் கங்கள்’ ஒரு சில ஏற்படுத்தப்பட்டிருக்கின் றன. அங்கத்தினரிடையே சுகாதார முறை

களைப் பரப்புவதற்கும், எளிய முறையில் நோய்களைத் தீர்க்க உதவுவதற்கும் 'சுகாதாரக் கூட்டுறவுச் சங்கங்கள் உண்டாயிருக்கின்றன. இந்தத் துறையில் முதலில் வேலை செய்ய ஆரம்பித்தது வங்காளமாகும்.

கூட்டுறவுப் பண்ட சாலைகள் விவசாயிகட்குப் பெரிய நன்மை பயக்கக் கூடும். இப்போது கிராமங்களிலுள்ள சிறு கடைக்காரர் பல பண்டங்களை மிகக் கிராக்கியாக விற்கின்றனர். கூட்டுறவுப் பண்டசாலைகள் நல்ல சாமான்களைக் குறைந்த விலைக்குக் கொடுக்க இயலும். ஆனால், இது போன்ற சங்கங்களைச் செவ்வனே நடத்தப் போதிய அறிஞர் கிராமங்களில் கிடைப்பது துர்லபமாய் இருக்கிறது.

கூட்டுறவு இயக்கமானது மேற்கூறிய பலவிதங்களாலும் கிராம வாசிகளின் மிடியையும், கஷ்டத்தையும் போக்கக்கூடும். கூட்டுறவு நிதிச் சங்கங்கள் ஏற்பட்டுக் கடன் கொடுப்பதால், கிராம வாசிகட்கு வட்டியில் 40 முதல் 50 லட்ச ரூபாய் வரையில் இலாபம் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இதே மாதிரி பல வேறு விதச் சங்கங்களும் பல இலட்ச ரூபாய்களை இலாபமாக அடைய உதவி செய்யக்கூடும். அவை நல்ல பயனைத் தர வேண்டுமானால், மக்களிடையே கூட்டுறவு உணர்ச்சி

பரவல் வேண்டும்; ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் தலை சிறக்க வேண்டும். அப்போதுதான் இந்நாடு செழிப்புறும்.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்." —திருவள்ளுவர்

12. பொருள் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம்

இந்தியாவில் இப்போது எங்குப் பார்த்தாலும் 'கிராமப் புனருத்தாரணம்' 'கிராமச் சீர்திருத்தம்' என்னும் சொற்றொடர்களின் ஒலி முழங்குகின்றது. அரசியல் கட்சிகளும், அரசாங்கமும் விவசாயிகளின் நன்மையைப் பெரிதும் விரும்புகின்றன.

இந்திய விவசாயியை வறுமைக் கடலிலிருந்து கரையேற்ற வேண்டுமானால், செய்ய வேண்டிய காரியங்கள் பல. விவசாயியின் கழுத்துச் சுருக்காகிய வரியின் பந்தத்தை அவிழ்த்துவிட முடியாவிடினும், தளர்த்தவாவது முயல வேண்டும்; கைகால்களைப் பிணித்திருக்கும் கடனாகிய பாசத்தை அறுத்தெறிய வேண்டும்; அவனைக் கீழே அமிழ்த்தும் 'விலை வீழ்ச்சிப்' பளுவைக் குறைக்க வேண்டும். இன்றேல், விவசாயி அழிந்தொழிவது திண்ணம்.

கடந்த சில ஆண்டுகளாக விவசாயப் பொருள்களின் (Agricultural products) விலை மிகவும் வீழ்ந்துவிட்டது. நல்ல விலை நிலவி இருந்த அக்காலங்களிற்கூட ஒவ்வொரு விவசாயியும் தன் விளை பொருள்கட்கு நல்ல விலை

பெறுவது துர்லபமாய் இருந்தது. இப்போதோ, கேட்க வேண்டியதே இல்லை! கடைசியாகப் பண்டம் கொள்வோருக்கும், விவசாயிக்கும் இடையே கழுகு போல வட்டமிட்டுக் கொண்டிருந்து இலாபத்தை அடித்துக் கொண்டு போகும் மனிதர் பலர் நம் நாட்டில் இருக்கின்றனர். உள்ளூர் வியாபாரி, பக்கத்துப் பெரிய ஊர் வியாபாரி, தலை நகரிலுள்ள மொத்த வியாபாரி, ஏற்றுமதி செய்யும் வியாபாரி எனப் பல வேறுபட்ட வியாபாரிகள் மலிந்து கிடக்கின்றார்கள். இவர்கள் அடையும் இலாபம் எல்லாம் இயற்கையில் விவசாயி அடைய வேண்டியவை. என் செய்வது! அந்த இலாபத்தை எல்லாம் இழப்பதற்குக் காரணம் அறியாமையும் ஒற்றுமை இன்மையுமே.

வெளியூருக்கு ஏற்றுமதி செய்யும் பெரிய வியாபாரியோ, கம்பெனியோ, உள்நாட்டு மொத்த வியாபாரிகட்கு முன்பணம்(Advance) கொடுக்கிறார்கள். அப்பெரிய வியாபாரிகள் ஒவ்வோர் ஊரிலுமுள்ள சிறு சிறு வியாபாரிகட்குப் பண உதவி செய்கிறார்கள். நம் நாட்டில் துரதிர்ஷ்டவசமாக ஏற்பட்டுள்ள வரி வசூல் கால ஏற்பாடு விவசாயிகட்கு மிக அசௌகரியத்தை உண்டாக்குகிறது. இட்ட பயிர் நிலத்திலிருக்கும்போதே வரிப்பண முண்ட

அவர்கட்குப் பெரிதும் உண்டாகிறது. அதனால், அவர்கள் புலத்திலுள்ள பொருளைக் காட்டி, உள்ளூர் வியாபாரியிடம் பணம் கேட்கிறார்கள். அவ்வியாபாரி மாசூல் அறுவடை ஆனதும் அதை இன்ன விலைக்குக் கொடுக்க வேண்டுமென ஓர் உறுதி செய்துகொண்டு, பணம் கொடுக்கிறான். பிறகு விலை ஏறுவது பெரும்பாலும் நிச்சயம் எனினும், பல விவசாயிகட்கு அது பயன் தருவதில்லை. அஃதன்றி வேறு சில விவசாயிகள், வைத்திருந்து விற்கலாமென்றாலும், உள்ளூர்ச் சிறு வியாபாரி மூலமாகவே பெரும்பாலும் விற்க வேண்டி இருக்கிறது. அப்போதும் உள்ளூர்ச் சிறு வியாபாரி முதல் ஏற்றுமதி செய்யும் பெரிய வியாபாரி வரையில் எல்லோரும் தக்க இலாபம் அடையத்தக்க அவ்வளவு குறைந்த விலைக்கே கொடுக்க வேண்டி இருக்கிறது. அல்லது உள்நாட்டுச் சந்தைகளில் விற்கக் கொண்டு போனால், அந்தச் சமயமுள்ள விலைக்கேற்றபடி கூடிய விலைக்கோ குறைந்த விலைக்கோ கொடுத்துவிட்டு வர வேண்டி இருக்கிறது.

இந்தப் பெருங்கஷ்டத்தை நிவர்த்திக்கக் கடந்த சில ஆண்டுகளாகப் பெருமுயற்சி செய்யப்பட்டு வருகிறது. நமது தென்னாட்டிலே அம்முயற்சியில் முன்னின்று வேலை செய்தவர்

இவ்வித விற்பனே இலாப மற்றது

[பக்கம் 130]

திருவாளர் டி. ஆதிநாராயண செட்டியார் (பார்-அட்-லா). அம்முயற்சியின் அடிப்படையானு தத்துவம், "நம்மில் ஒத்தால் உண்டு வாழ்வே," என்னும் சிறந்த கருத்தே. ஒவ்வொரு விவசாயியும் தனித்தனியே தன் முடைக்கு விற்காமல், கூட்டுறவு முறையை அநுஷ்டித்துச் சேர்ந்து விற்ருல், இலாபம் அதிகமாகப் பெறலாமென்பதைக் கூருமலே உணரலாம். கூட்டுறவு முறையின்படி விவசாய விளை பொருள்களை விற்பனை செய்தால், பல வேறு வகையான வியாபாரிகள் பணங் கொழுத்துப் படாடோபமாக இருக்க முடியாதென்பதை மேல்நாடுகளும், நம் நாட்டிலேயே பல இடங்களில் சமீப காலத்தில் தோன்றிய கூட்டுறவு விளை பொருள் விற்பனைச் சங்கங்களும் உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெள்ளிதில் காட்டி நிற்கின்றன.

இந்தத் துறையில் முதலில் வேலை செய்ய ஆரம்பித்தது பர்மா. அங்கே பல நெல் விற்பனைச் சங்கங்கள் நல்ல வேலைசெய்து வருகின்றன. பம்பாய் ராஜதானியில் பருத்தி வியாபாரத்தில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் பல செழிப்புடன் நடைபெற்று வருகின்றன. பம்பாய் ராஜதானியில் முக்கியமாக நான்கு இடங்களில் பல பருத்திச் சங்கங்கள் நடந்து

வருகின்றன. அவ்விடங்கள் (1) தர்வார், பெல் காம், (2) பிஜபூர், (3) சூரத்து, புரோச்சு, கெய்ரா, (4) காண்டேஷ் என்பனவாம். அவ்வி டங்களில் உள்ள சங்கங்கள் பல வேறுபட்ட அமைப்பையும், செயல் முறையையும் பெற் றுள்ளன. சில சங்கங்கள் அங்கத்தினர்களின் பருத்தியையெல்லாம் ஒன்று திரட்டி, அடித்து, சிப்பங்களாக்கி விற்பனைக்கு அனுப்புகின்றன. வேறு சில, அங்கத்தினர் பருத்தியையெல்லாம் குறித்த காலங்களிலே ஏல விற்பனை செய்கின் றன. மற்றுஞ் சில, தங்கள் கிடங்குகளில் விளை பொருளை வைத்திருக்க வசதி செய்து கொடுத்து, நல்ல விலைக்கு விற்று, கமிஷன் பெறுகின்றன. கூட்டுறவு பருத்தி விற்பனைச் சங்கங்கள் சூரத்து ஜில்லாவில் மிகச் செவ்வை யாக நடைபெற்றுப் பெரிதும் பயன் தருகின் றன. தென் மராத்தா தேசத்திலே கடாக்கு, ஹூப்லிச் சங்கங்கள் நன்ருய் நடைபெற்று வருகின்றன. பருத்தி விற்பனைச் சங்கங்கள் குஜரத்தில் சமீப காலத்திற்ருன் தோன்றின எனினும், மிகுந்த வேகமாக வளர்கின்றன.

நமது மாகாணத்தில் பல இடங்களில் கூட் டுறவு விற்பனைச் சங்கங்கள் முளைத்துள்ளன. திருப்பூர்ப் பருத்தி விற்பனைச் சங்கம் முதலில் அவ்வளவு இலாபகரமானதாகத் தோற்ற

வில்லை. இப்போதோ, ஆண்டொன்றுக்கு 4 இலட்ச ரூபாய் வியாபாரம் அச்சங்கத்தின் மூலம் நடைபெறுகிறது. கோயில்பட்டியிலுள்ள சங்கமும் செவ்வையாய் நடக்கிறது. தூத்துக் குடி, திண்டுகல் முதலிய இடங்களிலுள்ள சங் கங்கள் கூடிய சீக்கிரத்தில் முன்னேறி பெரி தும் பயன்படக் கூடுமென எண்ணப்படுகிறது.

தென் ஆற்காட்டு ஜில்லா, கடலைக் கொட்டை விளைவுக்குப் பெயர் போனது. கடலை விற்பனைக்குக் கூட்டுறவு விற்பனைச் சங் கங்கள் தோன்றின. முதலில் அத்துணை ஜயம் பெருவிடினும், தென் ஆற்காட்டுச் சங் கங்கள் இப்போது 4 இலட்ச ரூபாய் பெறு முள்ள மணிலாக்கொட்டை வியாபாரம் செய் கின்றன.

சேலம் ஜில்லாவிலே இராசிபுர விற்பனைச் சங்கமானது கடலை வியாபாரத்திலே பெரிய திட்டம் போட்டு வேலை செய்ய வந்தது. கடலை விலை விழுந்துவிட்டபடியால், அப்படிச் செய்ய அதற்கு இயலவில்லை. அது இப்போது பருத்தி வியாபாரத்தில் முன்னேறி வருகிறது.

எனவே, இதுகாறும் தோன்றிய கூட் டுறவு விளை பொருள் விற்பனைச் சங்கங்கள் வெற்றியுடனேயே மேல் ஓங்கி வருகின்றன. சில இடங்களில் இச்சங்கங்கள் விளைபொருள்

களை விற்பனை செய்ய உதவுவதோடு, நல்ல விதைகளைச் சேகரித்துக் கொடுத்து, நல்ல விலைக்கு விற்கக்கூடிய தேர்ந்த விளைபொருள்களை உற்பத்தி செய்ய உதவிபுரிந்தும் வருகின்றன. ஒரே கிராமத்தின் பயனாக இரண்டு வித நிலைமை உண்டாகலாம்: நல்ல விதை இட்டுச் செவ்வையான விளை பொருளைப் பெற்றால், நல்ல விலைக்கு விற்று இலாபம் பெறலாம்; அன்றி மட்டமான விதையிட்டால் விதையைப் போலப் பயிரிருக்குமாதலால், நல்ல பயன் பெற முடியாது.

ஆகவே, விவசாயிகள் தங்கள் விளை பொருட்கட்கு நல்ல விலை பெற வேண்டுமானால், கூட்டுறவு விளை பொருள் விற்பனைச் சங்கங்கள் பலவற்றைத் தோற்றுவித்து, அவைகளின் மூலமாக விற்பனை செய்ய வேண்டும். இப்படிப் பட்ட சங்கங்கள் செவ்வையாக நடைபெறுவதற்கு மக்களுள் ஐக்கிய பாவமும் ஒற்றுமையும் அவசியம் வேண்டுமென்பதை வற்புறுத்திக் கூற வேண்டுவதில்லை. இச்சங்கங்களின் வெற்றிக்குப் பணமும், அறிஞரும் வேண்டும். மத்திய பாங்கு விசாரணைக் கமிட்டியார், கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் முன்னேற்றத்துக்கெனக் கூட்டுறவு பாங்குகள் பணம் விரும்பினால், தனிப்பட்ட குறைந்த வட்டிக்குப்

பணம் கொடுத்துதவ மாகாண அரசாங்கத்தினர் சிறிதும் தயங்கக் கூடாதென விளங்கக் கூறியுள்ளார்கள். சமீபத்தில், கவர்ன்மெண்டார் ஒவ்வொரு சங்கத்துக்கும் பதினாயிர ரூபாய்க்கு மேற்படாத தொகையைக் கிடங்குகள் கட்டுவதற்குத் தருவதாக முன் வந்துள்ளார்கள். அந்தத் தொகையில் நான்கில் ஒரு பங்கு வெகுமானமாகக் கொடுக்கப்படுமென்றும், மற்றைய மூன்று பங்கை நூற்றுக்கு $3\frac{1}{2}$ வட்டி வீதம் பணங் கொடுத்த ஆறாவது வருஷத்திலிருந்து 30 வருஷங்களில் கொடுத்துவிட வேண்டுமென்றும் ஏற்பாடுசெய்திருக்கிறார்கள். இது எவ்வளவு சௌகரியமான ஏற்பாடு என்பதைக் கவனியுங்கள்! மேலும், மாகாணக் கூட்டுறவு பாங்குக்காரர் மேற்கூறிய சங்கங்களின் நடை முதல் செலவுக்கு உதவி நிதியாக 1935-ஆம் ஆண்டில் 8500 ரூபாய் கொடுத்தருளி இருக்கிறார்கள்.

இம்முழு இயக்கத்தையும் நடத்தத் திறமை வாய்ந்த மனிதர் கிடைப்பது சிறிது கஷ்டமாக இருக்கிறது. எம்முயற்சியிலும் ஆரம்பத்தில் பல இடர்ப்பாடுகள் இருத்தல் இயல்பே. இக்குறையை நீக்கச் சென்னைக் கூட்டுறவுக் கலாசாலையில் பலரைப் பயிற்றுவித்து அநுகூலஞ் செய்வதாகச் சென்னை அரசினர் முன் வந்

துள்ளனர். அரசாங்க உதவியே அன்றி, மக்களின் ஆதரவும் ஊக்கமும் இன்றியமையாதவை.

எனவே, நம் நாட்டு விவசாயிகள் தங்கள் விளை பொருள்களை நல்ல விலைக்கு விற்பனை செய்து தங்கள் வேலையின் பயனை முற்றும் பெற வேண்டுமானால், ஆங்காங்குப் பல கூட்டுறவு விற்பனைச் சங்கங்களைத் தோற்றுவிக்க வேண்டும்; காய்தல் உவத்தலின்றிச் செவ்வையாக நடத்த வேண்டும். அதுவே விவசாயிகளின் பொருளாதார நிலையை விருத்தி செய்ய அநுஷ்டிக்கக் கூடிய சில சிறந்த வழிகளில் ஒன்று.

"இன்னல்வந் துற்றிடும் போததற் கஞ்சோம்.
ஏழைய ராகி இனிமண்ணில் துஞ்சோம்.
கன்னலும் தேனும் கனியும்இன் பாலும்
கதலியும் செந்நெலும் நல்குமெக் காலும்
உன்னதச் சீரிய நாடெங்கள் நாடே!
ஓதுவ மிஃதை எமக்கிலை ஈடே!"

—பாரதியார்

13. கிராமச் சீர்திருத்த முயற்சிகள்

"ஆக்கம்இங்கு ஒருவரால் அணுக வேண்டுமேல்
ஊக்கம்உண் டாவரேல் உறுவர் அன்னது ;
நீக்கமில் கொள்கையின் நிற்ப ரேயெனின்
மேக்குறு பெருந்திரு விரைவின் மேவுமால்."

—கந்த புராணம்

ஒரு மனிதனுவது, சமூகமாவது, நாடாவது முன்னேற்றமடைய வேண்டுமானுல், முயற்சி மிக அவசியம். 'முயற்சி திருவினை ஆக்கும்.' கிராமச் சீர்திருத்தத்தையும் மிக முயன்று செய்து முடித்தாற்ருன் மாந்தர் அனைவர் துயரமும் நீங்கும்.

கிராமச் சீர்திருத்தத் துறையிலே ஆங்காங்குச் சில முயற்சிகள் செய்யப்பட்டுள. அவைகளை ஒருவாறு அறிந்துகொண்டால், கிராமச் சீர்திருத்தம் செய்வது எளிதாய் இருக்கும்.

திரு. பிரேயன் என்பவர் பஞ்சாப்பு மாகாணத்தில் 'கர்கயான்' (Gurgaon) ஜில்லாவிலே கிராமப் புனருத்தாரணத் திட்டமொன்று போட்டு வேலை செய்தார் ; தம்முடைய மனைவியின் உதவியாலும், உத்தியோகத்திலிருந்த—உத்தியோகப் பற்றற்ற பல தீவிர உழைப்பாளிகளின் உதவியாலும், ஜனங்களு

டைய மனப்பான்மையையே மாற்றினர். சீதோஷ்ண ஸ்திதியால் ஏற்படுங் கஷ்டங்களை யும், வியாதிகள் கிருமிகள் ஜந்துகள் இவை களால் ஏற்படும் தொந்தரவுகளையும் தம் முயற் சியால் எளிதில் நீக்கிக்கொள்ள முடியும் என் பதையும், அக்குறைகளையும் கஷ்டங்களையும் நீக்கிக்கொண்டால், விளை பொருள் விருத்தியும் சுகமும் அதிகமாகும் என்பதையும் பிரசாரத் தினல் எடுத்துக் காட்டி, விவசாயியின் எல்லா முயற்சிகளையும், மனை வாழ்க்கையையும் எவ் வளவோ மாறுதல் செய்தார் அப்பெரியார். எட்டு வருஷங்கட்கு முன்பு ஆரம்பித்த அந்த வேலை இதற்குள் பெரிய பலனைத் தரு கிறது. இந்தக் குறுகிய காலத்திற்குள்ளேயே மிருக அபிவிருத்தி மிக அதிகம்; பயிரிடும் முறைகளின் திருத்தங்கள் எத்தனையோ; கூட்டுறவு முறைகளில் பெருக்கம்; வியாதிகளைத் தடுக்கும் முறைகள் மிகப்பல; கல்வி அபிவிருத் தி மிகத் துரிதம். முக்கியக் கருத்து என்னவென் ருல், கிராம வாசிகட்குச் சிறு சிறு பேச்சுக ளாலும், கதைகளின் மூலமாகவும், உழைப்பின் சிறப்பு, பெண்களின் பெருமை, சுத்தத்தின் மேன்மை, தொண்டின் தொன்மை இவைகளை விளங்கக் கூறலேயாகும். கிராமங்கட்கு வழி காட்டுவதற்காக அநேக வாலிபர்கட்கு--முக்கிய

மாகப் பெண்கட்கு—சுகாதார விதிகள், வைத்திய முறைகளிற் சில, கூட்டுறவு, விவசாய விருத்தி முறைகள் ஆகிய இவைகளைக் கற்பித்து, அந்தந்த ஜில்லா முழுதும் அவர்கள் கிராம விருத்திக்கு உதவுமாறு பல "கிராம வழிகாட்டிகளை"த் (Village guides) தயாரிக்க வேண்டும். ஆடவர்கட்குக் "கிராமச் சீர்ப்பாட்டைக் கற்பிக்கும் பள்ளிக்கூடமும் (A school for rural economy), பெண்கட்கென "இல்லச் செம்மைப்பாடு" (Domestic economy) சொல்லிக்கொடுக்கும் பள்ளிக்கூடமும் அங்கே ஏற்படுத்தப்பட்டுள்ளன. திரு. பிரேயன் "கிராம நன்மைச் சங்கம்" ஒன்று ஏற்படுத்தி, அதன் மூலம் கிராமச் சேவை செய்வோர்களையும் அரசியல் உத்தியோகத்தினரையும் ஒன்று கூட்ட வேண்டுமென்று கூறி இருக்கிறார்.

திரு. டார்லிங்கு I. C. S. தாம் வெளியிட்ட ஒரு நூலில் "கர்கயான் திட்டத்தை"ப்பற்றி ஆராய்ச்சி செய்துள்ளார். அதில் திரு. பிரேயன் மிகத் துரிதமாக வேலைசெய்தது அவ்வளவு சரியன்று எனக் கூறுகிறார்; மேலும், அத்திட்ட அநுபவத்திலிருந்து அறிந்துகொள்ளத் தக்க விஷயங்கள் சிலவற்றைக் குறிப்பிட்டிருக்கிறார்: "கிராமங்களில் மிக விரைவாகச் சீர்திருத்தங்களைப் புகுத்தலாகாது. பெரிய மாறு

பாடுகள் செய்யும்போது ஏதாவது ஆட்சேபனை இருந்தால், அது பொருத்தமா அன்று என்று ஆலோசித்து முடிவு செய்த பின்புதான் மாறுதல் செய்ய வேண்டும். யாராவது ஓர் அதிகாரியோ, ஒரு மனிதரோ, கிராமச் சீர் திருத்தத்தைச் செய்ய முயற்சி செய்வது போதாது. ஒரு திட்டத்தைப் போட்டுக் கொண்டு, ஒருவர் பின் ஒருவர் பலநாள் வேலை செய்துகொண்டிருத்தல் வேண்டும். கூடுமான வரையில் எவ்விதக் கட்டாயமும், மறைவாக வோ, நேர்முகமாகவோ இருத்தல் கூடாது; எந்தச் சீர்திருத்தமும் பிரசாரத்தாலும் அறிவு விளக்கத்தாலுமே வர வேண்டும். ஆனால், ஒரு வரம்பிற்குமேல் அவசியமானல் கட்டாயப் படுத்தியும் சீர்திருத்தங்களைப் புகுத்த வேண் டும்." இவைபோன்ற விஷயங்கள் கவனிக்கற் பாலன. பொதுவாக, "கர்கயான்" திட்ட மானது இந்திய சீர்திருத்த வாதிகளின் கவனத்தைக் கவர்ந்து, கிராமச் சீர்திருத்தம் எப்படிச் செய்ய வேண்டுமென்பதை நன்கு காட்டியது.

1934-ஆம் வருஷத்தில் இந்திய காங்கிரஸ் மஹா சபையானது அகில இந்திய கிராமக் கைத்தொழிற் சங்கமென ஒன்றை நிறுவி, அக்காலத்திலிருந்து மிகத்தீவிரமாகக் கிராம

விருத்திக்காக வேலை செய்து வருகிறது. இச்சங்கம் கைத்தொழில் முறைகளில் அநேக ஆராய்ச்சிகள் செய்து, அவைகளை எல்லாருக்கும் பயன்படச் செய்கிறது; சுகாதாரம், உணவு, கைத்தொழில் இவைகளைப் பற்றிய பல அரிய விஷயங்களை எல்லோரும் அறியும்படி பிரசாரம் செய்கிறது. சுருங்கக் கூறின், இறந்துகிடக்கும் கிராமச் சிறு கைத்தொழில்கட்குப் புத்துயிர் கொடுத்துள்ளது இச்சங்கம் என்றே கூறலாம்.

மகாத்துமா காந்தியடிகள் தீண்டாமையை ஒழித்து ஹரிஜனங்களை மேல் நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்னும் பெரிய தொண்டொன்றைத் தொடங்கி இருக்கிறார். "அகில இந்திய ஹரிஜன சேவா சங்கம்" என்னும் சங்கம் ஒன்று இதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. அச்சங்கத்தினர் தீவிரப் பிரசாரம் செய்கின்றனர். எனினும், பல அரசியல் தலைவர்களும் தங்கள் முழுச் செல்வாக்கையும் இச்சுபகாரியத்திற்காக உபயோகிக்கக் காணோம். இந்தத் துறையில் வேலை செய்ததன் பயனாக, அநேக கோயில்கள் தீண்டாதாருக்குத் திறந்து விடப்பட்டுள்ளன. கோயில்களுக்குள் செல்ல உரிமை ஏற்பட்டதால், மனிதருக்குள்ள அடிப்படையான உரி

மைகள் அவர்கட்கும் உண்டென்பது ஏற்பட்டது.

கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தைச் சேர்ந்த (Y. M. C. A.) பெரியார் ஸ்பென்சர் ஹாட்சு (Dr. D. Spencer Hatch) என்பவர் திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த மார்த்தாண்டம் என்னும் ஊரை மிகப் புகழுடையதாக்கிவிட்டார். அப்புகழுக்குக் காரணம், அங்கு அவர் செய்துள்ள கிராமச் சீர்திருத்த வேலையே. தோட்டங்களில் காய் கறி விளைவித்தல், கோழி வளர்த்தல், தேனீ வளர்த்தல், புதிய முறையில் வெல்லம் செய்தல், அதிகப்பால் கொடுக்கும் "சூரத்து" ஆடுகளையும், நல்ல ஜாதிப் பசுக்களையும் வளர்த்தல் முதலிய பல தொழில்களை நேரே செய்து காட்டி, அதனால் வரும் விசேஷ இலாபத்தை மக்கள் அறியும்படி செய்தார். அதைப் பின்பற்றி அக்கிராம வாசிகளும் தொழில் விருத்தி செய்தார்கள். அவ்வூரில் ஒரு கிராம அபிவிருத்திச் சங்கம் உண்டு. அச்சங்கத்தின் மூலமாக பஜனைகள், பாட்டுகள், நாடகங்கள், பொருட்காட்சி, சுற்றி வரும் புத்தக சாலைகள் இவைகளின் உதவியால் கிராமப் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது. இதல்லாமலும், கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தினரின் உழைப்

பால், கோயமுத்தூருக்குப் பக்கத்திலுள்ள இராமநாதபுரம் என்னும் கிராமத்திலும், மலபார் ஜில்லாவிலுள்ள அரியக்கோடு என்னும் ஊரிலும், நெல்லூர் ஜில்லாவிலுள்ள இந்துக் குருப்பேட்டை என்னுமிடத்திலும் கிராமச் சீர்திருத்த வேலை நடை பெறுகிறது.

1924-ஆம் ஆண்டில் கோதாவரி ஜில்லாவிலுள்ள ஆலமூரு என்னுமிடத்திலும், அதைச் சுற்றிலுமுள்ள சில கிராமங்களிலும் சத்திய நாராயண என்னும் ஒரு பெரியார் கூட்டுறவு முறைகளைப் போதித்து வந்தார். அப்போது சென்னை மாகாண மந்திரியாய் இருந்த திரு. அரங்கநாத முதலியார் மிக்க பொருளுதவிசெய்தார். 1928-ஆம் ஆண்டுக்குப்பின் திரு. அரங்கநாத முதலியாரின் பொருளுதவி நின்றுவிட்டது. அதிலிருந்து சென்னை மாகாணக் கூட்டுறவு பாங்கிலிருந்தும், இராமச்சந்திரபுரம் தாலூக்காத் தலைமைப் பாங்கிலிருந்தும் ஸ்ரீமான் சத்திய நாராயணவுக்கு ஆண்டொன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக உறுதி கூறப்பட்டது. அந்த உதவியால், அவர் மேலும் வேலையை நிறுத்தாமல் செய்து வந்தார். இப்போது சென்னை மாகாணக் கூட்டுறவுத் தலைமைப் பாங்கின் பொது நல நிதியிலிருந்து வருஷம் ஒன்றுக்கு 6000 ரூபாய்

வழங்கப்படுகிறது. அப்பொருளுதவியால் ஆறு கிராமங்களில் சீரமைப்புப் பணித்திட்டம் ஒன்று போட்டு வேலை நடந்து வருகிறது. அத்திட்டம், மாகாணக் கூட்டுறவு யூனியன் (Provincial Co-operative Union) காரியதரிசியும் இந்திய சேவா சங்கத்தின் முக்கிய அங்கத்தினருமான திரு. வேங்கட சுப்பையா அவர்களின் மேற்பார்வையில் இருக்கிறது.

இக்கிராமங்களில் செய்துள்ள முக்கிய வேலை கூட்டுறவு முறையைப் பெருக்கியதே ஆகும். உண்மைக் கூட்டுறவு உணர்ச்சி இந்த ஊர்களில் உண்டானபடியால், கூட்டுறவுச் சங்கங்களால் இவ்வூரார்கள் பெரிதும் பயன் பெற்றுள்ளார்கள். இந்தக் கிராமங்களில் கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்கள் தங்கள் செலவிலேயே குடி நீர் வசதிகள், பாடசாலைகள், ரஸ்தாக்கள் முதலிய சௌகரியங்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள். இங்குப் பல பஞ்சாயத்துகள் தோன்றி, ஊர்கட்கு வேண்டுவன செய்கின்றன.

இந்திய சேவா சங்கத்தினர் (Servants of India Society) முக்கியமாக அரசியற்றுறையில் வேலை செய்வோரெனினும், சமூகத்தொண்டும் செய்து வருகின்றனர். பீகார், ஒரிஸா, சென்னை ஆகிய இம்மூன்று மாகாணங்களிலும்

சில இடங்களைத் தெரிந்தெடுத்து அவ்விடங்களில் கிராமச் சீர்திருத்த வேலை செய்து வருகின்றனர். சென்னை மாகாணத்தில் வேலை செய்யுமிடம் திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள மாயனூர்க் கிராமம். அங்கே செய்யப்படும் முக்கிய வேலை சமூகச் சீர்திருத்தமாகும்.

அங்கே 2-7-1934 முதற்கொண்டு ஒரு பாடசாலை நடைபெற்று வருகிறது. அதில் மற்றப் பள்ளிக்கூடங்களிற் போலல்லாமல், வாழ்க்கைக்குத் தினந்தோறும் பயன்படக்கூடிய கல்வியே போதிக்கப்படுகிறது. அங்கே பொதுக் கல்வியுடன் சிறு கைத்தொழில்கள், பயிர்த்தொழில் முதலியவை போதிக்கப்படுகின்றன. பக்கத்திலுள்ள ஊர்களையும் திருத்துவதற்காகச் "சமூகப் பாடசாலை"யாக, (Community school) இப்பாடசாலை விளங்குகிறது. இப்பாடசாலையின் ஆதரவில் "மாணவர் கிராம சேவைச் சங்கம்" ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அச்சங்க அங்கத்தினர் சுற்றுப்பக்கத்திலுள்ள பல ஊர்கட்குச் சென்று, கிராமச் சீர்திருத்தப் பணியை ஆற்றி வருகின்றனர். மாயனூரிலும், பக்கத்து ஊர்களிலும் 50 வாலிபர் சங்கங்கள் தோன்றி நடைபெறுகின்றன. இங்கே செய்யும் முக்கிய வேலை, சமூகத்திலுள்ள குறைபாடுகளை எடுத்துக்

காட்டி அவைகளை நீக்குவதே. கூட்டுறவு இயக்கமும் இங்கே ஓங்கி வருகிறது. விவசாயத் தொழிலாளிகளின் சங்கம் முதலிய ஏற்பாடு களால் கிராம மக்களிடையே அரசியல் உணர்ச்சி உண்டாக்கப்படுகிறது.

இச்சங்கத்தின் ஆதரவில் கள்ளிக் கோட்டையிலும் மங்களூரிலும் இரண்டு மத்திய தரப் பாடசாலைகளும், கைத்தொழிற் பாட சாலைகளும் நடைபெறுகின்றன. மலபார் ஜில்லாவில் தானூர், கோபால புரம் என்னு மிடங்களிலும் கைத்தொழிற் பயிற்சியும், கல் விப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன.

மைசூர் அரசாங்கத்தினர் 1927-ஆம் வருஷ முதல் கிராமச் சீரமைப்பு வேலை செய்து வரு கின்றனர். எல்லா ஊர்களிலும் பஞ்சாயத்து கள் அமைக்கப்படுகின்றன. இப்பஞ்சாயத்து கள் தாங்களே வரிவசூலித்துச் சுகாதார, நீர்ப் பாசன, கல்வி வசதிகளைத் தாங்களே செய்து கொள்ளுகின்றன. ஒவ்வொரு வாரத்திலும் ஒரு நாள் கட்டாயமாக வேலை செய்ய வேண்டும் என்ற ஓர் ஏற்பாட்டால், குளம் வெட்டல், கிணறு தோண்டல், பாடசாலைகளை அமைத் தல், சாலைகள் அமைத்தல் முதலிய வேலைகள் எளிதில் நடைபெறுகின்றன.

இவ்வரசாங்கத்திலுள்ள பஞ்சாயத்துகள் மிக நன்றாக வேலை செய்து வருகின்றன: பல மின்சார விளக்குகளைத் தெருக்களுக்கு இட்டுள்ளன; சில கிராமங்களில் பயிர்த் தொழில் முதலியவைகட்கும் மின்சார சக்தி உபயோகிக்கப் படுகிறது. சில நல்ல வேலை செய்த இடங்களையும், முக்கிய இடங்களையும் கிராமச் "சீரமைப்புத் தலைமைத் தலங்களாக" எடுத்துக்கொண்டு அவ்வேலையைக் கவனிப்பதும், எல்லா அரசாங்க இலாக்காக்களும் தாம் செய்ய வேண்டிய வேலைகளைச் செய்யும்படி தூண்டுவதும், அந்தந்த ஜில்லாவிலுள்ள டிப்டி கமிஷனருடைய பொறுப்பாக அமைக்கப்பட்டிருக்கிறது.

இம்மாதிரியாக, பல பல இடங்களிலும் பல பல துறையில் வேலை செய்யப்படுகிறது. "கர்கயானில்" மக்களுடைய மனப்பாங்கை மாற்றும் வேலை நடை பெறுகிறது; மார்த்தாண்டத்தில் கைத்தொழில் அபிவிருத்தி செய்யப்படுகிறது; ஆலமூருவில் கூட்டுறவு இயக்கம் வளர்க்கப்படுகிறது; மாயனூரில் சமூகச் சீர்திருத்த வேலை நடை பெறுகிறது; மைசூர் அரசாங்கத்தில் பஞ்சாயத்துகள் நிறுவப் பெற்று அரிய வேலைகள் செய்கின்றன. இந்தப் பலவித முயற்சிகளும் வெற்றி பெற்றுள்ளன. இம்முயற்சிகளின் பலன்கள் மிகவும் போற்

றத்தக்கவைகள். இம்முயற்சிகள் "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?" என்பதற்கு எடுத்துக்காட்டுகளாய் இருக்கின்றன. எனவே. இந்தியாவில் பெருமுயற்சி செய்தால், நாட்டை மிகச் சீர் பெறும்படி செய்யலாம்.

"விடாது தனுவிற் செயுமுயற்சி
மேன்மேல் பொருளை மிகவளர்க்கும்;
கெடாது சுற்றம் நட்பினர்தம்
கிளையுந் தாங்கும்; யாவர்க்கும்
தடாத உபகா ரமும்புரியும்;
தடந்தா மரையா ளையுஞ்சேர்க்கும்;
படாத ஊழ்வந் திடுகாறும்
பயனே விளைக்கும்; பழியின்ரும்."

—விநாயக புராணம்

14. கிராம வேலைத் திட்டம்

"செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ(டு)
எய்த உணர்ந்து செயல்." —திருவள்ளுவர்

எந்தக் காரியத்தையும் நன்கு ஆலோசித்து, அதனைச் செய்ய ஒரு திட்டத்தை ஏற்படுத்திக்கொண்டு, அந்த வேலை செய்யத் தக்காரை அந்த வேலையைச் செய்யும்படி விட்டாற்றான் எந்தக் காரியமும் செவ்வையாக நடக்கும்; சீக்கிரமும் நடக்கும். ஒரு திட்டம் இன்றி வேலை செய்தால், எக்காரியமும் நன்கு நடைபெறாது; பயனும் கிட்டாது.

கிராமச் சீர்திருத்தத்திற்கும் ஓர் ஐந்து வருஷத் திட்டம், அல்லது பத்து வருஷத் திட்டம் போட்டுக்கொண்டு வேலை செய்தால், அவ்வேலை எளிதில் முடிவு பெறும். அதற்காக ஒரு வேலைத்திட்டம் தருவோம்:

இப்போது கவர்ன்மெண்டின் பல இலாக்காக்களும் பல துறைகளில் வேலை செய்கின்றன. தனிப்பட்ட மனிதர்களும் சங்கங்களும் கிராம முன்னேற்றத்துக்கென வேலை செய்கின்றார்கள். எல்லாரும் ஒன்று சேர்ந்து வேலை செய்தால், எவ்வளவோ நன்மை உண்டாகும்.

இந்த உண்மையை அறிந்து, பம்பாய் மாகாணத்தில் உதவிக் கூட்டறவுச் சங்கப் பதிப்பாளர் (Asst. Registrar of Co-operative Societies), உதவி விவசாய டைரக்டர், உத்தியோகப் பற்றற்ற சிலர் அடங்கிய கழகங்களைப் பல பகுதிகளிலும் நிறுவி இருக்கிறார்கள். ஒவ்வோர் இடத்திலும் வேலை செய்வதற்குத் தனி விவசாய ஆர்கனைசர்கள் (organisers) ஏற்படுத்தப் பட்டிருக்கிறார்கள்.

சென்னை மாகாணத்திலே சமீபத்திலே மாகாணப் பொருளாதாரக் கழகமும், ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு ஜில்லாப் பொருளாதாரக் கழகமும் நிறுவப்பட்டு வேலை செய்யத் தொடங்கியுள்ளன. இக்கழகங்கள் பொருளாதாரத்தில் எல்லாத் துறைகளிலும் வேலை செய்ய வேண்டுபவை. இக்கழகங்கள் கிராமச் சீர்திருத்தத்தில் மிகவும் வேலை செய்தால், நாட்டிற்குப் பெரும்பயன் விளையும்.

இங்கிலாந்து, பிரான்சு, இட்டலி, ஜெர்மனி, பெல்ஜியம் முதலிய பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள பொருளாதாரக் கழகங்கள் அந்நாடுகளில் பெருஞ்சேவை செய்கின்றன. அவை பெரும்பாலும் அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறும் கழகங்களே. உதாரணமாகப் பிரான்சுக் கழகத்தின் முக்கிய வேலை

நாட்டின் நிலையை நன்கு அப்போதைக்கப் போது ஆராய்ச்சி செய்து, எந்த எந்தக் காரியங்கள் நாட்டிற்குச் செய்ய வேண்டும் என்பதை அரசினர்க்கு எடுத்துக்காட்டி அவர்களை அக்காரியங்கள் செய்யுமாறு தூண்டலேயாம். பொதுவாக எல்லாச் சங்கங்களும், மக்களையும் அரசு நடத்துவோரையும் ஒன்று கூட்டி, நாட்டின் வருமானத்தையும் பொருளையும் விருத்தி செய்யவே முயலுகின்றன.

இந்தியா முழுதுக்கும் மத்திய பொருளாதாரக் கழகம் ஒன்று இருக்கவேண்டும். அதில் எல்லாப் பொருளாதார நிபுணர்களும், பல துறையிலும் வல்லவர்களும் அங்கத்தினராக இருத்தல் வேண்டும். அவர்களின் ஆலோசனைப்படி சர்க்காரின் மத்திய அபிவிருத்தி இலாக்கா வேலை செய்ய வேண்டும். அபிவிருத்தி மந்திரியின் கண்காணிப்பில் அந்த இலாக்கா வேலை செய்ய வேண்டும்.

மாகாணப் பொருளாதாரக் கழகங்கள் மாகாண அபிவிருத்தி இலாக்காவுக்கு உதவி புரிந்து, அந்த இலாக்காவைப் பெரு வேலை செய்யும்படி ஊக்க வேண்டும்.

இதல்லாமல் ஒவ்வொரு பட்டணத்திலும், பல கிராமத் தலைமைத் தலங்களிலும் சிறு பொருளாதாரக் கழகங்களை அமைத்தல் வேண்

டும். அகில இந்திய பொருளாதாரக் கழக மும், மாகாணப் பொருளாதாரக் கழகமும் ஆலோசனை மாத்திரம் தர வேண்டுபவை. இந் தக் கிராமத் தலைமைச் சங்கங்களோ, அந் தந்தப் பகுதியில் ஆகவேண்டிய காரியங்கள் அத்தனையையும் செய்து முடிக்கவேண்டுபவை. இப்படிப்பட்ட கழகங்களை ஐந்தாறு கிராமங் கட்கு ஒன்றாகக்கூட ஏற்படுத்தலாம். இக் கழகங்கள் அந்தக் குறித்த இடத்தில் வேலை செய்யும் சர்க்கார் இலாக்காக்களோடு கலந்து கொண்டும், தாமே திட்டம் போட்டுக்கொண் டும் வேலை செய்ய வேண்டும்.

இந்தப் பொருளாதாரக் கழகங்கள் நன்கு வேலை செய்ய எல்லாப் பொது ஊழிய ஸ்தாப னங்களும் உதவ வேண்டும். பொருளாதார மகாநாடுகள், வர்த்தகர் சங்கங்கள் (Chamber of Commerce) தொழில் வியாபாரச்சங்கங்கள், கமிட்டிகள், நகராண்மைக் கழகங்கள், ஜில்லா போர்டுகள் முதலிய எல்லா நிலையங்களும் பொருளாதாரக் கழகங்கட்கு வேலை முறையில் ஆலோசனை தர வேண்டும்.

பொதுவாக இந்தத் திட்டத்தின் கருத்து, எந்தப்பொருளாதார முயற்சியிலும் ஜனங்களை யும் உடன் கலந்து, அவர்களுடைய உற்சாகத் தையும் உழைப்பையும் பெருவிட்டால் பயன்

உறுதியாகக் கிடைக்காதென்பதே. எல்லாத் திட்டங்களையும் நாட்டிலுள்ள வியாபாரப் பிரதிநிதிகளைக் கலந்தே ஏற்படுத்தல் நன்று. வாணிபத் துறையில் மேம்பட்டோரும், அரசியல் தலைவர்களும், சர்வ கலாசாலைப் பேராசிரியர்களும் நல்ல விருத்தி முறைகளைச் சனங்களுக்கு விளங்க எடுத்துக்காட்டி நாட்டிலனை வரும் தேச முன்னேற்றத்துக்காக உழைக்குமாறு தூண்ட வேண்டும்.

விவசாயிகளின் நன்மைக்கெனச் செய்ய வேண்டிய வேலைகள் பல. அவற்றிற் சிலவற்றையேனும் இக்கழகங்கள் செய்ய முயலல் வேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் மாகாணத்திலும் விவசாய வரும்படி, சிறு கைத்தொழில் வரும்படி ஆகிய இவைகள் எவ்வளவென்பது கணக்கிடப்பட வேண்டும். குறைந்த வாழ்க்கை நிலையில் எத்துணைப்பொருள் வேண்டுமென்னும் கணக்கோடு அதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

நிலங்களை மிக மிகச் சிறிய துண்டுகளாகப் பிரிக்காதவாறு சட்டம் இயற்றப்பட வேண்டும். எங்கெங்கு நிலங்களை ஒன்று சேர்க்கக்கூடுமோ, அங்கங்கு அவ்வாறு செய்தல் வேண்டும்.

விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களில் நூற்றுக்கு 20 பேராவது மற்றத் துறைகளில் புக வசதி அளிக்க வேண்டும். ரெவினியூ அல்லது விவசாய இலாக்காவின் ஆதரவில் ஒரு சிலரை நியமித்து, குடிசைக் கைத்தொழில்களில் மக்கள் ஈடுபடும்படி செய்து, அத்தொழில்களை எப்படிச் செய்வதெனப் பிரத்தியக்ஷத்தில் செய்து காட்ட வேண்டும்.

கிராம விவசாயிகளின் கடன் சுமையை நீக்க முயலுவது இக்கழகங்களின் முக்கிய வேலையாக இருத்தல் வேண்டும். கடன் தீர்ப்புச் சட்டங்கள் உள்ள மாகாணங்களில் இக்கழகங்கள் சமரசமூலமாகக் கடன் கொண்டோர் கொடுத்தோர் இருவரையும் ஒன்று கூட்டிக் கடனை ஒழிக்க முயலல் வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ஆங்காங்கு நல்ல விதை, எரு முதலியவைகளை வாங்கி உபயோகிக்க ஊக்கம் ஊட்ட வேண்டும்.

புது முறையில் விவசாயம் செய்வதை நேரே செய்துகாட்டி மக்களை அம்முறைகளைக் கையாளச் செய்ய வேண்டும். புதுக் கருவிகளையும் இயந்திரங்களையும் உபயோகிக்குமாறு விவசாயிகளைத் தூண்ட வேண்டும்.

மாகாணப் பொருளாதாரக் கழகங்கள் அப்போதைக்கப்போது விவசாயிகட்குப் பய

னுள்ள விஷயங்களை ரேடியோ வாயிலாகவும், துண்டுப் பிரசுரம் முதலியவைகள் மூலமாகவும் பிரசாரம் செய்து அறிவிக்க வேண்டும். ஆங்காங்கு விவசாயிகள் அறிந்துகொள்ள வேண்டிய பல விஷயங்களை உணர்த்தும் கண் காட்சிகளை ஏற்பாடு செய்யவேண்டும். உற்சவ காலங்களில் பலர் கூடுமிடங்களில் இம்மாதிரியான கண் காட்சிகளை ஏற்படுத்தின், பயன் மிக விளையும்.

ஜில்லாக் கழகங்கள், பாட்டுகள், நாடகங்கள், கதைகள் மூலமாகப் புது அறிவை மக்களிடையே பரப்பவேண்டும். கிராம வாசிகள் அறிய வேண்டிய பல விஷயங்களடங்கிய ஒரு வாரப் பத்திரிகையை நடத்துவது நல்லது.

இந்த எல்லா வேலையையும் செய்வதற்குப் பல பிரசாரகர்களையும், சில பெண் தொண்டர்களையும் ஏற்பாடு செய்யவேண்டும். அப்பெண் தொண்டர்கள், பெண்கட்குப் பல விஷயங்களைப் போதிக்க வேண்டும்.

மேலும், ஜில்லா போர்டுகளும், பஞ்சாயத்துப் போர்டுகளும் கிராம அபிவிருத்திக்கு எத்தனையோ காரியங்கள் செய்யக்கூடும். அந்த ஸ்தாபனங்கள் மேற்கூறிய கழகங்களோடு கூடி வேலை செய்தால், நாடு கூடிய சீக்கிரம் முன்னுக்கு வந்துவிடும்.

எல்லாவற்றிற்கும் முயற்சி அவசியம் வேண்டும். பயன் கருதாது வேலை செய்யவும் அநேகர் முன்வர வேண்டும். அப்போது தான் நாடு முன்னேற்றமடையும்.

"வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
ஆராய்வான் செய்க வினை." —திருவள்ளுவர்

15. அரசின் கடமை

"நெல்லும் உயிரன்றே ; நீரும் உயிரன்றே ;
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் ;
அதனால்,
'யான்உயிர்' என்ப(து) அறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே."

—புறநானூறு

அரசினரின் முக்கியக் கடமை குடிகள் க்ஷேமமாக வாழ்வதற்கான காரியங்கள் செய்வதே. மக்கள் நன்மைக்கென இல்லாத அரசாங்கம் அரசாங்கமாகாது. ஜனங்கட்குச் சுய ஆட்சி இருந்தால், எத்தனையோ காரியங்களைச் சுலபத்தில் செய்துகொள்ளலாம். அது நம் இந்தியருக்கு இல்லாதது ஒரு பெரிய குறைபாடு. எனினும், பிரிட்டிஷ் அரசாங்கம் பல காரியங்களைச் செய்தால் இந்தியரின் நன்றிக்கு என்றும் பாத்திரமாகும்.

இந்திய நாட்டிலே அரசாங்கமே பல நன்மை தரும் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். இந்தியா மிக்க ஏழை நாடாதலால், மக்கள் தாங்களாகவே பல காரியங்கள் செய்துகொள்ள முடியாதவர்களாய் இருக்கின்றார்கள். எனவே,

அக்காரியங்களையெல்லாம் செய்து முடித்தல் அரசினர் கடமையாகும்.

கிராம விருத்தியில் முதலாவதாக கவனிக்கப்பட வேண்டுவது குடி நீர் வசதி. மக்களுக்கு நல்ல உண்ணீர் கிடையாவிடில், பல வியாதிகள் உண்டாதல் திண்ணம். இந்த விஷயத்தில் சர்க்கார் மிகவும் சிரத்தை எடுத்து அநேக கிணறுகளையும், குழாய்க் கிணறுகளையும் (Tube-wells) அவசியம் எடுத்தல் வேண்டும். இது ஒன்றுமே கிராம வாசிகளின் ஒரு பெரிய கஷ்டத்தை நிவர்த்திக்கும்.

தற்சமயம் பல கிராமங்கள், மற்றப் பக்கத்து ஊர்கட்குப் போக்கு வரவு சாதனங்கள் அறவே பெறாதனவாய் இருக்கின்றன. பல கஷ்டங்கள் அதனால் விளைகின்றன. மக்கள் போக்கு வரவுக்கு இடையூறு உண்டாகிறது. விளை பொருள் முதலியவைகளை முக்கிய இடங்கட்குக் கொண்டுபோய் விற்பது முடியாத காரியமாகிறது. கிராமங்கள் உலகத்தோடு தொடர்பற்றனவாக இருக்க வேண்டி இருக்கிறது. எனவே, சாலைகள் பலவற்றைப் அமைத்து சௌகரியம் உண்டாக்கல் மிக அவசியம்.

தந்தி தபால் வசதியும் மிகக் குறைவாய் இருக்கிறது. அநேக கிராமங்களில் ஒரு தபால்

கார்டும் கிடைப்பதரிது. நான்கு ஐந்து நாட்கட்கு ஒரு தரம் தபாற்காரன் அநேக ஊர்கட்குச் செல்லுகிறுன். 1931-32-ஆம் வருஷத்தில் இந்தியாவில் 23,983 தபால் ஆபீஸ்கள் இருந்தன. அத்தபாற்சாலைகள் மூலமாகச் சென்ற தபால்கள், கார்டுகள், மணியார்டர்களின் எண் 1,014,592,000. சமாசாரப் பத்திரிகைகள் 76,498,000; பார்சல்கள் 14,110,000; சிறு சிப்பங்கள் 107,313,000. ஆக மொத்தம் 1,212,513,000. மொத்த சனத் தொகையில் ஆள் ஒன்றுக்குச் சராசரி 3·4 உருப்படி தபால் ஆபீஸ்களின் மூலம் போய்வந்துள்ளன. இதே மாதிரியான கணக்கெடுத்தால், ஓர் ஆசாமிக்கு அமெரிக்காவில் (U. S. A.) 216; இங்கிலாந்தில் 144; ஜப்பானில் 87 உருப்படிகளாம்.

அதே வருஷத்தில் 18·1 லக்ஷம் தந்தி சமாசாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதாவது ஒவ்வோர் 1000 மக்களுக்கு 51 சமாசாரம் வீதம் தந்திகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இங்கிலாந்திலோ, 1000 நபர்கட்கு 1129; ஜப்பானில் 941; அமெரிக்காவில் 1951; கனடாவில் 2145.

டெலிபோன் (Telephone) இணைப்புகள் 55,850 இருக்கின்றன. அதாவது 10,000 பேருக்கு ஒன்றரை டெலிபோன் இருக்கின்

றன. ஜப்பானிலோ 10,000 பேருக்கு 110; ஆஸ்திரேலியாவில் 830; அமெரிக்காவில் 1634; இங்லாந்தில் 446; கனடாவில் 2145.

மேற்கண்ட எண்கள் மூலமாக நம் நாட்டில் கடிதப் போக்கு வரவு முதலிய சாதனங்கள் எவ்வளவு குறைவாய் இருக்கின்றன என்பதை அறியலாம். இது ஒன்றே நம் ஏழ்மையின் தாழ்வைக் காட்டக்கூடியது. எனவே, இச்சாதனங்களைப் பெருக்க வேண்டுமென்பதை வற்புறுத்திக் கூற வேண்டுவதில்லை.

அரசினர் தம் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டுவது கல்வி விருத்திக்காகவே. கல்வி அறிவு பரவுமாயின், நம் நாட்டுக் கஷ்டங்கள் பல எளிதில் நீங்கிவிடும். மிக விரைந்து இந்தத் துறையில் வேலை செய்வது அவசியம். 1931-ஆம் ஆண்டில் மொத்த ஜனத் தொகை 35 கோடியே 28 லட்சம். அதில் படித்த ஆடவர் எண் 23,969,751; படித்த பெண்டிர் எண் 4,169,105. ஆகமொத்தம் 28,138,856. அதாவது நூற்றுக்கு எண்மர் (8 பேர்) படித்தவர். பிரிட்டிஷ் இந்தியாவில் 10 வயதுக்கு மேற்பட்ட மக்களின் எண்ணுக்குக் கணக்குப் பார்த்தால், 100 க்கு 11 பேர் படித்தவர். இதே கணக்கின்படி மற்றை நாடுகளிற் பார்த்தால் இங்கிலாந்தில் 92·5; பிரான்ஸில் 94·5; ஜெர்

மனி 99·7 ; அமெரிக்காவில் 95·7 ; ஜப்பானில் 96; கனடாவில் 94·9; ஆஸ்திரேலியாவில்98·3. எனவே, இந்திய மக்களில் பன்னிரண்டில் ஒருபங்கினரே கையெழுத்திடத் தெரிந்தவர்.

1930 31-ல் மொத்தப் பள்ளிக் கூடங்கள் 262,068 ; பிள்ளைகள் 12,689,086. அதாவது மொத்த ஜனத்தொகையில் 1036 பேருக்கு ஒரு பள்ளிக்கூடம் வீதம் கணக்காகிறது. ஆரம்பப் பள்ளிக்கூடங்களை மாத்திரம் கணக்கிட்டால் மொத்தப் பள்ளிக்கூடங்கள் 204,384. படிப்போர் 9,362,748. அதாவது மொத்த ஜனத் தொகையில் 1329 பேருக்கு ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது.

பிரிட்டிஷ் இந்தியாவில் 1931ல் கல்விச் செலவு 28·32 கோடிகள். அதன்படியும் பள்ளிக்கூடத்திற்குச் செல்பவர் கணக்கின் படியும் பார்த்தால், ஒரு பையனுக்கு 22·3 ரூபாய் ஆகிறது ; மொத்த ஜனத்தொகைப்படி கணக்குப்பார்த்தால், ஆள் ஒன்றுக்கு ஒரு ரூபாயே படிப்புக்கெனச் செலவிடப்படுகிறது. பள்ளிக்கூடத்திற்குச் செல்பவர் எண்ணிக்கையின்படி பார்த்தால், ஆள் ஒன்றுக்கு ஜப்பானில் 58 ரூபாயும், இங்கிலாந்தில் 172 ரூபாயும், கனடாவில் 199 ரூபாயும், அமெரிக்காவில் 275 ரூபாயும் செலவிடப்படுகின்றன. மொத்த

ஜனத்தொகையின்படி கணக்கிட்டுப் பார்த்தால், இந்தியாவில் ஆள் ஒன்றுக்கு ஒரு ரூபாயும், ஜப்பானில் 11 ரூபாயும், இங்கிலாந்தில் 32·4 ரூபாயும், கனடாவில் 48 ரூபாயும், அமெரிக்காவில் 65 ரூபாயும் செலவிடப்படுகின்றன. அமெரிக்காவில் ஆள் ஒன்றுக்குப் படிப்புக்கெனச் செலவிடுவது இந்தியாவில் ஒவ்வோர் ஆசாமியினுடைய முழு வருமானத்துக்குச் சமமாக இருக்கிறது.*

எனவே, கல்வியறிவு இந்தியாவில் எவ்வளவு குறைவாய் இருக்கிறதென்பதும், கல்விச்சாலைகள் எத்துணை மிகக்குறைவாய் இருக்கின்றன என்பதும், கல்விக்காக எவ்வளவு குறைவான செலவு செய்யப்படுகின்றதென்பதும் நன்கு விளங்கும். ஆகவே, அரசாங்கம் கல்வி அறிவு வளர்ச்சிக்கு எவ்வளவு தீவிரமாக வேலை செய்ய வேண்டுமென்பதைக் கூறாமலே அறியலாகும்.

கிராமங்களில் பல கிராமப்பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி அவைகளில் பிள்ளைகட்கு விவசாய முறைகள் முதலியவைகளைக் கற்பிக்க வேண்டும். அரசினர் கிராம வாசிகட்கு உபயோகப்படக் கூடிய அநேக நூல்கள், மொழி

---

* இந் நூலில் கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களிற் பல சர். விஸ்வேஸ்வரையாவின் நூலில் கண்டவை.

பெயர்ப்புகள் வெளிவர உதவ வேண்டும். புத்தக நிலையங்கள் (libraries) பல ஏற்படச் சாதனங்கள் அளிக்க வேண்டும். வாலிபர் கல்வி (Adult education) பரவுவதற்கான முயற்சிகள் செய்ய வேண்டும். கல்வியறிவு தரத்தக்க பேசும் படங்கள் (talkies) தயாரிக்கப் பொருளுதவி செய்ய வேண்டும். ஒவ்வொரு கிராமமும் ஒரு ரேடியோ (Radio) வைப் பெற்று அதனின்பத்தை நுகர உதவி செய்தல் வேண்டும்.

விவசாய முறைகளை அரசினர் மிகவும் பரப்ப வேண்டும். புது உழவு முறைகளைக் கிராமவாசிகட்குக் கற்பிக்க வேண்டும். கிராமவாசிகட்கு அவர்கள் நிலங்களின் இயல்பு என்ன, என்ன பொருளை விளைவிக்கலாம், என்ன எரு இடலாம் என்பன போன்ற விஷயங்களை விளங்க அறிவிக்க அநேக உத்தியோகத்தினரை நியமிக்க வேண்டும். கவர்ன்மெண்டாரின் விவசாய இலாக்கா பெரிதும் வேலை செய்து வருகிறது. எனினும் அவர்கள் காணும் புது அறிவு முதலியவை இன்னும் விவசாயிகட்குக் கிட்டவில்லை. அந்த இலாக்காவிலுள்ள உத்தியோகத்தினரும் உழுதொழிலினரும் நெருங்கிய சம்பந்தமுடையோராய் இருத்தல் வேண்டும்.

அமெரிக்கவிவசாய இலாக்காவின் வேலையைப் பின்பற்றினால் நல்ல வேலை செய்ய முடியும். அந்த இலாக்காவில் அமெரிக்காவில் 20,000 தொண்டர் இருக்கின்றனர். அவர்களுடைய முக்கியவேலை விவசாயிகட்கு எல்லாவித விவசாய விஷயங்களையும் நன்கு எடுத்துப் போதித்தலேயாகும். எல்லிஸ் பார்க்கர் என்னும் ஓர் ஆங்கில ஆசிரியர் அமெரிக்க விவசாய இலாக்காவைப்பற்றிக் கூறுவதாவது: "விவசாய இலாக்கா ஒரு சர்வகலாசாலையைப் போல வேலை செய்கிறது. ஒவ்வொரு சர்வ கலாசாலையும், ஆராய்ச்சியும் போதனையுமாகிய இரு வித வேலை செய்கிறது; அமெரிக்க விவசாய போர்டு ஒரு பெரிய சர்வகலாசாலையைப் போல வேலை செய்கிறது; அநேக ஆயிர அறிவாளிகளைக்கொண்டு ஆராய்ச்சி செய்கிறது. அந்தந்த நாட்டிலும் (State) நிரம்பப் பணஞ் செலவு செய்து விவசாய ஆராய்ச்சி நடத்தப்படுகிறது. தனிப்பட்ட சங்கங்களும், தனிப்பட்ட மனிதர்களும் செய்யும் ஆராய்ச்சிகளையெல்லாம் ஒன்று சேர்த்து, ஒழுங்கு படுத்தி, அவைகள் எல்லாவற்றையும் பல புத்தகங்கள், துண்டுப் பிரசுரங்கள் முதலியவைகளின் மூலம் எல்லா விவசாயிகட்கும் கிட்டும்படி செய்கிறது. அவர்கள் தங்களுடைய

பிரசுரங்கள் மூலமாக மாத்திரம் அன்றி, பல உபந்நியாசங்களின் மூலமாயும் விவசாயப் புது அறிவைப் பரப்புகிறார்கள்.''

கவர்ன்மெண்டார் விவசாய சம்பந்தமான எல்லாப் புள்ளி விவரங்களையும் சேகரிக்க வேண்டும். இந்திய புள்ளி விவர நிலைமையை ஆராய்ச்சி செய்த டாக்டர் பௌலியும், திரு. ராபர்ட்சனும் இந்திய புள்ளி விவரங்கள் மிக ஏமாற்றம் தரத்தக்கவை எனக் கூறியுள்ளனர். அரசாங்க விவசாயக் கமிஷனரும் இக் குறையைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றனர். இக்குறை அவசியம் நிவர்த்திக்க வேண்டுவதொன்று.

ஒவ்வொரு நகரத்திலும், ஒவ்வொரு பட்டினத்திலும் சாஸ்வதமாக ஒரு விவசாயக் கண்காட்சிச்சாலை இருத்தல் வேண்டும். ஒவ்வொரு முக்கியக் கிராமத்திலும் ஒவ்வொன்று இருத்தல் அவசியம். இந்தக் கண் காட்சிச் சாலைகளிலே புது விவசாய முறைகளும் அறிவும் பொதிந்த புஸ்தகங்களும் துண்டுப் பிரசுரங்களும் இருத்தல் வேண்டும். விவசாயப் பொருள்களின் மாதிரிகளும் (Specimens), கருவிகளும், இயந்திரங்களும் அங்கு வைக்கப்படவேண்டும். பிரத்தியக்ஷமாகப் புது விவசாய முறைகளைச் செய்து காட்டியும், அநேக விவசாயக் கண்

காட்சிகளை உண்டாக்கியும் மக்களுக்கு அறிவு புகட்ட வேண்டும்.

கிராமக் கைத்தொழில் முறைகளை பிதரிசனமாகச் செய்து காட்டவேண்டும். ஜெர்மனி, அமெரிக்காத் தேசங்களிலுள்ளவை போலக் கற்கும் போதே சம்பாதிக்கும் முறைகளையும் கையாள முயலல் வேண்டும்.

மக்களிடையே கூட்டுறவு முறைகளை விருத்தி செய்வதற்காக நல்ல வேலை செய்யும் கிராமங்கட்குப் பரிசுகளையும், சிறு பண வெகுமதிகளையும் அளிக்க வேண்டும். கவர்ன்மெண்டு அதிகாரிகளின் உதவியால் பல கிராம வாசிகளிடையே கூட்டுறவு உண்டாகி முக்கியச் சீர்திருத்தங்களாகிய நீர்ப்பாசன விருத்தி, சாக்கடைச் சீர்திருத்தம், தண்ணீர் வசதி, காடுண்டாக்கல், கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி முதலிய மிகவேகமாக விருத்தி அடையக்கூடும்.

கிராமங்களிலே கூட்டுறவு இயக்கத்தை விருத்தி செய்தால், எத்தனையோ நன்மைகள் விளையும். அதற்குக் கவர்ன்மெண்டின் முயற்சி வேண்டும்.

நில அடைமானப் பாங்குகள் பல ஏற்பட அரசினர் மிக உதவ வேண்டும். நில அடைமானப் பாங்குகள் விவசாயிகளின் கடன் தொல்லையை மிகவும் குறைக்கக்கூடும்.

சட்ட மூலமாக நிலங்களைத் துண்டு துண்டாகப் பிரித்தலைத் தடுக்க வேண்டும். எங்கெங்கே கூடுமோ, அங்கங்கெல்லாம் நிலங்களை ஒன்று சேர்த்தல் வேண்டும்.

நமது நாட்டிலிருந்து வெளி நாட்டிற்கு எலும்பு எரு அனுப்பப்படாது தடுத்தல் வேண்டும். அஃதன்றி, எரு, விவசாயக் கருவிகள் இவைகட்கு இரயில் முதலிய ஸ்தாபனங்களில் குறைந்த எடுப்புக்கூலி (Freight charge) ஏற்பாடு செய்ய வேண்டும்.

கிராம வாசிகளின் சுகாதாரத்துக்கான காரியங்கள் மிகச் செய்தல் வேண்டும். இப்போதுள்ள வைத்திய உதவி மிகக் குறைவு. பல கிராம வாசிகட்கும் வைத்திய உதவி எளிதில் கிடைக்குமாறு செய்ய வேண்டும். மிருக வைத்திய சாலைகள் சில பெரிய பட்டினங்களிலேதான் இருக்கின்றன. அவை கிராம வாசிகட்குப் பயன் தருவதில்லை. மிருக ஆஸ்பத்திரிகள் பலவற்றை ஏற்படுத்தல் அவசியம். கட்டாய ஊசி குத்தல் (Inoculation) முதலிய முறைகளால் மிருகங்களிடையே வியாதிகள் பரவாது தடுக்க வேண்டும்.

நிலத்தை அடைமானமாகவைத்துக்கடன் வாங்குவதையும், கொடுத்த கடனுக்காக நிலத்தைப் பிடுங்கிக்கொள்ளும் கொடுமையை

யும் சட்ட மூலமாக அடியோடு ஒழித்துவிட வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஊர்ச்சபை ஒன்றை (பஞ்சாயத்து) ஏற்படுத்த வேண்டும் மத்திய சர்க்காரோ, மாகாண சர்க்காரோ கொடுக்கும் பண உதவியை அச்சபை பெற்று ஊருக்கு வேண்டுவனவற்றைச் செய்தால், ஓர் ஒழுங்கு முறை ஏற்படும். மக்களுக்கும் சுய ஆட்சி முறையில் பயிற்சி ஏற்படும்.

எனவே, அரசினர் தக்க ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் வேலை செய்தால், கிராமச் சீர் திருத்தம் எவ்வளவோ விரைவில் ஏற்பட்டு விடும்.

"இனிய சொல்லினன், ஈகையன், எண்ணினன்
வினையன், தூயன், விழுமியன், வென்றியன்,
நிலையும் நீதி நெறிகட வானெனில்,
அனைய மன்னவற் கழிவுமுண்டாங்கொலோ?"

—கம்பர்

"காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்;
நூறுசெறு வாயினும் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்;
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்;
மெல்லியன் கிழவ னாகி வைகலும்

வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான் ; உலகமுங் கெடுமே."

—புறநானூறு

16. முடிவுரை

கிராமச் சீர்திருத்த வேலை செவ்வையாக இன்னுஞ் சிறிது காலத்திற்குள் நடைபெறும் என்று எண்ணுவதற்கான நன்னிமித்தங்கள் இப்போது இந்தியாவில் தோன்றியுள்ளன. இப்போதுள்ள மேன்மை தங்கிய வைசிராய் அவர்கள் கிராமச் சீர்திருத்தத்தில் மிகவும் சிரத்தையாய் இருக்கிறார்கள். அரசாங்க அலுவல்களிலுள்ள அனைவரும் கிராமச் சீர்திருத்தத்தில் விசேஷமான அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது இவரது பேரவா. விவசாய முன்னேற்றத்திலும் இவருக்கு அதிக கருத்து உண்டு. இந்நாட்டிற்கு எருதுகள் அத்தியாவசியமானவை என்பதை உணர்ந்து அநேக பொலி காளைகளை அரசினரே வாங்கவும், அவைகளைப் பாதுகாக்கவும் இவர் ஏற்பாடு செய்திருக்கிறார். இன்னும் இவர் தம் காலத்தில் கிராமச் சீர்திருத்தத்துக்கான வேலைகள் பல வற்றைச் செய்து முடிப்பாரென எண்ணுதல் மிகையாகாது.

மாகாண அரசாங்கத்தினர் கிராமச் சீர் திருத்தத்திற்காக அரும்பாடு படுவதற்கான ஒரு விசேஷ சந்தர்ப்பம் இப்போது கிடைத் திருக்கிறது. நமது நாட்டுக் காங்கிரஸ் மகா

சபை பல ஆண்டுகளாகவே கிராமப் புனருத்தாரண வேலையில் ஈடுபட்டு வந்தது. காங்கிரசின் மாபெருந்தலைவராய் விளங்குகின்ற மகாத்துமா காந்தி அவர்கள், மேனாட்டு நாகரிக வழிகள் இந்நாட்டுக்குப் பொருத்தமற்றவை என எண்ணுபவர்கள்; மிகப் பெரிய ஆலைத் தொழில்களால் மக்களின் சீர் கேடே அதிகமாகிறதென நினைப்பவர்கள். சிறு கைத் தொழில்கள் விருத்தியடைவதன் மூலந்தான் இந்திய மக்கள் நலம் பெறலாமென்பது அடிகளின் கோட்பாடு. அதனாற்றான் அடிகள் கைராட்டையின் மான்மியத்தைத் திரும்பத் திரும்பக் கூறி வருகிறார்கள். கிராமச் சீரமைப் புக்கும், அநேக மக்களின் பசிப்பிணியைப் போக்குவதற்கும், அது சிறந்த கருவியாகும்.

மேலும், காங்கிரசானது கிராமக் கைத் தொழில்களை மிகவும் விருத்தி செய்ய வேண்டுமென மிக முனைந்து வேலை செய்கிறது. கிராமங்களில், உயரிய நிலையிலிருந்து, இப்போது அழிந்து கிடக்கும் பல கைத்தொழில்களை உயிர்ப்பிக்கக் காங்கிரஸ் அரும்பாடு படுகிறது. சில ஆண்டுகளேனும் அரசினர்கள் அக்கைத் தொழில்கட்குப் பாதுகாப்பு அளிப்பார்களாயின், அவை உயிர் பெற்று, எழுந்து நடக்கச் சக்தி பெற்று விளங்கும்.

காங்கிரசானது கல்வி முறையிலேயே மிகப் பெரியதொரு திருத்தம் செய்ய விரும்புவது ஒரு நல்ல அறிகுறியே. சமீபத்தில் வார்தாவில் காந்தி அடிகளின் ஆசீர்வாதத்தோடு, ஒரு கல்வி மகாநாடு கூடியது. அம்மகாநாட்டில் ஏழாவது வகுப்பு வரையில் எல்லாப் பிள்ளைகட்கும்—ஆண் பெண் அனைவருக்கும்—கட்டாயக் கல்வி போதிக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இது மிகப் போற்றத் தக்கதொரு சீர்திருத்தமாகும். குறைந்தது ஏழாண்டாவது ஒரு பிள்ளை படிக்காவிட்டால், கற்றவை மறந்துபோம்; கற்றதனாலாய பயன் கிட்டாது. அக்கல்வியையுங்கூடக் கட்டாயமாகப் போதிக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டிருத்தல் நன்று. நம் நாட்டில் மாத்திரமன்றி, மேல் நாடுகளிற்கூடக் கட்டாயக் கல்வித் திட்டத்தாலேதான் எல்லோரையும் படிக்கச் செய்ய முடிகிறது. நம் நாட்டிற்கு மற்றை நாடுகளைவிடக் கட்டாயக்கல்வி முறையே மிக அவசியம். ஏனெனில், பெற்றோர்கள் அறியாமையாலும், வறுமையாலும், தம் பிள்ளைகள் மிகச் சிறிய வேலை செய்து சொற்ப ஊதியம் பெறத்தக்க நிலைக்கு வந்ததும் அவர்கள் படிப்பைக் கெடுத்து, வேலைக்கு அனுப்பி விடுகிறார்கள். சிலர் குழந்தைகளைப் பள்ளிக்



படிப்புடன் தொழிலைப் பாங்குறக் கற்றல்

(வாலாஜாபாத் இந்துமத பாடசாலை மாணவர் பொத்தான் செய்தல்)

[பக்கம் 173]

கூட்டத்துக்கு அனுப்புவதே இல்லை; வீட்டில் அழுகிற குழந்தையை வைத்துக்கொள்ளல், ஆடு மாடு மேய்த்தல் முதலிய வேலைகட்குக் குழந்தைகளை விட்டுவிடுகின்றனர். எனவே, கட்டாயமாக ஏழாண்டுகட்குக் கல்வி போதித்த லென்பது மிகவும் விரும்பத்தக்கது.

அக்கல்வித் திட்டத்தில் மற்றொரு முக்கிய விஷயம் மிகப் பாராட்டற்பாலது. அதாவது, படிக்கும் போதே பிள்ளைகட்கு ஏதேனும் ஒரு கைத்தொழிலைக் கற்றுக்கொடுத்தல் என்பது. இந்தத் திட்டமானது கிராமச் சிறு கைத்தொழில்களைத் தட்டி எழுப்புவதற்கு உற்ற சாதனமாகும். இதனால், கிராம வாசிகளின் பொருளாதார நிலை மேம்படும்; நாட்டு நலன் விருத்தியடையும்; பசிப்பிணி பறந்தோடிப்போம். எனவே, வார்தாக் கல்வித் திட்டமானது கிராம முன்னேற்றத்திற்கு உற்ற துணையாய் இருத்தலால், அது மிகவும் விரும்பத்தக்கது.

காங்கிரசின் மற்றொரு சிறந்த திட்டம் மது விலக்காகும். இந்தியாவிலே மது விலக்கு வேண்டுமெனக் கூறாத அறிஞர் இல்லை. எல்லா மதங்களும் கட்குடியைக் கண்டிக்கின்றன. எல்லாச் சமூகங்களும் அதை வெறுக்கின்றன. எனினும், குடிப்பழக்கம்

சிலரிடையே பரவி நிற்கிறது. முக்கியமாக ஏழைத் தொழிலாளிகளும், ஹரிஜனங்களும் அக்கொடிய யமனுக்கு இரையாகின்றார்கள். மதுவை அறவே ஒழிக்க வேண்டுமென்பது காங்கிரசின் பேரவா. அத்திட்டத்தை எவ்வித இடையூறு நேரிடினும், அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்பது காங்கிரசின் பெரிய விருப்பமாய் இருக்கிறது. குடியை ஒழிக்க வேண்டுமென மறியல் முதலியன செய்து சிறைப்பட்டு, பல இன்னல்கட்கு ஆளாயினோர் பலர். அரசை நடத்தும் அதிகாரம் அப்போது காங்கிரஸ்காரர்களின் கையிலில்லாததால் அப்போது அம்முறைகளைக் கைக்கொள்ள வேண்டி இருந்தது. இப்போது ஏழு பெரிய மாகாணங்களின் ஆட்சி, காங்கிரஸ் கட்சியாரிடம் இருக்கிறது. மாகாத்துமா காந்தியும் இன்னும் சில ஆண்டுகட்குள் பூரண மது விலக்கு ஏற்பட வேண்டுமென வற்புறுத்துகிறார்கள். அவ்வேலையை நமது மாகாண அரசாங்கம் இப்போதே தொடங்கிவிட்டது. மது விலக்குத் திட்டத்தால் பண முட்டுப்பாடு அதிகமாகிவிடுமென அறிந்தும், அதை இலட்சியம் செய்யாது மது விலக்கை ஆரம்பித்துள்ள மாகாண ஆட்சியின் செய்கை பாராட்டற்பாலது. இம்முயற்சியில் அவர்கள் முழு வெற்றியும் பெறுவதற்குப்

பொது மக்களும் கடவுளும் அவர்களுக்கு உதவ வேண்டும்.

தீண்டாமையை ஒழித்தல் மிக அவசிய மென் இந்நூலில் வேறிடத்தில் கூறப்பட்டது. காங்கிரசும் தீண்டாமையை ஒழிக்க வேண்டு மெனத் தீவிரப் பிரசாரம் செய்கிறது. இம் முயற்சியில் காங்கிரஸ் ஈடுபட்டபெருமை காந்தி அடிகளுக்கே உரியது. 'தீண்டப்படாதோர் என ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் மக்கள் கல்வி அறிவொழுக்க மேம்பாட்டை அடையும் பொருட்டு ஏற்ற சாதனங்களையும் சௌகரியங் களையும் அளித்தல் அரசினர் கடமை; சமூகத் தின் கடமை' என எல்லார் மனத்திலும் படும் படி செய்த பெரியார் காந்தி அடிகளே. அவர்களுடைய முயற்சியால் கூடிய சீக்கிரம் தீண்டாமை ஒழிப்புச் சட்டம் ஒன்று உண் டாக்கப்படுமென எண்ணவேண்டி இருக்கிறது. தீண்டாமையை ஒழிக்க ஒரு சட்டத்தை ஆக் குவதற்குக் காங்கிரசார் இத்துணை தயங்குவது மிக வருந்தத்தக்கதாம். எத்தனையோ விஷ யங்களில் மிகத் தீவிரமாக வேலை செய்யும் அவர்கள், அத்துணை முயற்சியை இவ்விஷ யத்தில் காட்டாததன் காரணம் தாழ்த்தப்பட்ட சகோதரரின் துரதிர்ஷ்டமே என எண்ண வேண்டி இருக்கிறது.

காங்கிரஸ் ஆட்சியில் கிராமக் கைத் தொழில்கட்குப் பேராதரவு கிடைக்குமென்பது உறுதி. நமது மாகாணக் காங்கிரசின் முதல் வ்ரவு செலவுத் திட்டத்திலேயே கத்தருற்பத்திக்குப் பொருளுதவி செய்யத்தக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேலும் பல கைத்தொழில்களையும் காங்கிரஸ் மாகாண ஆட்சியினர் மிகவும் ஆதரிப்பாரென்று மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

சில நாட்கட்கு முன் நமது மாகாண மந்திரிகளில் ஒருவர் பேசிய போது, ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு கிணறேனும் இருக்க வேண்டுமெனவும், அப்படி இல்லாவிட்டால் அக்குறையைத் தீர்க்கக் கவர்ன்மெண்டார் ஒரு பெரிய திட்டம் போட்டிருக்கின்றார்களெனவும் கூறிய போது, அதைக்கேட்டு மகிழாதார் ஒருவரும் இல்லை. இப்பெரு வசதியை மக்கள் மிக ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

விவசாயிகளின் கடன் தொல்லையை ஒழிப்பதற்கும் பல மாகாண அரசினர்களும் முயல்கின்றார்கள். நமது மாகாண சர்க்காரும் இவ்விஷயத்தில் வேலைசெய்யத் தொடங்கி விட்டது. சில மாதங்கட்கு முன்பே கடன் வாய்தா ஒத்திவைப்புச் சட்டம் ஒன்று இயற்ற

ஆரம்பித்தார்கள். விவசாயிகளின் துரதிர்ஷ்ட வசமாக அச்சட்டத்தை அரசினர் உடனே சட்டசபையின் சம்மதம் பெற்று அமுலுக்குக் கொண்டு வாராது தாமதப்படுத்திவிட்டனர். அது கடனாளிகட்குப் பெரிதும் இன்னலை விளை வித்துவிட்டது. கடன் கொடுத்தோர் கடனைத் திருப்பப் பெறுவதற்குப் பெரிதும் முயலு கின்றனர்; கடனாளிகளை இமிசிக்கின்றனர். எனவே, மாகாண அரசினர் செய்கை, 'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி,' என்னும் பழமொழிக்கு எடுத்துக்காட்டாய் முடிந்தது.

ஆனால், சமீபத்தில் வெளியிட்ட அறிக் கைப்படி மாகாணச் சர்க்கார் விவசாயிகளின் கடன் தொந்தரவை நீக்க ஒரு சட்டத்தையே கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய் கிறது. அதன் முழு விவரமும் இன்னும் தெரியவில்லை. எனினும், அத்தகைய சட்டம் ஒன்று ஏற்பட்டால், விவசாயிகட்குப் பெரிய தொரு விடுதலை ஏற்படுமென்பது உறுதி. காங்கிரஸார் இக்காரியத்தைச் செய்து முடித் தால், நாட்டு மக்கள் அவர்கட்கு என்றும் நன்றியறிதலுடையவர்களாவார்கள்.

மற்றொரு செய்தி மிக்க மகிழ்ச்சியைத் தரு கிறது: இந்நூலில் கிராமங்கள் அழிவதற்குக்

காரணம், வரி வசூல் செய்யும் அதிகாரத்தை யும், நீதி வழங்கும் உரிமையையும் அவை இழந்ததே என்பது குறிப்பிடப்பட்டது. இம் மாகாண ஆட்சியினர் அவ்விரு உரிமைகளையும் கிராமங்கட்கு வழங்கப் போவதாகக் கூறுவது பெரியதொரு நற்செய்தி அல்லவா? பதினைந்து ஆண்டுகட்குமேல், அப்போதிருந்த ஆட்சிச் சட்ட வரம்புக்குள்ளேயே, மிக்க திறமையுடன் அரசு நடத்திய ஜஸ்டிஸ் கட்சியார், கிராம ஆட்சி முறையை உயிர்ப்பிக்க வேண்டிய வேலையைத் தொடங்கி வைத்தனர்; கிராமப் பஞ்சாயத்துகளை ஆங்காங்கு நிறுவினர்; கிராம வழக்குகளைக் கிராமப் பஞ்சாயத் தாரே தீர்த்து வைக்கும் உரிமையை வழங்கி னர். அப்போதிருந்த ஆட்சித் திட்டத்தில் அதற்குமேல் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனல், இப்போதோ, காங்கி ரஸார் தம் விருப்பப்படி வேண்டிய காரியங் களைச் செய்யச் சட்டம் இடந்தருகிறது. எனவே; காங்கிரஸ் மாகாண மந்திரி சபையார், கிராமங்களைப் பழையபடி உச்ச நிலையில் வைக்க அவர்கட்கு ஆற்றல் இருக்கிறது; மனமும் இருக்கிறது.

இப்போது பல ஊர்களில் கிராம முனி சீப்புகளின் மூலம் (பட்டா மணியம்) வரி வசூல்

செய்யப்படுகிறது. அவர்கட்குச் சிறு ஊதியமும் தரப்படுகிறது. அம்முறையை மாற்றி, கிராமப் பஞ்சாயத்தினர் மூலமாக வரி வசூல் செய்ய வேண்டுமென்ற திட்டமொன்று இப்போது அநேகருடைய கவனத்தை இழுக்கிறது. கிராமப் பஞ்சாயத்துகட்கும் இன்னும் அதிக அதிகாரம் கொடுக்கப்படும். எனவே, கிராமங்கள் முதுகெலும்பு பெற்று, நிமிர்ந்து, செம்மாந்து நடத்தல் உறுதி.

கிராம நில வரிப்பளுவை நீக்க வேண்டும் என்பதில் சிறிதும் அபிப்பிராய பேதமே இல்லை. அதன் அவசியத்தை எல்லோரும் அறிவர். இப்போதுள்ள நில வரி மிகவும் அதிகமாயிருப்பதால், விவசாயிகள் மிகவும் வருந்தி வாடுகின்றார்கள். கிராமச் சீர்திருத்த வேலைகளெல்லாம் இந்த ஒரு சீர்திருத்தம் செய்யாதொழியின், சிறப்புரு. காங்கிரசார்களும் வரியை மிகவும் குறைக்க வேண்டுமென விரும்புகிருர்கள்; வரியைச் சிறிது தள்ளிக் கொடுப்பதை இவ்வருஷ வேலையில் முக்கிய அமிசமாகக் கொண்டுள்ளார்கள். வருங்காலத்தில் வரி வசூலிக்கும் முறையையும், வரி நிர்ணய விதிகளையும் பெரிதும் மாற்றிச் சிறு நிலக் கிழவர்கட்கு வரியில்லாது செய்து, நில வருமானத்தின்மேல் வரி வசூலிப்பதென்னும்

புது முறையைப் புகுத்துவார்கள் என எண்ணக் கிடக்கிறது. அக்காரியத்தை அவர்கள் சீக்கிரம் செய்வார்களாக!

இதுகாறும் கூறியவாற்றால், கிராம முன்னேற்றத்துக்கான வேலைகள் பல சமீபகாலத்தில் மிகத் துரிதமாக நடைபெறுகின்றன என்பது தெள்ளிதிற் புலனாகும்: கிணறுகள் தோண்டப்படுகின்றன. கிராமக் கல்வி முறைகள் மாற்றப்படுகின்றன. குடி கொல்லி நசுக்கப்படுகிறது. தீண்டாமைப் பேய் ஓட்டப்படுகிறது. கிராமக் கைத்தொழில்கள் உயிர்ப்பிக்கப்படுகின்றன. கடன் சுமை நீக்கப்படுகிறது. கிராமப் பஞ்சாயத்துகள் உண்டாக்கப்படுகின்றன. கிராம ஆட்சி நிறுவப்படுகிறது.

எனவே, கூடிய சீக்கிரம் கிராமங்களெல்லாம் பொருள் நிலையிலும், சமூக நிலையிலும் மேம்பட்டு, இந்தியாவின் முன்னேற்றத்துக்கும், விடுதலைக்கும் பேருதவியாய் இருக்குமென்பது நிச்சயம். இந்திய நாடு எல்லாத் துறைகளிலும் மேம்பட்டு விளங்குவதாக!

“வாழிய செந்தமிழ்! வாழ்கநற் றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மைவந் தெய்துக! தீதெலாம் நலிக!”

—பாரதியார்

BOOKS CONSULTED

1. Sir M. Visvesvaraya—Planned Economy for India.
2. Sir M. Visvesvaraya—Reconstructing India.
3. Vera Anstey—Economic Development of Modern India.
4. Jathar & Beri—Indian Economics, 2 Vols.
5. Dr. P. J. Thomas—Rural indebtedness.
6. M. L. Darling—Rural Indebtedness in India.
7. M. L. Darling—Rusticus Loquiter.
8. Wolff—Rural Reconstruction.
9. Lord Linlithgow—The Indian Peasant.
10. Keatinge—Agricultural Progress in Western India.
11. Brayne—Socrates in an Indian Village.
12. Brayne—Socrates persists in India.
13. Calvert—Wealth and Welfare of the Punjab.
14. Haggard—Lessons from Rural Denmark.
15. R. C. Dutt—Economic History of India under the Early British Rule.
16. R. C. Dutt—India in the Victorian Age.